
கல்கி
KALKI 30.9.1979
75 காசு

ஒரு முழுமையான சுவை அனுபவத்தை எங்களைத் தவிர வேறு யாரால் தர இயலும்

ஆம், சுவையான ட்ரு பிஸ்கட்களைச் சுவைப்பதே தனி இன்பம், பல்சுவையும், மொரமொரப்பும் கொண்ட ட்ரு பிஸ்கட் வகைகளை அடிக்கடி சுவைக்கும் ஆசையை யாராலும் அடக்க முடியாது. முழுமையான இயற்கை உட்பொருளான தேன், குளுகோஸ், பால்-பவுடர், ஏலக்காய் சத்து, புத்தம் புதிய முற்றிய தேங்காய் முதலியவற்றைக் கொண்டு, நீண்ட பல பரிசோதனைக்குப்பின் தயாரிக்கப்படுவதால்தான் சீரிய பலவகைகளில் உங்களுக்கு கிடைக்கிறது ட்ரு பிஸ்கட்கள்.

தேன்-குளுகோஸ்

புஷ்டியான தித்திப்புச்சுவைதரும் தேன்-குளுகோஸ் பிஸ்கட் போதுமான அளவு தேனும் திரவ குளுகோசும் கலந்தது. ஒவ்வொரு பாக்கட்டும் 350 கலோரி சக்தியை அளிக்கிறது.

நீஸ்

சுவையான தேங்காய் பிஸ்கட் நீஸ். தேங்காயின் இயற்கைச் சுவையை உங்களுக்கு அளிப்பதற்கென்றே தாராளமாக புத்தம் புதிய முற்றிய தேங்காய் சேர்க்கப்படுகிறது.

ஏலக்காய் 'கஸ்டார்ட்' க்ரீம்

நினைத்தாலே நாவூறும், இயற்கையான ஏலக்காய் கலந்த, சுவையான கிரீம் பிஸ்கட், எந்த வகையில் பார்த்தாலும் சிறந்த கிரீம் பிஸ்கட் இதுதான்.

மாரி

காபி, டீ வேளைகளில் சேர்த்துச் சாப்பிடும் மிதமான தித்திப்புக் கொண்டது இது. எந்தவகை பானத்துடனும் சேர்த்துச் சாப்பிட மிகச் சிறந்தது.

மேலும் பல வகைகளும் உண்டு

மேற்சொன்ன எல்லாவகை பிஸ்கட்களுமே உயர்தர பாக்கிங் பொருட்களைக் கொண்டு பாக் செய்யப்படுகிறது.

பிஸ்கட்டின் மணம், மொரமொரப்பு, புத்தம் புதுத் தன்மை கெடாமல் இருக்கும் பொருட்டு மிக அதிக விலையுள்ள செலாப்பேன் (Cellophane) பேப்பரை பிஸ்கட்கள் மீது படும்படியாக பாக்கிங் செய்வதில் அதிக அளவு உபயோகப்படுத்தும் ஒரே தயாரிப்பாளர் நாங்கள்தான்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் முழுமையான சுவையூட்டும் ட்ரு பிஸ்கட் வகைகளைச் சுவைத்து அதன் சீரிய நல்ல தன்மைகளை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.



ட்ரு பிஸ்கட்கள்



நான்கு அகில உலக "மாண்டே" மெடல்களைப்பெற்றது.

AUROFOOD


தயாரிப்பாளர்:
இந்தியாவின் மிகநவீனமான மாவு மில்லும்,
பிஸ்கட் பாக்டரியும்
இணைந்ததொழிற்குழுமம்

Headstart/ATM/104

Kalki Shopping Page

HMV STEREO 3131 SUPERTRACK

Magnetic cartridge with diamond stylus.



Rs 3009/- Max. Rec. Ret. Price incl. Excise Duty. Taxes Extra.

HMV STEREO SYSTEMS

Available at:

VIVEK & CO
133, Royapettah High Road
Madras-600004 Ph: 76923
205, Purasawalkam High Road,
Madras-600007 Ph: 662462

HMV STEREO 1010




Rs 1443/- Max. Rec. Ret. Price incl. Excise Duty. Taxes extra.

HMV STEREO SYSTEMS

Available at:

LAKSHMI MUSICALS
(Air Conditioned)
61, Usman Road,
Madras-600017
Ph: 444629/442290



JOHNSON




MECO-MIX



MeenMix



Mixion



Sumeet


ரொக்கம் மற்றும் முதலில் 1/3 மீதி 10 மாதங்களில்


எதை வேண்டுமானாலும் தேர்ந்து எடுங்கள்

தாஸ்

நம்பிக்கையான பொருட்களின்
நம்பிக்கையான விற்பனையாளர்

W 109 III அவின்யு,
அண்ணா நகர்,
சென்னை–600 040.
போன்: 614063.








ALLWYN DYANORA televisions

ALLWYN GEM Godrej ZENITH

தேனாம்பேட்டையில் எங்களது புதிய ஷோரூம் மிக்ஸி, ப்ரிட்ஜ், டிவி ஆகியவைகளுக்காக பிரத்தியேகமாகத் திறக்கப்பட்டிருக்கிறது. அதிவிரைவான சேவை அளிக்கப்படும்.





பாரதி சின்னப்பயலா?

:: பாரதி விழாவின்போது அமரர்கள் ஏ. வி. எம்., எஸ். டி. சுந்தரம் ஆகியோர் படங்கள் திறந்து வைக்கப் பட்டன. ✕ தூரன் ✕ இந்திரா பார்த்தசாரதி

பாரதியார் சங்கம் நடத்திய பாரதி விழா இரண்டாம் நாளன்று பேசுகையில் திரு தூரன் ஓர் அதிர்ச்சி தரும் விஷயத்தைக் குறிப்பிட்டார். ''பாரதியாரைக்குறித்து ஆராய்ச்சி ஏதும் செய்யத் தேவையில்லை; அதற்கு அவர் லாயக்கற்றவர்'' என்று புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் தீர்மானித்துவிட்டதாம். இதுபற்றி மறு நாள் திரு தூரனைச் சந்தித்து முழு விவரம் கேட்டபோது:

பாரதியாரைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி நூல் எழுதும்படி புதுடில்லி 'ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தினர் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியைப் பணித்தார்கள். இதற்கு மாதம் ரூ. 3000 வரை தருவதாகக் கூறி, திரு பார்த்தசாரதியை இதற்கு ஒரு திட்டம் தரும்படி கேட்டார்கள்.

அவர் சமர்ப்பித்த திட்டத்தை ரொம்பப் பெரிய மனிதர் ஒருவர் மூலம் நான் பார்த்தேன். 'இது நல்ல திட்டம். இந்த எழுத்தாளர் சாகித்திய அகாதமி பரிசு பெற்றவர். இதை எழுதுவதற்கு எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தவர்' என்று தெரிவித்தேன்.

சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின் சென்னைக்கு வந்த இந்திரா பார்த்தசாரதியைத் தற்செயலாக ஒரு கூட்டத்தில் சந்தித்தேன். அப்போது அவருக்குப் பாரதியார் பற்றிய ஆய்வு நூல் எழுதுவதற்குக் கிடைத்த வாய்ப்புக்காக வாழ்த்துக் கூறினேன். ஆனால் அவர் சொன்னார், 'பாரதியார் ஆய்வு நடைபெறப் போவதில்லை. பாரதியார் பற்றி ஆய்வு நடத்தும் அளவுக்கு அந்தக் கவி அவ்வளவு தகுதி வாய்ந்தவர் அல்ல என்று யாரோ சொல்ல, இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது' என்று.

நாம் 'மகா கவி' என்று கொண்டாடிக் கொண்டிருக்கும் பாரதியாரைப்பற்றி 'ஆய்வு செய்வதற்குக்கூடத் தகுதி வாய்ந்தவர் அல்ல' என்று வடக்கே பல்கலைக் கழகத்தார் கருத்துக் கொண்டிருப்பது ரொம்பவும் வருத்தத் தக்கது. 'இவ்வளவுதானா பாரதியைப் பற்றி அவர்கள் அறிந்துள்ளார்கள்?' என்று விசனிக்கிறேன். ஒருவேளை இந்திரா பார்த்தசாரதிக்கு அந்தப் பணியைத் தர வேண்டாம், வேறு யாருக்காவது வசதி செய்து தரலாம் என்று நினைக்கிறார்களோ என்றால் அப்படியும் தோன்றவில்லை. இந்திரா பார்த்தசாரதி இதற்குத் தகுதியற்றவர் என்று கூறிவிடவும் முடியாது.

நம் தமிழகத்திலிருந்து செல்லும் நாடாளு மன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் பாரதியார் பெருமையை வட நாட்டினருக்குச் சரியானபடி எடுத்துச் சொல்லவில்லை என்பது நன்கு தெரிகிறது.

வரப்போகும் பாரதி நூற்றாண்டு விழாவுக்கு முன்பாவது மத்திய அரசும், வட மாநில அரசுகளும் அவர் பெருமையை உணரச் செய்ய வேண்டும். கவி தாகூரின் புகழை எவ்வாறு எல்லா மாநிலங்களிலும் பரவச் செய்தார்களோ, அது போலப் பாரதிக்கும் மத்திய அரசு செய்ய வேண்டும்.

பேட்டி: **''சிக்கி''**

டிக்கெட் பரிசோதகர்: பிளாட்பாரம் டிக்கெட்டை வைத்துக் கொண்டு சென்னைக்குப் போறேன் என்கிறீரே?

பயணி: ஏன் சார் அங்கே பிளாட்பாரம் கிடையாதா?

—பொன். நண்டமாணி



கடுகு பதில்கள்!

எம். சம்பத், வேலாயுதம் பாளையம்

கே. பாலசந்தரா? பாரதிராஜாவா?

ப. பாரதி சந்திரா? பால ராஜா?

கே. இன்றைய நாகரீக உலகத்தின் விலை மதிக்க முடியாத பொருளாக நீங்கள் எதைக் கூறிப் பிடுகிறீர்கள்?

ப. கற்பு. ஒரு வேடிக்கை பார்த்தீர்களா? விலை போகாத பொருளும் உலகில் அது வாகத்தான் இருக்கிறது!

க. முரளிதரன் கோயமுத்தூர்

கே. கோ எஜுகேஷன் முறையை கல்லூரியில் கட்டாயமாக்கினால் நன்மை அதிகமா தீமை அதிகமா?

ப. நன்மையாவது தீமையாவது? அடிப் படையே தவறு. ஆணும் பெண்ணும் சரி சமம் என்று ஏற்பட்ட பிறகு எந்தக் கல்லூரியும் இங்கே ஆண்களுக்கு மட்டும் இடம், பெண்களுக்கு மட்டுமே இடம் என்று எப்படிச் சொல்லிக் கொண்டிருக் கலாம்? சேர்ந்து படித்தால் கெட்டுப் போவார்கள் என்று நம்ப இடமில்லை. கெட்டுப் போகிறவர்கள் எப்படியும் கெடு வார்கள். மன உறுதி உள்ளவர்கள் எந்தச் சூழலிலும் திடமாக இருப்பார்கள். காதல் திருமணங்கள் அதிகரிக்கலாம்; வரதட்சி ணைக் கொடுமை குறையலாம். சினிமாவும் நாவல் இலக்கியமுமே தங்களால் சமுதாயம் சீர்கெடவில்லை என்று துணிந்து வாதாடும் போது பாடப் புத்தகங்களா பயப்படப் போகின்றன?

டி. ராஜேந்திரன், சென்னை

கே. திருமணம் என்பது அங்கீகரிக்கப்பட்ட விபசாரம் என்று பெர்னார்ட்ஷா கூறியிருக் கிறாரே....?

ப. அவர் அப்படிக் கூறியிருந்தால் பெர் னார்ட் ஷாவும் உளற முடியும் என்று நிரூ பித்திருக்கிறார்.

என். வேணுகோபால், செங்கோட்டை

கே. தேசாலன் கருதிப் பாடுபடும் அரசியல் தலைவர்களைக் கூறுவீர்களா?

ப. சமீபத்தில் நாடாளுமன்ற பிரதிநிதி களுக்கு உள்ள சலுகைகள் பற்றிப் படித்த பிறகு அவர்களுக்குத் தேசத்தைப் பற்றி நினைக்கக் கூட நேரம் இருக்குமா என்று தோன்றுகிறது. ● சுற்றுலா போவதற்குப் பயணப் படி. ● டில்லியில் பாராளுமன்றம் நடக்கும் போது நாளொன்றுக்கு ரூ. 51. ● சேர்ந்தாற் போல் நாடாளுமன்றம் 75 நாள் நடந்தால் இரண்டு விமான டிக்கட்டுகள்: அதற்கு மேல் நீடித்தால் நாலு விமான டிக்கட்டுகள் ● முதல் வகுப்பு ரயில் பாஸ், மனைவிக்கு மற்றொன்று. பணியாளுக்கு 2ம் வகுப்பு ரயில் பாஸ்: குறைந்த வாடகையில் புதுதில்லியில் வீடு (இதைப் பெரும்பாலோர் அதிக வாடகைக்கு விட்டு விடுகிறார்கள்.) ● தண்ணீர், மின்சாரம், காரியதரிசி ஆகியவற்றுக்காக ரூ. 500 (இதற்கு அதிகமானால் பில் காண்பித்துப் பெறலாம்) ● இரண்டு டெலிபோன்கள் (7500 இலவச லோகல் கால்கள்) ● அவருக்கும் குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதி ● இதைத் தவிர இவர்கள் கியூவில் நிற்காதிருக்க நாடாளு மன்றத்திலேயே இவர்களுக்காக ரயில்வே புக்கிங் ஆபீஸ், விமான புக்கிங் ஆபீஸ், இரண்டு போஸ்ட் ஆபீஸ்கள், ஸ்டேட் பாங்க் கிளை, டில்லி ரேஷன் இலாகாவின் கிளைக் காரியாலயம், வருமான வரி இலாகா கிளை, சூப்பர் மார்க்கெட்டின் கிளை இத்தியாதி இத்தியாதி இயங்குகின்றன. ● விமானங்கள், ரயில்களில் இடமில்லை என்று இவர்களுக்குக் கூற முடியாது. 'பிரியா ரிட்டி கோட்டா' என்று ஒதுக்கியுள்ளனர்!



ஆர். கணேசபெருமாள், கோவை

கே. அதிமுகவும் திமுகவும் இணைந்தால் இனிமையை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப. பாவம், பட்நாயக் என்று பரிதாபப் படுகிறேன்.

என். முகமது ஹனிபா, புதுக்கோட்டை


கே. நக்கல விஷயத்தில் சிறந்தவராக யாரைக் கருதுகிறீர்கள்? கன்பூசியஸ் அவர்களையா? எம். ஜி. ஆர். அவர்களையா?

ப. கன்ஃபியூஸ் பண்ணப் பார்க்கிறீர்களா? நடக்காது ஸார்!

நடேஷ்கன்று, கழுகுமலை

கே. ராஜாஜி உயிரோடு இருந்தால் இன்றைய நிலை பற்றி என்ன நினைத்திருப்பார்?

ப. நினைப்பதாவது? இந்நேரம் கோதாவில் இறங்கியிருப்பார்!



● பரிசு பெறும் கேள்வி எழுதியவர்: என். வேணுகோபால், 8, சேர்வைக்காரன் தெரு, செங்கோட்டை - 627 809

"சினிமாவில் வரும் நடனங்களை நாட்டியம் என்று எப்படி அழைக்க முடியும்? படத்தில் இவைகளை நான் ஆடும் போது வேண்டா வெறுப்பாகத்தான் ஆடுகிறேன்.

"என்னுடைய சிறந்த படங்களான சீதா அவுர் கீதா, லால் பத்தர், அந்தாஸ், மீரா ஆகியவைகளை வீடியோ டேப்புகளாக மாற்றி வைத்துக் கொள்ளப் போகிறேன். ஐம்பது வருடங்களுக்குப் பிறகு என்னுடைய பிள்ளைகளுக்கும், பேரப் பிள்ளைகளுக்கும் போட்டுக் காட்ட" என்று கூறுகிறார் ஹேமமாலினி.

●

அமோல் பலேக்கர் இவ்வாறு சொல்கிறார்: 'பதினாறு வயதினிலே' பார்த்தவுடன் அதன் இந்திப் படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்க முதலில் நான் மறுத்து விட்டேன். காரணம் தமிழில் மிகச் சிறப்பாக கமலஹாசன் செய்திருந்தார். 'இந்தியிலும் கமலே செய்யட்டும்' என்று கூறினேன். ஆனால் கமல் எனக்கு போன் செய்து 'வேறு யாராவது அந்தச் "சப்பாணி" வேடத்தை ஏற்றால் கெடுத்து விடுவார்கள். நீங்கள் தான் செய்ய வேண்டும்' என்று சொல்ல அவருக்காக ஒப்புக்கொண்டேன்.

'படத்தை ஆரம்பித்தால் நிறுத்தாமல் முடித்து விட வேண்டும். படப்பிடிப்பின் போது யாரும் என்னையும் கமலஹாசனையும் ஒப்பிட்டு எதுவுமே பேசக் கூடாது;' இவை நான் போட்ட நிபந்தனைகள்." பாரதிராஜாவுடன் வேலை செய்வது படிப்பது போல். அவரது கதாபாத்திரங்கள் எல்லாம் ஆழமானவை. அதனால்தான் அவரது படங்களில் கவிதை நயம் உள்ளது.

●

இயக்குனர் பாரதிராஜா அமோல்பலேக்கரைத் தமிழ்ப்படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்க வைக்க முயற்சிகள் செய்து வருகிறார். தமது சொந்த குரலிலேயே அமோல் பலேக்கர், தமிழ் பேசவும் முடிவு செய்துள்ளாராம்.

●

"எனக்கு முதன் முதலில் வந்த காதல் கடிதம் எது தெரியுமா? ஒரு ஜெர்மன் மாணவன் எழுதியது. நான் பள்ளியில் படிக்கும் போது எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பான். ஒரு நாள் எனக்கு அவன் ஒரு காதல் கடிதம் எழுதினான்: "இந்தியாவைக் காதலிக்கிறேன். இங்கு இருக்கும் தாகங்களைக்கூடக் காதலிக்கிறேன். உன்னைக் காதலிக்கிறேன். உன் கண்ணைக் காதலிக்கிறேன். உன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையுமே காதலிக்கிறேன்! எப்படி இருக்கிறது கடிதம்?" என்று கேட்கிறார் ஷர்மிளா டாகூர்.



※ 16 வயதினிலே இந்திப் படத்தில் அமோல் பலேக்கர், ஸ்ரீதேவி



※ கண்ணில் தெரியும் கதைகள் - சரத்பாபு, வடிவுக்கரசி

●

பாரதிராஜா அறிமுகப்படுத்திய கதாநாயகிகள் இருவர். ஒருவர் ரயில் ராதிகா. மற்றொருவர் புதிய வார்ப்புகள் ரத்தி. ரத்தியின் அம்மா பெயர் என்ன தெரியுமா? ராதிகா!

●

சினிமா மசாலா



✖ ரதி



✖ ரதியின் தாயார் ராதிகா

16 வயதினிலே படத்தை இந்தியில் எடுத்த போது அதில் நடிக்க நீங்கள் ஏன் ஒப்புக் கொள்ளவில்லை என்று கமலஹாசனைக் கேட்டதற்கு அவர் பதில்:

இந்தியில் நடிக்க முதலில் அம் மொழி நன்றாகத் தெரிந்திருக்கவேண்டும். அம்மொழி வன்மை என்னிடம் இல்லை. கிராமத்தில் இருக்கிற பையன் பேசுகிற மாதிரி அமைய வேண்டும். இன்னும் சொல்லப் போனால் தெலுங்கில் கூட நடிக்குமாறு கேட்டாங்க. மறுத்து விட்டேன். சப்பாணி பாத்திரத்தைப் பொறுத்த வரையில் கிராமத்தில் பேசுவது போன்ற அதே சாயல் இருந்ததால்தான் படம் வெற்றி அடைந்தது என்று நான் நினைக்கிறேன். கிராமத்து பாஷையின் உச்சரிப்பு முக்கியமான அம்சம். அதனால்தான் நான் சொன்னேன். 'அந்தந்த ஊரில் உள்ளவர்களே பெட்டராகப் பண்ணுவார்கள்' என்று. அமோல் என் நெருங்கிய நண்பர். அவர் அப்பாத்திரத்தை ஏற்றதில் எனக்கு மகிழ்ச்சி, 'சிவப்பு ரோஜா' இப்பொழுது இந்தியில் ராஜேஷ் கன்னா நடிக்கத் தயாராகிறது. எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஆனால் 16 வயதினிலே ஹிந்திப் படத்தில் நடிக்குமாறு என்னிடம் கேட்டார்களே யொழிய சிவப்பு ரோஜா ஹிந்திப் படத்தில் நடிக்குமாறு என்னை யாரும் கேட்கவில்லையே?

●


ஆந்திர மாநிலத்தில் நாகார்ஜுனசாகர், பர்வேதனா கிராமம், ராம்போ கோயில் ஆகிய இடங்களில் தேங்காயோ, தென்னை மரமோ இல்லை என்று சொன்னால் நீங்கள் கண்டிப்பாக நம்பத்தான் வேண்டும். ஏ.எல். ராகவன், எம். என். ராஜம் தம்பதியினர் தயாரிக்கும் புதிய படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பு இந்த இடங்களில்தான் நடைபெற்றது. தென்னை மரமும் தேங்காயும் தேவை. ஆனால் அங்கு அவை இல்லை. பிறகு வேறு வழியில்லாமல் சென்னையிலிருந்து விமானத்தில் தேங்காய்களை வரவழைத்தனர். இப்படத்துக்கு இசையமைப்பாளர்கள் ஐவர். இளையராஜா, கே. வி. மகாதேவன், சங்கர் கணேஷ், ஜி. கே. வெங்கடேஷ், டி. ஆர். பாப்பா ஆகியோர் தலா ஒவ்வொரு பாடலுக்கு இசையமைத்துக் கொடுத்துள்ளனர். இளையராஜா பாடல் மட்டும் ஆறரை நிமிடங்கள்; மற்றவை தலா நாலு நிமிடங்கள். படத்தின் பெயர் — கண்ணில் தெரியும் கதைகள்.




✖ எம். ஆர். ராதா

●

திரை உலகில் பலர் வருவார்கள், போவார்கள். ஆனால் நிலைத்து நின்று ஒரு சகாப்தத்தை ஏற்படுத்துபவர் குறைவுதான். நடிகவேள், எம். ஆர். ராதா சகாப்தத்தை உருவாக்கியவர். அவர் கடைசியாக அதிகப் படங்களில் ஜெயசங்கருடன் தான் நடித்தார். எம். ஆர். ராதா அவர்கள் பற்றி ஜெய்சங்கரிடம் கேட்ட பொழுது அவர் கூறினார்: "ஒரு நாள் மாலையில் படப்பிடிப்பு. ராதா அண்ணன் வந்ததும் அவர் காட்சிகளை முதலில் எடுத்து அவரைச் சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பி விடலாம் என்று முடிவு செய்தோம். அதே போல் அவர் வந்தவுடன் விஷயத்தைச் சொல்ல "நான் இப்பதாம்பா வர்றேன். ஆனா காலேலேந்து ஜெயசங்கர் நடிச்சிண்டிருக்காரு. அவர் காட்சிகளை முதல்லே எடுப்பா!" என்று கூறினாரே, பார்க்கலாம். அவரைப் பற்றிப் பலர் பலவிதமாக வெளியே பேசுவார்கள். ஆனால் அவரது உள்ளத்தின் சிறப்பியல்புகளுக்கு இது ஓர் எடுத்துக் காட்டு இல்லையா?"


ஆர்.எஸ்.எஸ். மீது குற்றச்சாட்டுகள்
நெருப்பில்லாமல் புகையாது!
ஜனதா (எஸ்) இ.காங்கிரஸின் அரசியல் உள் நோக்கங்கள்
புகை கண்ணைக் கரிக்குதே!
ஜனதா


வெவ் வெவ் வே!
வெவ் வெவ் வே!
வலது கம்யூனிஸ்ட்
நெடுமாறன்


என் விசிறியிலே தான் காத்து ஜோரா வரும்!
தேர்தல் கூட்டு
ஜனதா
தேர்தல் கூட்டு
என் விசிறி புடிச்சுக்க தோதாக இருக்கும்!
ஜனதா (எஸ்)
இ.காங்கிரஸ்
தேர்தல் கூட்டு



கல்கி

1979 செப்டம்பர் 30
சித்தார்த்தி புரட்டாசி 14
மலர்: 38 இதழ்: 9

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அண்ணலே உங்களை வணங்குகிறோம்!

கருணைமூர்த்தியே! உங்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம். அதைக் கொண்டாட எங்களைத் தகுதி உடையவர்களாக்குங்கள். அறியாமையால் தவறு செய்யாதிருக்க எங்களுக்கு நல்லறிவைத் தாருங்கள். தெரிந்தும் தவறிழைக்காதிருக்க எங்களுக்கு மன வலிமையைக் கொடுங்கள்.

உழைப்பும் கட்டுப்பாடும் நல்லொழுக்கமே இந்தத் தேசத்தை உயரச் செய்யும் என்பதை நாங்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம்; ஆனால் நடைமுறையில் கடைப்பிடிக்கத் தவறி விடுகிறோம். எங்களைத் திருத்துங்கள்.

எங்கள் அகில இந்தியத் தலைவர்களுள் ஒருவர் மேற்சொன்னவற்றை மேல்மட்டத்திலிருந்து கட்டாயத்தின்பேரில் மக்கள் மீது திணிக்கப் பார்த்தார். அதில் படு தோல்வியுற்றார். அடுத்து வந்த அனைத்திந்தியத் தலைவர்களோ மக்களிடம் ஒழுக்கம், கட்டுப்பாடு, உழைப்பார்வம் ஆகியன இயல்பாக வளர வேண்டும் எனச் சரியாக உணர்ந்திருந்தார்கள். ஆனால் தாங்களே இவற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்பதை மறந்தார்கள். பதவிப்பித்துப் பிடித்துத் தங்களுக்குள்ளேயே பூசலை வளர்த்துக் கொண்டார்கள்.

அண்ணலே! நாங்கள் இன்னும் அஞ்ஞானிகளாக இருக்கிறோம். தாற்காலிக லாபங்களுக்காக நிரந்தர தர்மங்களைக் காற்றிலே பறக்க விட்டு விடுகிறோம். எங்கள் மாநிலத் தலைவர்களுள் ஒருவர், சந்தர்ப்பவாதிக்குத் துணை போனார். பதவி மோகம் கொண்டு அதர்ம முறையில் ஆட்சியைக் கவிழ்த்த ஒருவருக்கு ஆதரவு அளித்தார்.

எங்களுடைய மற்றொரு மாநிலத் தலைவரோ நேற்று வரை சர்வாதிகாரத்தை முழுமூச்சுடன் எதிர்த்து அமர்க்களப் படுத்தி விட்டு இன்று அந்த சர்வாதிகாரி பின்னேயே ஓடுகிறார். தமது சர்வாதிகாரம் தவறானது என்று ஒப்புக் கொள்ளாது அதனை நியாயப் படுத்தவும் முயல்கிறவருடன் தேர்தல் கூட்டு அமைக்கிறார். எப்படியாவது தாங்கள் பதவிக்கு வந்து விட்டால் இரண்டு பேர் மீதும் உள்ள விசாரணைகளை இல்லை என்றாக்கி விடலாம் என்பது இவர்கள் திட்டமாயிருக்கலாம். ஆனால் இதற்கு மேல் ஒரு விசாரணை இருக்கிறது என்பதை பாவம், இவர்கள் அறியாதவர்கள். சாந்தசொரூபியே, இவை போன்று நாங்கள் செய்யும் இன்னும் எத்தனையோ பல தவறுகளைப் பொறுத்தருளுங்கள்.

பாபுஜீ! நாங்கள் உங்கள் சமாதி எதிரே நிற்கவே அருகதையற்றவர்களாகிறோம். எங்கள் தலைவர்கள் ஒற்றுமை காத்துத் தேசத்துக்கு உழைப்பதாக உங்கள் சமாதி முன் நின்று வாக்குறுதி எடுத்துக் கொண்டு பிறகு அதற்கு நேர் மாறாக நடந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல, இப்படி ஒற்றுமையைக் குலைக்க மூல காரணமாயிருந்தவர், தமது பாபத்தைத் துடைக்க வழி தேடாமல் உங்கள் சமாதி அசுத்தமடைந்து விட்டதாகக் கூறி அதனைக் கங்கை நீரால் கழுவிப் புனிதப் படுத்தப் போவதாகச் சொல்கிறார்.

மகாத்மாவே, இவர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள். தேர்தல் நெருங்க நெருங்க மக்களால் நிராகரிக்கப் பட்டு விடுவோமோ என்ற பயத்தில் இவர்கள் குழப்பம் மேலும் அதிகமாகிறது. எங்கள் தலைவர்களைச் சாமானியர்களுக்குள்ள ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக்குங்கள். தலைவர்களுக்குரிய தகுதிகள் அவர்கள் பெற ஆசி கூறுங்கள்.

தேசப்பிதாவே எங்களை ரட்சியுங்கள்! தேர்தல் நெருங்குகிறது. பொய்ப் பிரசாரத்தினால் கவரப்படாமல் நாங்கள் அறிவாளிகளை நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க மனோ பலத்தை எங்களுக்குத் தாருங்கள். அவர்கள் வழி காட்ட, நாங்கள் உழைக்க சீரான பொருளாதாரத் திட்டங்கள் அமலாகி நீங்கள் கனவு கண்ட ராமராஜ்யம் இங்கே தழைக்கட்டும். அண்ணலே உங்களை வணங்குகிறோம்.

சின்னதாக ஆனால் காதைக் குடைவதாக அலறிய டைம்பீஸை எரிச்சலுடன் அமுக்கி விட்டுக் கண்களைக் கசக்கியபடி மணியைப் பார்த்தாள். ஐந்து முப்பது. இரண்டு தாடைகளும் வலிக்குமாறு எப்படா கொட்டாவி போகும் வாயை மூடுவோம் என்று சலித்துக் கொள்ளும் அளவுக்குப் பெரிய கொட்டாவி விட்டாள். போர்வையை உதறிவிட்டு எழுந்தபோது அவனைப் பார்த்தாள். டைம்பீஸ் அலறியதில் விழித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது தூங்கத் தொடங்கி விட்டான்.

இவளுக்கு எரிச்சலாக வந்தது. தினம் வருகிற எரிச்சல்தான். ஒவ்வொரு இரவு தூங்கத் தொடங்கும்பொழுது என்னவோ மிகப் பெரிய பொக்கிஷம் கிடைத்த மாதிரி தூங்கத் தொடங்கிச் சின்னச் சின்னக் கனவுகளில் மகிழ்ந்து கொண்டிருக்கும்பொழுது அந்தக் கடிகாரப் பிசாசு அலறிவிடும். யாராவது இவளுக்கென்று இவள் எழுந்திருக்கும் முன்னமே எழுந்து முதல் டிகாக்ஷன் காப்பி போட்டு இவளை எழுப்பி இவளும் எழுந்து பல் தேய்த்துத் திவ்யமாய்க் குடித்து மீண்டும் எட்டு மணி வரை பொய்த் தூக்கம் போட்டு.... இதென்ன அசட்டுக் கற்பனை!

டிகாக்ஷனுக்கு வெந்நீர் போட்டாள். இரண்டு நாட்கள் என்றால் இதை அசட்டுக் கற்பனையென்று சொல்லலாம்: தினம் வந்தால்? யார் செய்ய இருக்கா? முந்தியெல்லாம் அம்மாதான் எல்லாம். ஆனால் இப்பொழுதுதான் சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் ரொம்பத் திண்டாடுவதாகப் பட்டது.

ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்....ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...:

கெட்டில் கொதிக்க ஆரம்பித்தது. மூடியை எடுத்துவிட்டு இடுக்கியால் பிடித்து வெந்நீரை ஃபில்டரில் விட்டு விட்டு மீண்டும் தண்ணீர் வைத்தாள். அவளையே மீறி நினைவுகள் சங்கிலி கோக்கத் தொடங்கி விட்டன. கல்யாணம் ஆகி இன்னும் மூணு மாசம் கூட ஆகவில்லை. அதற்குள் எல் கே. ஜி. யில் சின்னச் சாக்லேட்டுக்கு அடித்துக் கொள்ளுமே வாண்டுகள் அதுமாதிரி அர்த்தமில்லாத விஷயத்துக்கு ஒண்ணு அவன் கத்துவான் இல்லை அவள் கத்துவாள்.

இவள் அவனைப் புரிந்து கொள்ளவில்லையோ? இல்லை அவன் இவளுடன் ஒத்துப் போகவில்லையோ? தினம் சர்ச்சைதான். வீட்டுக் காரியங்களைச் செய்வதால் உண்டாகும் அலுப்பு எப்படி மூன்று மாதத்தில் பழகிப் போனதோ அது மாதிரி இந்தச் சண்டைகளும் பழகிப் போகும் என்றுதான் தினமும் பாஸ்கரைப் பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் சமாதானப்படுத்திக்கொள்வாள். மனத்தின் ஆழத்தில் ஏதோ ஒன்று

போட்டிக்கதை–3

வித்தியாசமானவர்கள்



சத்யப்ரியன்

சொல்லிவிடும், நீ வெறும் நொண்டிச் சமாதானம் பண்ணிக் கொள்கிறாய் என்று.

பி.எஸ்ஸி. முடித்துவிட்டு ரெண்டு வருஷங்கள் சும்மா இருப்பானேன் என்று வேலைக்குச் செல்லத் தொடங்கினாள். அதுவே அவளுடைய கல்யாணத்துக்கு ஓர் எக்ஸ்ட்ரா க்வாலிஃபிகேஷனாக மாறியது. பாஸ்கரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது எல்லாம் இதோ ராத்திரிப் பார்த்த கனவு மாதிரி இருக்கிறது.

தேனிலவுக்கு வெளியூர் சென்றிருந்தபோது அவன் ஆசையுடன் கேட்டு இவன் கல்யாணமான புதிது என்ற நினைப்பில் வாங்கிக் கொடுத்த பொம்மைகளுக்குச்சாவி கொடுத்து அது ஓடும் அழகை ரசித்துச் சிரித்துக் கொள்வாள்.

''என்ன லல்லி இதுக்குப் போய் இப்படி ஆர்ப்பாட்டம் பண்றே? இந்தச் சின்ன பொம்மையில் என்ன இருக்கு?''

''அழகை ரசிக்க உங்களுக்கு வேணுத் தெரியாம இருக்கலாம்....'' இவ்வளவு வேகம் இருந்திருக்கக் கூடாது என்று எவ்வளவோ பிரயாசைப்பட்டு நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''அழகை ரசிக்கிறதனாலே என்ன வந்திருக்கு? வெறும் அழகை மட்டும் ஹாய்யா சோபாவில் ஒக்காந்து ரசிக்கிற நிலைமையலா நம்ம நாடு இருக்கு?''

அப்பொழுதுதான் அவளுக்கு உரைக்கத் தொடங்கியது. அவன் ஒரு லட்சியக் கிறுக்கன் என்று.

இது மாதிரி சின்னதும் பெரிசுமாய் எத்தனையோ விஷயங்கள் இந்த மூணு மாசத்தில் இருவருக்கும் இடையில் பெரிய சுவரையே எழுப்பிக் கொண்டிருந்தது.

லட்சியம், கொள்கை இதெல்லாம் புஸ்தகத்தில படிக்கிறப்போ ரொம்ப நல்லாத் தான் இருக்கும். ஆனா இதெல்லாம் நடைமுறை வாழ்க்கைக்குச் சாத்தியப்பட வேண்டாமா? இப்படி இருக்கிறவாளெல்லாம் கல்யாணம் கார்த்திகைன்னு பண்ணிக்கணுமா?

அதையும் அவனிடம் சொல்லிப் பார்த்து விட்டாள். ''இவ்வளவு லட்சியம் கொள்கைன்னு சொல்றேளே மண வாழ்க்கை இதற்கெல்லாம் ஒரு தடையான்னா இருக்கும்? விவேகானந்தர் மாதிரி பிரம்மச்சாரியா இருந்துடலாமே?''

''உண்மைதான். ஆனா என் அம்மா கேட்டா. நீதாண்டா ஆத்துக்கு ஒரே பிள்ளை. நீதானே சந்ததியை வளர்க்கணும்னு, என் அம்மாவுக்காக ஒத்துண்டேன்..''

அவன் மேல் ஓர் ஆத்திரம். விளையாட்டில் தோத்துப் போனால் எதிர்க் கட்சிக்காரன் மேலே கோபம் வருமே அது மாதிரி வெளிக்காட்ட முடியாத கட்டம் வளர்ந்து விட்டது.

அவளுடைய அந்த ஆத்திரம் அவனுக்குத் தான் தாழ்ந்தவளல்ல என்ற வீம்பு முற்றும் வளர்ச்சி யடைந்தது அந்த எதிர்பாராத சந்தர்ப்பத்தினால்தான்.

லலிதா எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டாள். டிஃபன் பாக்ஸை எடுத்து ஸ்கூட்டர் ஃப்ரண்ட் காரியரில் வைத்து விட்டுப் புடவையை மாற்றிக் கொண்டிருந்தபோது தான் மூணாவது நம்பர் வீட்டிலிருந்து பாலு ஓடிவந்தான்.

''அக்கா! லலிதாக்கா! அஞ்சாவதாத்து மாமியோட பிள்ளை சங்கர் அண்ணா பரீட்சையில் பெயில்னு தற்கொலை பண்ணிண்டுட்டானாம். ஏக ரகளையா இருக்கு'' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டான்.

சங்கரைப் பற்றி அவளுக்கு அவ்வளவாக ஒன்றும் தெரியாது. அவனுடைய அம்மாவை, அதுதான் அந்த அஞ்சாவதாத்து மாமியைத் தெரியும். இவள் வந்த புதிதில் அம்மா கிரகப் பிரவேசம் பண்றதுக்குக் கல்யாணமான புதிதில் இந்த மாமியை விட்டுத்தான் ஆரத்தி கரைக்க ஏற்பாடு பண்ணியிருந்தாள். அப்புறம் அமாவாசைக்கு இலை கேட்பது, நாற்பது நாளைக்குத் தள்ளிப் போய் பீரியட்ஸுக்கு டாக்டரிடம் போவதற்கு முன்னால் இந்த மாமியிடம் கேட்பது இப்படி எத்தனையோ குட்டி உபகாரங்களுக்கு மாமி வருவதுண்டு.

''சங்கர் தவறிப் போயிட்டானாமே! பாலு சொல்லிட்டுப் போறான். ஒன்னவர் பெர்மிஷன் போட்டுடுங்கோளேன். போய் ரெண்டு வார்த்தை கேட்டுட்டு வந்துடலாம்.'' கண்ணாடி முன்னுக்கு வந்ததைச் சரியாக்கிக் கொண்டே கேட்டாள்.

''அவன் பண்ணிண்டது தற்கொலை. பேடித்தனம். இதுக்கெல்லாம் போய் அழுதுண்டிருக்கிறது அனாவசியம்.''

காலை வேளையில் அவனுடன் தர்க்கம் பண்ணும் நிலையில் அவள் இல்லை. ஆஃபீஸ் போக வேண்டிய அவசரம்.

அறிமுக எழுத்தாளர்



நான் காரைக்குடியில் உள்ள அழகப்பா கல்லூரியில் பி.எஸ்.ஸி மூன்றாவது ஆண்டு படித்து வருகிறேன். இதுவரையில் கிட்டத்தட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட கதைகளை அனுப்பி ஒன்றுகூடப் பிரசுரமாகாத வேதனையை அடைந்திருக்கிறேன். என் நண்பர்கள் எல்லாம் ''நீ அனுப்பும் கதைகளுக்குப் பேசாமல் ஒரு பத்திரிகை ஆரம்பித்து விடேன்'' என்பார்கள். என் கதைகள் என் உள்ளவெளிப்பாடே. ஆனால் என்னுடைய வெளிப்பாடுகளில் அசிங்கங்களோ, வக்கிரங்களோ நிச்சயம் இருக்காது.

பிரபாகர் (சத்தியப்பிரியன்)

கடைசிவரையிலும் அவன் போகவேயில்லை. அவன்தான் போய்ப் பார்த்து வருத்தப்பட்டு, வேண்டிய உதவிகளைச் செய்து விட்டு வந்தான்.

அவன் அவளுக்கும் சேர்த்து மெத்தை விரித்துத் தலையணைகளை உதறி மேலே போட்டுவிட்டு அவளைப் பார்த்தான். இனப்படி இரவு வழக்கமான ஸ்ரீராமஜெயம் எழுதும் நோட்டில் முகம் புதைத்தபடி அவள் அழுது கொண்டிருந்தாள். இந்த அழுகையில் ஒரு சோகம் இல்லை. தினம் தினம் சண்டை போட்டுப் போலிச் சமாதானம் பண்ணிக் கொண்டே வாழ்ந்துகொண்டிருக்கிறோமே இது எங்கு கொண்டு போய் விடுமோ என்ற பயம் இருந்தது. கூடாதுதான் என்று நினைத்தாள். இருந்தாலும் முடியவில்லை.

அவன் நிஜமாகவே திடுக்கிட்டு விட்டான். அவளுக்கும் அவனுக்கும் எவ்வளவோ சண்டை வந்தபோதிலும் — சண்டை என்றால் அடிதடி சண்டை இல்லை. வெறும் வாய் வீச்சுதான் — அவள் கோபித்துக் கொண்டு பேச மாட்டாளே தவிர இப்படி அழுததில்லை. அவள் அழுதது பாவமாகப் பட்டது.

''என்னம்மா லல்லி? என்ன நடந்துடுத்து? எதுக்காக இப்ப அழறே?'' என்றான் மிகவும் பரிந்த குரலில்.

அவள் பதில் சொல்லாமல் அழுதாள்.

''இப்பவெல்லாம் நாம் ரொம்பச் சண்டை போட்டுக்கத் தொடங்கிட்டோம் இல்லே? அதுக்குக் காரணம் நம்முடைய கொள்கைகள் ஒத்துப் போகாததுதான் லல்லி! கோபம் இருக்கிற இடத்திலேதான் குணம் இருக்கும்னு சொல்லுவாளே.... இதுக்குப் போயா அழறே?''

''இப்படி நொண்டிச் சமாதானம் ரெண்டு பேரும் பண்ணிக்கிறோம். எனக்கென்னவோ ரொம்பப் பயமா இருக்கு!''

''இதுல பயப்பட என்ன லல்லி இருக்கு?''

''எனக்குச் சொல்லத் தெரியலே ஆனா ரொம்பக் கவலையா இருக்கு.''

''லலிதா இப்பவெல்லாம் ஒவ்வொருத்தரும் புதுமை, புரட்சின்னு கிளம்பறானே நான் வெரி நாவல் ஐடியா ஒண்ணு சொல்றேன். ட்ரை பண்ணலாமா?''

''சொல்லுங்கோ!''

''இனிமே முதல் ஒரு வாரத்துக்கு நீ சொல்ற கட்டளைகளுக்கும் உன் மனசு ஆசைகளுக்கும் நான் கீழ்ப்படியறேன். நெக்ஸ்ட் வீக்கில் நீ எனக்கு.... என்ன?''

''ஆனா இது பேசறதுக்கும் எழுதறதுக்கும் மிக உயர்ந்த வார்த்தைகள். நடைமுறைக்குச் சாத்தியப்படணும் இல்லையா?''

''அதான் சொன்னேன். ஒரு மாசம் ரெண்டு மாசம் முயற்சி செய்வோம். எனக்கென்னவோ இது நம்மிடையே ஓர் ஒத்துப் போகும் மனப்பான்மையை வளர்க்கும் அப்படிங்கிற நம்பிக்கை இருக்கு. நீ என்ன நினைக்கிறே?''

''சரி. ட்ரை பண்ணுவோம்.''

அவள் சம்மதித்து விட்டாள் என்ற சந்தோஷத்தில் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.


சின்னக் குழந்தைகள் கண்ணாமூச்சி விளையாடுவது மாதிரி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு இருவரும் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளில் உலவி வந்தனர்.

லலிதா தன்னுடைய ஆபீஸ் சிநேகிதி ஒருத்தியின் மூலம் வாங்கிக் கொண்டு வந்திருந்த வெளி நாட்டுப் பொருள்கள் சிலவற்றை அவன் முன்னால் காட்டியபோது அவன் இவர்களையெல்லாம் திருத்தவே முடியாது என்கிற மாதிரி தன்னுடைய ஆத்திரத்தை வார்த்தைகளில் கொட்டினான்.

அவள் அவன் சொன்னதில் ஒன்றைக் கூடக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

''நம்ம ஏற்படுத்திண்டிருக்கிற திட்டப்படி இது என்னோட வாரம். நான் சொல்கிறபடிதான் இந்த வாரம் நீங்க நடக்கணும்'' என்றாள்.

தன்னுடைய இயலாமையை நினைத்து உள்ளுக்குள்ளேயே புழுங்கிய அவன் வலுக்கட்டாயமாக அவள் சொன்னதற்குச் சம்மதித்தான். இப்படி அந்த வாரம் முழுவதும் அவனுடைய கொள்கைகளுக்குச் சிறிதும்



ஒத்து வராத விஷயங்களில் அவள் அவனுடைய வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டிருந்தாள்.

அடுத்து அவனுடைய வாரம். அன்று ஒரு திரைப்படத்துக்குப் போக அவனிடம் அனுமதி கேட்டாள்.

''லலிதா! சோ சாரி! இந்த வாரம் நீ நான் சொல்லும்படியெல்லாம் ஆடணும் இல்லையா? படத்துக்குப் போகக் கூடாது'' என்றான்.

இந்த நாலு வார காலத்தில் இருவருமே வெறும் போலிவாழ்க்கையைத்தான் வாழுகிறோம் என்று புரிந்து கொண்டு விட்டார்கள். இந்தப் போலி வாழ்க்கையை வரும் நாட்களிலெல்லாம் இழுத்துச் செல்ல முடியுமா என்ன? ஆனால் இதற்கெல்லாம் முடிவு?

டைவர்ஸ்!.... சீ எதற்கு டைவர்ஸ் பற்றி இப்போ நினைக்கணும்?

அவன் இட்டது ஆணையாக இருந்த காலங்களில் அவனுடைய முழு மனம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கும் அவனுடைய லட்சியங்கள் அனைத்தையும் புரிந்து கொண்டு விட்டாள். அவளால் அவைகளை நிச்சயம் பின்பற்ற முடியாதுதான். அனுபவமும் அதனால் உண்டாகும் வடுக்களும் ஏற்படாத வரையில் இள ரத்தம் மற்றவர்களுக்குப் பணிய மறுக்காதுதான். வயசு கூடக் கூட அனுபவம் வரும். ஒருவரை யொருவர் அனுசரிக்கும் நிலை வரலாம். அது வரையில் தினம் நரக வேதனையும் உருப்படியற்ற சண்டைகளும்தான். இப்படியே வாழ்க்கை போய்க் கொண்டிருந்தால் என்னதான் செய்வது?

இதைப் பற்றி அவனிடம் நேரிடையாகவே சொல்லிடணும். என்னன்னு சொல்றது? நான் விவாகரத்துக் கோருகிறேன் என்றா?

அவள் ஸ்டவ் அடுப்பை அணைத்து விட்டுப் புடவைத் தலைப்பில் புறங் கையைத் துடைத்துக் கொண்டு திரும்பிய போதுதான் அவன் அடுப்படியின் வாசலில் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

''லலிதா! உன்னிடம் ஒண்ணு கேட்கணும்!''

அவளும் தான் நினைத்தபடியேதான் விவாகரத்துப் பற்றிக் கேட்க வந்திருக்கிறான் என்றது அவளுக்கு வசதியாகப் போய்விட்டது.

''இந்த விஷயத்தைப் பற்றித்தான் நான் உன்னிடம் பேசப் போகிறேன். நான் முந்தி சொன்னதைத்தான் திரும்பவும் சொல்லிறேன். கணவனும் மனைவியும் ஒண்ணு அவன் அவளுக்கோ இல்லை அவள் அவனுக்கோ பணிஞ்சு போய் அடிமை வாழ்க்கை நடத்தினால்தான் மண வாழ்க்கை பூரணமானதாக ஆகும். புருஷன் மனைவி ரெண்டு பேரோட விருப்பு வெறுப்புக்களும் ஒத்துப் போறது ரொம்ப அபூர்வம். காதல் திருமணத்தில் இது சாத்தியப்படுமென்னு நினைக்கலாம். லவ் பண்ணும்போது அவளோட உடம்பு தனக்கு வேணும்னு அவனும், அவன் தனக்கு வேணும்னு அவளும் தங்களுடைய தனிப்பட்ட கொள்கைகளுக்குச் சமாதி கட்டிட்டு அடிமையா மாறிடறா! அங்கும் ஒரே மாதிரி விருப்பு வெறுப்புக்கள்



பேய் மழை பெய்து கொண்டிருந்தது. இரண்டு ஜோஸ்யர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருவர் சொன்னார்: ''இன்னும் இருபது வருஷம் கழித்து வரப்போற மழையை இது எனக்கு ஞாபகப்படுத்துகிறது!''

—ராமு

இருப்பதா சொல்ல முடியாது. லவ் மாதிரியே ஜாக்கே இந்தக் கதின்னு பெரியவர்கள் பார்த்து முடிக்கும் திருமணங்களின் கதி எப்படி இருக்கும்னு பார்த்துக்கோ.''

அவன் பேசப் பேச மனம் முழுவதும் நெகிழ்ந்து அவள் மெல்ல அழத் தொடங்கினாள். அந்த அழுகையில் சோகம் இல்லை. ஆனால் இவ்வளவு பெரிய இன்டெலக்சுவல் ஹஸ்பெண்டை விட்டுப் பிரியப் போகிறோமே அப்படிங்கற ஆற்றாமை இருந்தது.

''லலி! நீ இப்போ எதுக்காக அழறே? நம்ம ரெண்டு பேரும் நன்னா யோசிச்சு எடுக்கிற முடிவுதானே இது? வாழ்க்கைக்கு ஒத்து வராத பண்பாடு இருந்து என்ன அவசியம்? கிடைக்காத பாதுகாப்பைத் தானே நானும் நீயும் தேடி எடுத்துக்கப் போகிறோம். இதுக்கு ஏன் அழணும்?''


அடுத்த மாதத்தில் அவள் தன் சொந்த ஊருக்கு ட்ரான்ஸ்பர் வாங்கிக் கொண்டாள். கிளம்பும்பொழுது மட்டும் அவளால் அழாமல் இருக்க முடியவில்லை.

''அழாதே டியர், நம்ம ரெண்டு பேரும் நண்பர்களாக இருப்போம். நண்பர்களா இருந்தாக் கருத்து வேற்றுமைகளுக்கு இடம் கொடுக்கலாம் இல்லையா? நான் விவாகரத்தைப் பற்றி அப்புறம் லெட்டர் எழுதறேன். நம்ம பிரச்னைக்கு அதுதான் சிறந்த தீர்வு. ஆனா அதனோட பின் விளைவுகளை யோசிக்கணும் இல்லையா? என்னைப் பொறுத்த வரைக்கும் எனக்கு அடுத்த கல்யாணம் தேவையில்லை. ஆனா நீ மறுமணம் செய்துக்க விரும்பினா இந்த விவாகரத்து ஒரு தடையாகத்தான் இருக்கும். தான் எப்படி இருந்தாலும் தனக்கு வர்றவ மட்டும் கன்னி கழியாதவளா இருக்கணும்னு நினைக்கிற ஆண்கள் இருக்கிறவரைக்கும் இந்த நிலை தான். உன்னோட மனசை நீதான் தேத்திக்கணும். நல்ல புத்தகங்களைப் படி. இந்த மோசமான உலகத்தைவிட அவை உனக்குப் பல விஷயங்களைக் கற்பிக்கும்.''

அவன் எவ்வளவுதான் தேற்றி ஆறுதல் மொழிகள் சொன்னாலும் அவள் பஸ்ஸில் அழுதுகொண்டேதான் ஏறினாள்.


பஸ் புழுதியைக் கிளப்பி விட்டு மறையும் வரையில் அவன் கனத்த கண்களுடன் அது மறைவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

எவரும் களவாட முடியாத 1000 ரூபாய்.



ஸ்டேட் பாங்க் தரும் புதிய ரூ 1000/- 'டிராவெலர்ஸ் செக்'

- இந்தியாவிலெங்குமுள்ள ஸ்டேட் பாங்க் மற்றும் அதனைச்சார்ந்த பாங்குகளின் 7300 க்கும் மேற்பட்ட அலுவலகங்களில், ரூ. 50/-, ரூ. 100/- மற்றும் ரூ. 500/- ஆகிய மதிப்புகளில் கிடைக்கும்.
- வாங்கவோ, பணமாக மாற்றவோ கட்டணம் எதுமில்லை.
- இதை வழங்கும் அலுவலகம், (அது இழக்கப்பட்டாலோ, களவுபோனாலோ) பணத்தைத் திருப்பித்தர உறுதியளிக்கிறது.
- உபயோகித்தல் எளிது ; பணமாக மாற்ற அடையாளச் சான்று தேவையில்லை.
- காலவரையறையின்றிச் செல்லுபடியாகும்.
- இந்தியாவிலுள்ள 25,000 க்கு மேற்பட்ட தலங்களில் (outlets) பணமாக மாற்றிக் கொள்ளலாம்.



ஸ்டேட் பாங்க் பயணக் காசோலைகள்.

நீங்கள் இழக்க முடியாத பணம்.

ஸ்டேட் பாங்க்

நேசக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்

எமது எல்லா பெருநகர் மற்றும் நகர்ப்பகுதிக் கிளைகளிலும் இராஜாஜி நூற்றுண்டு விழா கூப்பன்கள் கிடைக்கின்றன.

SB-4939 A

நாலுபேரிடம்



நாலு நூல்கள்

நாலு பேரிடம் நான்கு நூல்களைத் தந்து ஒரு வாரத்துக்குப் பிறகு சந்தித்த போது:

நவரசக் கதைகள்

சென்னை கனரா பாங்கின் உயர் அதிகாரி திரு என். மோகன்:

கௌசிகன் நவரசங்களையும் கருத்தில் கொண்டு அதற்கேற்ப ஒன்பது கதைகளைக் கோவையாக எழுதியுள்ளார். கதைகள் எல்லாம் அருமையாக இருக்கின்றன. பாராட்டத்தக்க முயற்சி.

ஹாஸ்ய ரஸத்தினைக் கொண்டு எழுதப் பட்ட ''நீலக்கல் மோதிரம்'' கதை விறு விறுப்பாக இருந்தாலும் வாய்விட்டுச்சிரிப்பதற்கு ஒன்றுமில்லே. அதே போல பயம் தலைப்பில் வரும் 'நிராசை' படிப்பவரைப் பய முறுத்தாவிட்டாலும் கதை பிரமாதம். அதில் ''ஊசலாடும் கயிற்றைக் கண்ட பூவாயி ஹோ என்று அலறினள்'' என்ற முடிவு ரொம்ப ஜோர். வெறுப்புச் சுவைக்காக எழுதப்பட்ட கதை ''கல்யாணமா?'' இப்புத்தகத்திலே எனக்கு மிகவும் பிடித்த இந்தக் கதைக்காக ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

'நம்பிக்கை'யில் அற்புதம் சொட்டாவிட்டாலும், 'தழும்பில்' சாந்தம் இல்லாவிட்டாலும் கதைகள் ரசிக்கும்படியாக உள்ளன. சிருங்காரச் சுவைக்கு எழுதிய கல்பனா, தமிழ் சினிமாக் கதை மாதிரி உள்ளது. நம்பும்படியான கதையாக இல்லே. 'விதியின் கை' வீரம் அளிக்கவில்லே. 'அவள் குழந்தை' மாதிரி ஆயிரம் கதைகள் வந்து விட்டன. ரௌத்ரத்துக்கு முக்கியத்துவம் தரும் ''உயிர் கொடுத்த ஓவியம்'' கதையில் வள்ளியின் முடிவு உள்ளத்தை வேதனையடையச் செய்கிறது.

மொத்தமாகச்சொல்லப்போனல், நவரசக் கதைகளில் ரசமில்லாவிட்டாலும் சாம்பார் 'கமகம'வென்று மணக்கின்றது.

நவரசக் கதைகள்: ஆசிரியர்: கௌசிகன் வெளியீடு, வானதி பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-600017 விலை ரூ. 10-00

பாதாள உலகில் பறக்கும் பாப்பா

இந்தியன் ஏர்லைன்ஸ் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த குமாரி உஷா:

கையில் வாங்கியதும் குழந்தைகள் புத்தகமாயிருக்கிறதே என்று பயந்தாலும், புத்தகம் ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது. கடலைப் பற்றியும், கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை முறையைப் பற்றியும் சின்னஞ் சிறுவர்கள் ரசித்து மகிழக்கூடிய வகையில் பல படங்களுடன் அமைந்துள்ளது.

இதில் பாராட்டப்பட வேண்டிய கருத்து, ஆசிரியர் கடலைப் பற்றிய விஷயங்களை வெறும் உரைநடையாக எழுதாமல் ஒரு சின்னஞ் சிறுவன் தானே பார்த்து ரசிப்பது போல் கொடுத்துள்ளதுதான். மேலும் காற்றை சிறுவனின் நண்பனாகவும், வழிகாட்டியாகவும் சித்திரித்திருப்பது அருமை, இப் புத்தகம் சிறுவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களுக்கும் விறுவிறுப்பாகவும் அறிவூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

என் வீட்டின் அருகிலிருக்கும் ஆறு வயது குழந்தைக்கு இந்த அழகிய புத்தகத்தைக் காண்பித்துக் கதையைக்கூறியபோது குழந்தை மிகுந்த உற்சாகத்தை வெளிப்படுத்தியது.


பாதாள உலகில் பறக்கும் பாப்பா: ஆசிரியர், கல்வி கோபால கிருஷ்ணன். வெளியீடு: கல்வி பதிப்பகம், பிளாட் 5, பரமேசுவரி நகர் அடையாறு, சென்னை-20. விலை ரூ 10-00



குமாரி ஜெயந்தி



குமாரி உஷா



திரு என். மோகன்



திரு. வாதராஜன்

சேரனின் கள்ளிப்பூ:

சென்னை தேவி தியேட்டரின் மானேஜர் திரு வரதராசன்:

அழியாக் காதல் ஆவிகளின் சங்கமத்தில் முடிவடைகிறது. இதைத்தான் மையக் கருவாக வைத்து இந்த நாவலை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

சாதாரணமாக ஒரு நாவலைப் படிக்கும்போது அதில் கதாபாத்திரங்களின் குண சித்திரங்களையும், அவர்கள் எப்படிச் சுவையாகக் கதையை வளர்த்துச் செல்கிறார்கள் என்பதையும்தான் வாசகர்கள் கவனிக்கிறார்கள்.

இந்த நாவலில் கதாபாத்திரங்கள் அறிமுகமாவது ரொம்ப சாதாரணமாக இருக்கிறது. கதையில் அவர்கள் ஒரு கவிதை நயத்தோடு உலவுகிறார்கள். இந்த வகையில் நான் எதிர்பார்த்த அளவுக்கு புத்தகம் இல்லை என்றாலும், ஆசிரியர் முழுதும் ஏமாற்றவில்லை.

பைரவன் — பூங்கொடி காதல் சரித்திரக் காவியத்தை நினைவுறுத்துகிறது. இவ்வளவு ஆழமான காதலைப் பார்க்கும் போது இவர்கள் பிரிவிற்கு ஆசிரியர் கூறும் காரணம் நம்மைச் சமாதானப்படுத்துவதாக இல்லை. தன் தந்தையின் கடன் போக்க வாழ்வையே அர்ப்பணிக்கிறாள் பூங்கொடி. இதற்காகத் தன்னை மறக்கும்படி அவள் காதலனிடம் கூறுகிறாள்.

சந்தேகப் பேய் எவ்வளவு கொடிதான ஒன்று என்பதற்குப் பஞ்சவர்ணம்—கண்ணன் ஜோடி உதாரணம்.

பைரவன் — பூங்கொடி பிரிவு தாங்க முடியாதது. அவர்கள் ஆவியாகச் செல்வது நம்ப முடியவில்லை.

ஆசிரியரின் நடையில் இயற்கை வர்ணனைகள் நேரே பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துகின்றன.

காட்டாற்று வெள்ள வேகம் இல்லாவிட்டாலும், கதையில் தொய்வில்லை.

சேரனின் கள்ளிப்பூ ஆசிரியர்: சேரன், வெளியீடு: அருள் பிரசுரம் 58, வன்னியர் தெரு, சென்னை-600 024 விலை ரூ 9-00

சதம் கண்ட கிரிக்கெட்

தபால் மூலம் பட்டப்படிப்பு பயிலும் குமாரி ஜெயந்தி:

கிரிக்கெட்டில் ஈடுபாடு இல்லாத எனக்கு இப்புத்தகத்தைக் கையில் வாங்கும் போதே ஒரு நல்ல நாவலாக இல்லாமல் போய் விட்டதே என்ற வருத்தம் ஏற்பட்டது. ஆனால் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததும் கீழே வைக்கவே மனம் இல்லை. அப்பப்பா! எத்தனை விஷயங்கள். இதற்கிடையில் வீட்டில் சண்டை வேறு. புத்தகத்தை யார் முதலில் படிப்பது என்பது பற்றித்தான்! இறுதியில் நான்தான் முதலில் படித்தேன். சோ, தனக்கு கடவுள் நம்பிக்கை அதிகம் இருப்பதனால், பந்து தன் கையில் வந்து விழுந்தது, என்று கூறும் இடம் 'டாப்!' நினைத்து நினைத்துச் சிரிக்கும்படி இருக்கிறது. மற்றும் ''எதிர்ப்பில் வளர்ந்தவர்'' ''வெங்கட் பற்றிய செய்திகள்'' சுவையாக உள்ளன. பெண்கள் கிரிக்கெட் பற்றிய செய்திகள் அருமை. கிரிக்கெட் பற்றி சுவை குன்றாமல் சிறப்பாக எழுதியுள்ள ஆசிரியருக்கு நன்றி கூற வேண்டும்.

எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. இதைக் குறைத்திருக்கலாம். கிரிக்கெட் பற்றிய பல புகைப்படங்களையும் இதில் சேர்த்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

சதம் கண்ட கிரிக்கெட் ஆசிரியர்: குண்டுமணி வெளியீடு: ராஜஸ்ரீ பதிப்பகம் 22, ராமச்சந்திர ஐயர் தெரு, சென்னை-17. விலை ரூ 5-00

பேட்டி: 'சிக்கி'

இந்தியக் கிரிக்கெட் பொன்விழா ஆண்டு



வெங்கட் போஸிங்



பெவிலியனில் ஒரு காட்சி

பீட்டர் ஸ்லீப் 'தூங்கி' வழியாமல் பிளேயர் ஸ்டாண்டில் ஹெரால்ட் ராபின்ஸ் நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அப்படிச் தம்மனைவிக்குக் கடிதம் வரைந்து கொண்டிருந்தார். மானேஜர் மெரிமனிடம் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்கள் படங்கள் வெளிவந்த 'கல்கி' இதழைத் தந்தபோது, ''நானே வைத்துக் கொள்கிறேனே!'' என்று சொல்லி அதை எடுத்துக் கொண்டு பத்திரப்படுத்த பெவிலியன் அறைக்குள் விரைந்தார்.

முதல் பிரவேசம்

● சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்தில் திலீப் தோஷிக்கு முதல் டெஸ்ட் பிரவேசம். அவர் 103 ரன்களுக்குள் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி, முதல்தர பௌலரானார். வங்காளத்தைச் சேர்ந்த திலீப் தோஷி நாலைந்து வருஷங்களுக்கு முன் திலீப் கோப்பைக்குச் சிதம்பரம் ஸ்டேடியத்துக்கு வந்தவர். அவர் பிஸினஸ்மேன். மணமாகிவிட்டது. ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் ஆசைக்கு ஒரு பெண்ணும் உண்டு. திலீப் தோஷி ரொம்ப சங்கோஜி. நீண்ட நேரம் 'தூண்டில்' போட்டால் ஒன்றிரண்டு வார்த்தைகள் வெளிவருகிறது! 32வது வயதில் இவருக்கு டெஸ்ட் சான்ஸ் கிட்டியிருக்கிறது. கொடுத்த சான்ஸை வகையாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இதுவே ஸஸ்பென்ஸ்

● சேப்பாக்கம் சிதம்பரம் ஸ்டேடியத்துக்கும் காப்டன் கவாஸ்கருக்கும் ராசியில்லை. ஐயாயிரம் ரன் ரிகார்ட் பெருமை சென்னைக்குக் கிடைக்கவில்லை. மூன்று குறைகிறது! அவர் இதுவரை ஆடிய சிதம்பர ஸ்டேடிய டெஸ்ட்களில் அரை சதமே அதிக எண்ணிக்கை! அதுவும் இந்த டெஸ்டில்தான் எடுத்தார்.

மாப்பிள்ளை விசுவநாத்

● நாடிவேந்தர் விசுவநாத் ஆடும்பொழுது ஒரு கட்டத்தில் ஸ்கோர் 111, நான்காவது பாட்ஸ்மன்ஸ்கோர் 11, எட்டாவது பாட்ஸ்மன் ஸ்கோர், 11. மெல்போர்ன் முனிசிபல் இன்ஜினியர் ஹிக்ஸ் வீசிய 'லட்டு' பந்தில், காப்டன் ஹியூஸுக்கு 17 ரன்களில் 'காட்ச்' கொடுத்து விட்டுப் பரிதாபமாக விலகினார், விசுவநாத்.

வெங்சர்க்காரும் படுவேகமும்

● தீபாவளி நெருங்குகிறதல்லவா? சடபட வென்று பட்டாசு கட்டு வெடித்து ஓய்ந்து விடுவது போல், 65 ரன்களைப் படுவேகமாகக் குவித்து, 'வாட்மோர்! பிடிச்சுக்கோ!' என்று காட்ச் கொடுத்து விட்டு ஓடி விட்டார் வெங் சர்க்கார். அவரது ஒரு ஸிக்ஸரும் 10 பவுண்டரிகளும் அபார வாண வேடிக்கைகள்!

நோ பால் மன்னர் ஹாக்

● இந்தியாவின் 'எக்ஸ்டிரா' ஆட்டக்காரருக்கு 21 நோ பால் போட்டு 'வாரி வழங்கிய'வர் ஆஸ்திரேலியாவின் விரைவுப் பந்து வீச்சாளர் ஹாக்! விக்கெட் எடுப்பதைவிட நோ பாலிலேயே பிரசித்தமானார் ஹாக்!

இரு பார்ட்னர் ஷிப்

கபில் — வெங் சர்க்கார் பார்ட்னர் ஷிப்பில் 90 ரன்கள் கிடைத்தன. யஷ்பால்—வெங் சர்க்கார் பார்ட்னர்ஷிப்பில் 99 ரன்கள் கிட்டின. சூடு பிடித்த ஆட்டத்தை மழை வந்து நமுக்கச் செய்து விட்டது.

யாருக்கு வோட்டு?



தேர்தல் நெருங்குகிறது. இந்நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று பிரிவினர் ஆட்சியைக் கைப்பற்ற எண்ணுகின்றனர். (1) காங்கிரஸ் - ஜனதா (எஸ்) கூட்டணி (2) இந்திரா காங்கிரஸ்-திமுக கூட்டணி (3) ஜனதா. இம்மூன்று பிரிவினரில் யார் பதவிக்கு வரவேண்டும் என்று விரும்புகிறீர்கள்? எதனால்? என்பது பற்றி இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் சுருக்கமாகக் கட்டுரை எழுதி அனுப்பவும். ஒவ்வொரு பிரிவினையும் ஆதரிக்கும் கட்டுரைகளில் சிறந்த ஒன்றுக்கு ரூ 100 பரிசு. (மொத்தம் ரூ 300) தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் கட்டுரைகளுக்கு வழக்கமான சன்மானம் வழங்குகிறோம்.

உறையின் மேல் 'யாருக்கு ஓட்டு' என்று குறிப்பிடவும். முடிவு தேதி அக்டோபர் 31உ. கடிதப்போக்குவரத்து கிடையாது. பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

ஆல்ரவுண்டர் கபில்தேவ்

● விரைவுப் பந்து வீச்சாளர் கபில்தேவ் இந்திய கோஷ்டியின் அதிக எண்ணிக்கை எடுத்த பாட்ஸ்மன். 83 ரன்கள். இவரது டபிளுன்டாவது டவுண்டரி ஷாட் ஆஸ்திரேலிய ஸ்கோர் 390ஐ கடக்க வைத்தது! கபில்தேவ் செஞ்சுரி போடாதது பெரும் குறை!

சுருள் பந்து வீச்சாளர் ஹிக்ஸ் சாதனை

● சுருள் பந்து வீச்சாளர் ஹிக்ஸ் 41.3 ஓவர் பந்து வீசி, 12 மெயிடன் ஓவர் சம்பாதித்து, 143 ரன்களைக் கொடுத்து 7 விக்கெட்களைச் சரித்து விட்டார்! 'எங்களுக்கும் ஸ்பின் போட வரும்' என்று அவர் ஆடிப்பாடிக்களிக்காத குறை!

வருண பகவான் இந்தியா ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களின் ஆட்டத்தின் இடையில் புகுந்து தம் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டார்! மழை அதிகம் ஆக, ஆட்டக்காரர்கள், அம்பயர்கள் அனைவருமே வருண பகவானின் சட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் விக்கெட்டுகளை 'அம்போ' என்று தவிக்க விட்டுப் பாய்ந்தனர்! கிரௌண்ட்ஸ்மன் விக்கெட்டுகளையும் 'பிட்சை'யும் 'திரை' போட்டு மூடி விட்டனர்! ஆஸ்திரேலிய இந்திய முதல் டெஸ்ட் 'டிரா.'

பொன் விழா ஆண்டில்

● கிரிக்கெட்டுக்குப் பொன்விழா ஆண்டு என்பது நினைவு வந்ததும், கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு தலைவர் சின்னசாமியை அணுகி, "பொன்விழா ஆண்டு ஆச்சே?" என்று இழுத்தேன்.

"பம்பாய் ப்ரபோர்ன் ஸ்டேடியத்தில் ஆயிரம் ஸ்கொயர் மீட்டர் அளவில் கிரிக்கெட் தலைமை அகம் இருபத்தைந்து லக்ஷம் ரூபாய் செலவில் கட்டப் போகிறோம். கிரௌண்ட் ப்ளோரிலே மியூசியமும், நூலகமும் இருக்கும். முதல் ப்ளோரில் நிர்வாகக் காரியாலயம் இருக்கும். இரண்டாவது ப்ளோரில் கமிட்டி கூடுவதற்கான அரங்கங்கள் உண்டு. பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கான கிரிக்கெட் போட்டி நாடெங்கும் நடத்தவிருக்கிறோம். கிரிக்கெட் ஆடும் தேசங்கள் நமது பொன்விழா கொண்டாட்ட வைபவங்களில் கலந்து கொள்ளும். ஒவ்வொரு மாநில டெஸ்ட் ஆட்டக்காரர்களையும் இந்தப் பொன்விழா ஆண்டில் கௌரவிக்கப் போகிறோம்" என்று கூறியவாறு பெங்களூர் டெஸ்ட்டுக்குப் பயணமாகிக் கைகூப்பி விடை பெறுகிறார் முதியவர் சின்னசாமி.

பொன்விழா ஆண்டில் இந்தியக் கிரிக்கெட்டின் பொன்னான ஆண்டும் ஆரம்பமாகட்டும்.

—குண்டுமணி

"பூனையையும் தூக்கிக்கொண்டு எங்கேடா போகிறாய்?"

"எலியட்ஸ் பீச்சுக்குத்தான்!"

ஜி. நடராஜன்



தியேட்டரிலிருந்து திரும்பும்போது, ''வணக்கம்; மீண்டும் வருக'' என்று விநியோகஸ்தர்கள் கொட்டை எழுத்தில் எழுதி வைத்துள்ள ''பானர்'' கண்களைக் கவருகிறது. 'தியேட்டரிலிருந்து மீண்டு வந்தாலே போதும்' என்கிற அளவில் படம் இருக்கும்போது மீண்டும் வருவதாவது?

பானரில் ஒரு தவறு வேறு நேர்ந்திருக்கிறது. 'மீண்டும் வருக' என்பதற்குப் பதில் 'மீன்டும் வருக' என்று இரண்டு சுழி 'ன்' போட்டிருக்கிறார்கள். என்ன செய்ய, சுழி சரியில்லை போங்கள்!

செக்ஸ் அடிப்படையிலான திம்களை வைத்துத்தான் கதை எழுத வேண்டும், படம் பிடிக்கவேண்டும் என்பது இன்று விதிமுறை போலாகி விட்டது. இந்த வெள்ளம் தானாக வடியக் காத்திருக்க வேண்டியதுதான். கரை கட்ட முயலலாம். ஆனால் தடுக்க எண்ணிக் குறுக்கே போய் நின்றால் அது நம்மையும் சேர்த்து அடித்துக் கொண்டு போய்விடுகிற ஆபத்து உண்டு. ஆனால் இந்தப் படத்தில் செக்ஸ் காட்சியும் சரி, அதைத் தொடர்ந்து வரும் மனோதத்துவ ரீதியான நிகழ்ச்சிகளும் கதாபாத்திரங்களின் கற்பனைகளும் சரி நம்பத்தக்கனவாயில்லை.

மயில்கள் ஆடுவதைப் பார்த்து வான்கோழி தோகை விரித்தது போக, வான்கோழிகளைப் பார்த்து மயில்கள் தோகையைக் சத்திரித்து 'அழகு' படுத்திக் கொள்ள முனைந்தால்—எப்படி? பாலசந்தர் இந்த நிலையில் இருக்கிறார் இந்தப் படத்தைப் பொறுத்த வரை. Perhaps he is over worked and needs a holiday.

நினைவில் நிற்பன நிழற்படங்கள்தாம். டைட்டில்களின்போது யாருமே எழுத்துக்களைப் படித்திருக்க மாட்டார்கள்.

சமீபத்திய அறிமுகம் சரிதாவின் துடிப்பான நடிப்பும் அனுபவ நடிகை சுஜாதாவின் பண்பட்ட கலைத் திறனும் இல்லாதிருந்தால் படம்: கொட்டாவி!

— குட்டி கிருஷ்ணன்



ஆந்திர மாதா அளித்த அருந்தவப் புதல்வரான அன்னமாசாரியார் 1408ல் தாள்ளப்பாக்கத்தில் தோன்றி ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு வாழ்ந்தார். ஏழுமலை மேலிருந்து கொண்டு ஏழுலகாளும் எம்பெருமானிடம் இளமையிலேயே ஆரா அன்பு பூண்டு, அதன் பலனாக இறைவனைப் பதினாறும் பிராயத்தில் பிரத்யக்ஷமாகத் தரிசித்தார். அன்றிருந்து 1503ல் தம் ஜீவன் ஒடுங்கும் வரை சுமார் எண்பதாண்டுகள், வட வேங்கடவன் ஸந்நிதியிலேயே அனவரதமும் ஆனந்த பரவசராக நின்று தின தினமும் அவனுக்கு நவ நவமான ஸங்கீர்த்த மலர்களை ஆக்கி அர்ப்பணித்தார். சொல்வழகு, பொருளாழம், உணர்ச்சிச் சிறப்பு, பக்திச் செழிப்பு யாவற்றிலும் சிறந்து விளங்கும் இந்த ஸாஹித்தியங்கள் இருவகையாக அமைந்தன. ஒன்று தாஸ பாவத்தில் வைராக்கிய பக்தியில் பிறந்தது. மற்றது நாயிகா பாவத்தில் சிருங்கார பக்தியில் பிறந்தது. இவ்வாறு அவர் 32,000 பாடல்கள் இயற்றினார்!

அவரது புதல்வர் பெத்த திருமலாசாரியரும் பேரர் சின்ன திருமலாசாரியரும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தாங்களும் வாடா இசையால் வடமலையப்பனை வழிபட்டு வந்தனர். அக்குடியைச் சேர்ந்த வழித்தோன்றல்கள் வேங்கடரமணன் திருமுன் கானாஞ்சலி செலுத்தும் வழக்கம் இன்றளவும் நீடித்துள்ளது.

அன்னமாச்சாரியாரின் அரிய ஸாஹித்ய பொக்கிஷத்தைப் பற்றி வெளியுலகு அதிகம் அறியாமலே இருந்து விட்டது. 1922-ல் தான் இந்த நிதியம் வெளியுலகின் கவனத்தை ஈர்த்தது. ஆதியிலேயே இப்பாடல்களின் பெருமை உணர்ந்து இவற்றைச் செப்பேடுகளில் பொறித்துத் திருமலை திருக்கோயிலிலேயே பாதுகாப்பில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றில் சுமார் 12,000 சங்கீர்த்தனங்களே இப்போது காணக்கிடைக்கின்றன.

இச் செப்பேடுகள் 1922-ல் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பிரசாரத்துக்கு வரலாயின. ஸமீப காலத்தில் திருமலையானின் தனிச் சொத்தாகிய இந்த ஸங்கீர்த்தனங்களைப் பரப்புவதில் திருமலை — திருப்பதி தேவஸ்தானத்தினர் விசேஷமான பிரயாசை மேற்கொண்டுள்ளனர்.

ஏழிசை எழிலில்



இதன் பொற்பயனாக, ஓரளவு பிரகாசம் புலப்பட்ட குடத்து விளக்கைக் குன்றிலேற்றி வைக்கும் பேறு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களுக்கும் இந்த ''நாதசாலதீப''த்தைக் காணும் (கேட்கும்) பேறு நம் அனைவருக்கும் கிட்டியுள்ளது. பெருமானின் திவ்ய ஸங்கற்பத்தால் திருமலை — திருப்பதி தேவஸ்தானத்தினர் ஸ்ரீமதி எம். எஸ்.ஸை அணுகி, ஐயனுக்கு அர்ப்பணமாக ஐந்து நீண்ட நேர இசைத் தட்டுக்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். எந்த நற்பணிக்கும் தயங்காது உதவும் அவர், தமது இசையாற்றலும் கொடைப் பாங்கும் தம்முடைய குடி காக்கும் குல தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப் படுவதைப் பரம பாக்கியமாகக் கருதி இதயமார இசைவு தந்தார். திருமலையப்பனின் சாச்வத ஆஸ்தான வித்வஷி அவனுக்காக அளிக்கும் ஐந்து எல். பி. இசைத்தட்டுக்களில் முதல் இரண்டு அவனுடைய கோயிலிலேயே குடியாய்க் கிடந்த அடியார்மணி அன்னமாச்சாரியாரின் பாடல்களாக இருக்க வேண்டுமென தேவஸ்தானத்தி

ன்ர் விரும்பினர். இதையும் வரப்பிரசாதமாகக் கருதி ஏற்ற எம். எஸ். தமக்கே உரிய ஊக்கத்துடன் உளமார்ந்த ஈடுபாட்டுடன், இந்த ஸங்கீர்த்தனங்களைப் பயிலலானார். ஏற்கனவே நல்வடிவில் வர்ண மெட்டமைந்த ஒரு சில பாடல்களைப் பாடமாக்கிக் கொண்டதோடு, மேலும் பலவற்றுக்குத் தக்கோரின் துணை கொண்டு இசையமைத்துக் கொண்டார்.

இவ்வாறு இசைத் தேனில் ஊறப் போட்ட இனிய பக்திச் கனிகளாகத் தாள்ளப்பாக்கம் அன்னமாச்சாரியரின் எட்டுப் பாடல்களைக் கொண்ட முதல் எல். பி. வருகிற அக்டோபர் முதல் தேதி விஜயதசமிப் புண்ணிய தினத்தில் (அன்றைக்கே வேங்கடேசப் பெருமானின் பிரம்மோத்ஸவப் பூர்த்தி நன்னாளுமாகும்) ஸாக்ஷாத் பெருமானின் ஆலயத்தில் அவன் பாதத்திலேயே அர்ப்பணிக்கப்படுகிறது.

அக்டோபர் 4-ந் தேதி பாரத ராஷ்டிரபதி ஸ்ரீ நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் தில்லி



ஏழுமலையப்பன்

மாநகரில் வெளியிடுகிறார்கள். அடுத்த சில நாட்களில் பாரதத்தின் வேறு சில முக்கிய நகரங்களான திருவனந்தபுரம், சென்னை, ஹைதராபாத், பெங்களூர், பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களிலும் இசைத்தட்டு வெளியிடப்பட இருக்கிறது. புட்டபர்த்தி புண்ணிய க்ஷேத்திரத்தில் பகவான் இசைத் தட்டு வெளியீட்டை அனுக்கிரஹம் செய்வார்.

பௌளியில் அமைந்த 'ஸ்ரீமந் நாராயண' சூர்யோதயத்திலும் செவ்விய கருணோதயத்தை நம் அகத்தே ஒளிவீச, இசைத்தட்டு தொடங்குகிறது. அவ்வொளி ஆபோகி, கத்தன்யாஸிப் பாடல்களில் மேலும் பொலிவுற்று, மஹாலக்ஷ்மிக்கு மங்களஹாரத்தியாக அமைந்த குறஞ்சி ராகப் பாடலில் நீரஞ்சனமாக ஜொலிக்க முதற்பக்கம் முடிகிறது. மறுபுறம் ஐயனை ஊஞ்சலாட்டும் கமாஸ் பாடலில் நம் நெஞ்சையும் ஊஞ்சலாட்டி, அதன்பின் முறையே கண்ணனையும், ராமனையும் இரு பாடல்களால் நம் கருத்தில் கனிவித்து விட்டு, முடிவாக இந்த உலக நாடகத்திலிருந்து நம் சித்தத்தை உத்தமன் பாதத்துக்கு ரேவதி ராக கீதத்தின் மூலம் தூக்கி விடுகிறார் ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள்.

கால் கடுக்கக் கடந்த திருமலைக்கு இன்று ஆகாய விமானம் வந்து விட்டது. ஸ்ரீமதி எம். எஸ்ஸோ கான சஞ்சாரத்தின் மூலம் விமானப் பயணத்திலும் உயர்ந்த நிலைக்கு உள்ளத்தைத் தூக்கி, விமானத்தை விடவும் சுகமாக, விரைவாக — அதே போதில் புனிதத்திலும் புனிதமாக — செவிமடுத்த மாத்திரத்தே ஸ்ரீனிவாஸன் ஸந்நிதியில் நம்மைக் கொண்டு நிறுத்தி விடுகிறார்.

இறைவனோடு ஒன்றிய இசையில் எம்.எஸ். குழைந்து இசைகிறாரெனில், அன்னையோடு இழைந்து இசைந்து ஸப்தகிரியானுக்கான இந்த ஸப்த ஸ்வர ஆபரணத்துக்கு மேலும் மெருகூட்டுகிறார் ஸ்ரீமதி ராதா விசுவநாதன்.

த்வாரம் ஸ்ரீமதி மங்கதாயாரு, ஸ்ரீ டி. கே. மூர்த்தி, ஸ்ரீ வி. நாகராஜன் முதலிய கலைஞர்கள் உறுதுணையாக வாத்தியங்கள் இசைத்துச் சிறப்பித்திருக்கிறார்கள்.

[திருமலை—திருப்பதி தேவஸ்தானம் அக்கிராசனர் டாக்டர் என். ரமேசன் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் எழுதப் பெற்றது.]

மனிதன் என்பவன்...

ஜே. வி. நாதன்



அந்த விரைவுப் பேருந்து கோயமுத்தூரிலிருந்து கிளம்பிக் காங்கயத்தில் டிபனுக்கு நின்று மீண்டும் கிளம்பியபோது எனக்கு முந்திய ஆசனத்திருந்த நபர் எழுந்து இருப்புக் கொள்ளாமல் தவித்து, சன்னல் வழியாகப் பார்வை எட்டு மட்டும் கழுத்தை வளைத்து யாரையோ தேடினார். ''இந்தாப்பா, கண்டக்டர்! கொஞ்சம் வெயிட் பண்ணு. எனக்குப் பக்கத்து ஸீட்காரர் இன்னும் வரலே. அவர் திருச்சி வரைக்கும் போகிறவர்...''

ஓட்டுநர் ஆரன் ஓசையை எழுப்பியபடி வண்டியை மெல்ல நகர்த்திப் பேருந்து நிலையத்தினின்றும் வெளியில் கொண்டு வந்து நிறுத்தி, நடத்துனரின் முகத்தைப் பார்த்தார்.

''ரைட், போகலாம்!'' என்று கூறிவிட்டு, தம் ஆசனத்துக்கு அருகிலிருந்த சிறு தகரப் பெட்டியிலிருந்து டிக்கட் புத்தகங்களை எடுத்தார் நடத்துனர்.

''என்னய்யா, கண்டக்டர், நான் சொல்லிக்கிட்டே யிருக்கேன். நீ பாட்டுக்கு ரைட் கொடுத்துப் போகச் சொல்றியே? திருச்சிக்கு டிக்கட் எடுத்த மனுசன் பஸ் ஏறலியே பாவம், என்ன அவசர வேலையாக் கிளம்பினாரோ?''

நடத்துனர் தம் மணிக்கட்டிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தார்.

''இன்னும் ஒரு மணிக்கு அப்புறம் ஒரு எக்ஸ்பிரஸ் வருது. அதில் அவர் சாவகாசமாக ஏறி வரட்டும்'' என்று நிதானமாகக் கூறி நடத்துனர், ஓடுகிற பஸ்ஸினுள் புதிய பிரயாணிகளை நெருங்கி டிக்கட்டுகளைத் துளையிட்டுக் கொடுப்பதிலும், பணத்தைப் பெற்றுக் கொண்டு மீதியைத் தருவதிலும் ஈடுபட ஆரம்பித்தார்.

''என்ன அழுத்தம் பாருங்க, கொஞ்சம் பஸ் லேட்டாப் போனா என்ன குடியா முழுகிடும்? டிக்கட் வாங்கின மனுஷன் மாறிப் போய்க் கோயமுத்தூர் போகிற பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து விட்டாரோ என்னவோ? ஒரு நிமிஷம் நின்னு பார்த்துட்டுப் போறதுக்கு என்ன கேடு?'' என்று புலம்ப ஆரம்பித்தார், என் முன்னே அமர்ந்திருந்த பருத்த ஆசாமி.

பேருந்துக்குள் நடத்துனருக்கு ஆதரவாகவும், என் முன்னே அமர்ந்திருந்த பிரயாணிக்கு ஆதரவாகவும் வார்த்தை ஒட்டுக்கள் சிதறின.

சுமார் ஒன்றரை மணி பயணத்துக்குப் பின் பஸ் விரைவு குறைவது தெரிந்தது. கரூர் பேருந்து நிலையத்தில் பஸ் நுழைந்தது.

''கரூர் டிக்கட் மாத்திரம் இறங்குங்க. மத்த பாசஞ்சர்கள் யாரும் எழுந்திருக்காதீங்க. பஸ் இங்கே நிற்காது...'' நடத்துனர் குரல் கொடுத்தார்.

கதவைத் திறந்து பிரயாணிகளை இறக்கிவிட்டு, சில புதுப் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு கதவை அடித்துச் சாத்தினார். ''ரைட்!'' என்று குரல் கொடுக்க, ஓட்டுநர் பஸ்ஸை விரைவாகச் செலுத்த ஆரம்பித்தார்.

புதிதாக ஏறிய ஐந்துபிரயாணிகளில் இருவர் பெண்கள். வசதியான இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கழுத்திலும் காதிலும் அணிந்திருந்த அணிமணிகள், புடவைகள் பறைசாற்றின. இருந்தும் அவசரம் அவசரமாகப் புறப்பட்டு வந்த அலங்கோலம் முகத்திலும், கலைந்திருந்த தலையிலும் புலப்பட்டது. கண்கள் சிவந்திருந்தன. அவர்கள் அழுகிறார்கள்?

இப்போதுதான் கவனிக்கிறேன். அந்த ஆண்களும் கூட வாயில் தங்கள் மேல் துண்டைப் பந்தாக உருட்டித் திணித்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தார்கள்.

பஸ்ஸில் இருந்த மற்றவர்களுக்கும் சுவாரஸ்யம் பிறந்திருக்க வேண்டும். ''ஏங்க, என்ன ஆச்சு?... என்ன ஆச்சு?'' கேள்விகள். அனுதாபக் குரல்கள். விஷயத்தை அறிந்து கொள்ளும் ஆவல் நிரம்பிய பார்வைகள்.

ஓர் அம்மாள் உடைந்து, குரல் எடுத்து அழுதாள்.

''பாவி மகன் காளியம்மன் திருவிழாவுக்குப் போய்த்தான் ஆவேன்னு ஒத்தக் காலால் நின்னானே! தாய் மாமன் எழுதின கடுதாசியைப் பார்த்துட்டுப் புள்ள துடிக்குதேன்னு அனுப்பித் தொலைச்சம்மா. இந்த வைகாசிக்கு இருபது வயசு முடியுது. ஊர்ல ஆதிமூலம்னா நல்ல செல்வாக்கு. பெரசிடெண்டு, சேர்மன், எம். எல். ஏ. எல்லாரிட்டயும் நெருக்கமா பழக்கம். மாமன்காரனோட தோப்புக்குப் போன எம்புள்ளைதான் கெடச்சதா அந்த 'நல்ல' சனியனுக்கு, போட்டுடுச்சு... எம்புள்ளை போயிட்டானே!'' அந்தத் தாயின் அழுகை பஸ் பிரயாணிகள் அனைவர் நெஞ்சையும் உருக வைத்தது.

''பாக்கியம், வேணாம். ஊருக்குப் போயி அழுதுக்கலாம். கொஞ்சம் நிதானப்படு... உம்!'' என்றார் ஒருவர், அடங்கிய, அழுத்தமான குரலில்.

நடத்துனரிடம் பணத்தை நீட்டியவர், ''குளித்தலைக்கு டிக்கட் வாங்கணுமுங்க கண்டக்டர். ஆறு குளித்தலைக்கு ஒரு நாலு



மைல் முன்னால் எங்களை மாம்பட்டிக்கிட்டே இறக்கி உட்டுடுங்க'' என்று சொன்னார்.

டிக்கெட்டுக்களைத் துளையிட்டு நீட்டிய நடத்துனர் ''குளித்தலையில்தான் பஸ் நிக்கும்'' என்று கூறிவிட்டுத் திரும்பினார்.

''கண்டக்டர் ஐயா, நீங்க மனசு வைச்சா முடியும். நாங்க அவசரமாப் போகணும்னுதான் இதில் ஏறினோம். செத்துப்போன பையனுக்கு நாங்க ரொம்ப முக்கியப்பட்டவங்க.''

''நீங்க குளித்தலைன்னு சொல்லித்தானே பஸ் ஏறினீங்க? முதலிலேயே சொல்லியிருந்தால் ஏற்றியிருக்கவே மாட்டேனே. மன்னிச்சுக்குங்க. குளித்தலைக்கு முன்னால் எங்கேயும் பஸ் நிக்காது!'' என்று அழுத்தம் திருத்தமாக வார்த்தைகள் வெளிப்பட்டன நடத்துனரிடமிருந்து.

பஸ்ஸில் மறுபடியும் வாதப் பிரதிவாதங்கள் எழத் தொடங்கின.

''இந்தக் கண்டக்டர் ரொம்பத் திமிர் பிடித்தவன் போலிருக்கே ஈவு இரக்கம் இருக்கா பாரேன்! பஸ் போகிற வழிதானே அங்கே ஒரு நிமிஷம் நிறுத்தினா இவனுக்கு என்ன வந்திச்சு?''

''காங்கயத்தில ஒரு ஆளை பஸ் ஸ்டாண்டில அம்போன்னு விட்டுட்டு வந்ததைப் பார்க்கலை!''

''டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மானேஜிங் டைரக்டருக்கு ஒரு ரிப்போர்ட் எழுதணும். இவனைச் சும்மா விடக் கூடாது.''

எதற்கும் அசையாத இடித்த புளியாய் நடத்துனர் முன்னால் விரைந்து வந்து பஸ்ஸின் கோரப் பசிக்குக் கபளீகரமாகிற சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

உள்ளபடியே மிகவும் உருக்கமாக இருந்தது சாவுக்குச் செல்லும் அந்தப் பிரயாணிகளது நிலை. விரைவு வண்டி என்றால் வழியில் நிறுத்தக் கூடாது என்று சட்டமா?

எனக்குக் கோபம் வந்தது. என்ன செய்ய? மனிதர்கள் — சட்டங்கள்...

கொஞ்ச நேரம் ஜன்னல் வழியே தெரியும் இரு கரையைத் தொட்டுக் கொண்டு பஸ்ஸின் கூடவே ஓடிவரும் சிற்றோடையை, ஆங்காங்கே செழித்துத் தெரிந்த வாழைத் தோட்டங்களை, நெல் வயல்களை, மாந்தோப்புக்கள், கரும்புப் பயிர்களை ரசித்தவன், அலுப்பில் கண்களை மூடினேன். முந்தின நாள் கோவையில் நடந்த மகாநாடு ஒன்றில் கலந்து கொண்டு அது தொடர்பாக நள்ளிரவு வரையில் கண் விழித்திருந்த அயர்ச்சி.

குளித்தலை பேருந்து நிலையத்தில் பஸ் நின்றது. பத்து நிமிடங்கள் நிற்கும் என்று நடத்துனர் அறிவிப்புச் செய்தார். சாவுக்கென வந்தவர்கள் வேகமாக இறங்கி எதிரே நின்ற ஒரு டாக்ஸியில் ஏறி உட்கார்ந்ததைப் பார்த்தேன். ஓட்டலில் காப்பி பருகச் சென்றவர்கள், வெகு நேரம் கால்களை ஒரே மாதிரி மடக்கி அமர்ந்த வலி மறக்கச் சிறிது காலாற இறங்கியவர்கள், சிகரெட்டை மறந்திருந்த வருத்தத்தைப் போக்கிச் சுகம்

காண பெட்டிக்கடை தேடிப்போனவர்கள்... பஸ்ஸில் முக்கால் பகுதி காலியாகி விட்டது. நான் எழவில்லை. அரைத் தூக்கத்திலேயே இருந்தேன்.

மீண்டும் ஆரன் ஒலித்து, எல்லோரும் அவசரமாக ஏறி, கண்டக்டர் கதவை அடித்துச் சாத்திய பின் பஸ் நகர்ந்து திருச்சிப் பாதையில் போக ஆரம்பித்த வரை ஞாபகம் இருந்தது. அப்புறம் சுகமான தூக்கம். மெய் மறந்த நிலையில் கற்பனை மயக்கம்.

திடுமென நான் அதள பாதாளத்தில் கீழே கீழே கால் தரை பாவாமல் மிதந்து இறங்குவதான உணர்வு. இப்போது எங்கே இருக்கிறேன்? வீட்டிலா கோவை மகாநாட்டிலா?

விழிப்பு வந்தபோது பஸ் ஓடாமல் நிற்பது தெரிந்தது. திருச்சி வந்து விட்டதா. என்ன?

இல்லை, இது திருச்சி இல்லை. ஒரு கடை முகப்பு விளம்பரத்தில் 'குளித்தலை' என்று போட்டிருப்பது கண்ணில் பட்டது. பஸ் இன்னும் குளித்தலையைத் தாண்டவேயில்லையா? ஏன்? என்ன ஆயிற்று?

பஸ்ஸினுள் மிகச் சிலரே அமர்ந்திருந்தனர். பெரும்பாலோர் கீழிறங்கி ஆங்காங்கு நின்றிருப்பது தெரிந்தது. ஓட்டுநரும் நடத்துனரும் தெருவோரத்தில் பீடியைப் புகைத்துக் கொண்டு பேசி நின்ற காட்சி ....

நான் பரபரப்புடன் இறங்கினேன். பஸ் ஏதும் பழுதடைந்து விட்டதா?

''ஏன் ஸார், என்ன ஆச்சு? பஸ் ஏன் நின்னுடுச்சு?''

கீழே நின்றவர்களில் ஒருவர் என் கேள்விக்குப் பதில் சொன்னார்.

''கோயமுத்தூர்ல கைக் குழந்தையோட ஒரு ஐயர் வூட்டு அம்மா ஏறிச்சு பாருங்க.. அதுங் கைக் குழந்தைக்குத் திடீர்னு ஃபிட்ஸ் வந்துடுச்சு. கணை இழுப்பு மாதிரி வெட்டி வெட்டி இழுக்க ஆரம்பிச்சுடுச்சு. பஸ் ஸ்டாண்டுல பஸ் புறப்படற வரைக்கும் நல்லாத்தான் குழந்தை சிரிச்சுக்கிட்டிருந்தான். அப்புறம்தான் ஸார், பாவம். ஒன்னரை வயசுக் குழந்தை: அயருட்டு அம்மா அழுது துடிக்கிறதைப் பார்க்கச் சகிக்கலே. கண்டக்டரும் டிரைவரும் நல்ல மனுஷங்க. நேரே கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரிக்குக் கொண்டாந்து வண்டியை நிறுத்திட்டாங்க. டாக்டர் குழந்தைக்கு ரெண்டு ஊசி போட்டப்புறம் இப்பத்தான் குழந்தையோட வலிப்பு நின்னிருக்கு. ஒரு நிமிஷம் கூட விணாக்காம பஸ்ஸை இங்கேயே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரலேன்னு குழந்தை பஸ்ஸிலேயே பரலோகம் போயிருக்கும்.''

பஸ்ஸில் எனக்கு முன் ஆசனத்துப் பிரயாணி அருகே வந்து கூறினார்:

''கண்டக்டரைப் பத்தி நான்கூட காங்கயத்துல கொஞ்சம் வருத்தப்பட்டுக்கிட்டேனுங்க. ஆனா இப்பத்தான் அவரோட தங்கமான குணம் தெரியுது. கரூர்ல கூட சாவுக்கு ஏறின சிலவங்க கேட்டபடி குளித்தலைக்கு முன்னால் ஸ்டாப்பிங் இல்லாத எடத்துலே பஸ்ஸை நிறுத்தலியேன்னு எல்லோரும் கோபிச்சுக்கிட்டாங்க. 'செத்துப்போன ஒருத்தருக்காகச் சட்டத்தை மீறுவதை விட, ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்காகச் சட்டத்தை மீறலாம் — அதுக்காக என்ன தண்டனை கொடுத்தாலும் வாங்கிக்கத் தயார்'னு கண்டக்டர் சொல்றார் ஸார். 'கரூரில் பஸ் ஏறும்போது உண்மையாக விவரத்தைச் சொல்லியிருந்தால் ஒருவேளை பஸ்ஸை அவங்க கேட்ட இடத்தில் நிறுத்தியிருப்பேனோ என்னவோ, குளித்தலைன்னு பொய் சொல்லி ஏறிவிட்டு, பின்னால் விஷயத்தைச் சொல்லி வேறு ஊர்ல இறங்கணும்னு கேட்டதை நான் ஒத்துக்க முடியலே' என்று கண்டக்டர் சொல்றதிலேயும் நியாயம் இருக்கு ஸார்...''

அரை மணி கழித்து அபாயக் கட்டம் தாண்டிய நிலையில் குழந்தையுடன் தாயும் வந்து பஸ்ஸில் ஏறியதும் பஸ் புறப்பட்டது.

''அப்பா, கண்டக்டர், நீ மகாராஜனா இருக்கணும். தெய்வம் கோயில்ல இருக்குன்னு சொல்வா; இல்லேப்பா. நீதான் எங்க குலதெய்வம்!'' என்று கண்களில் நீர் வழிய அந்தக் குழந்தையின் தாய் கை கூப்பி வணங்கியபோது எனக்கு உடம்பு சிலிர்த்தது. பஸ்ஸில் கிட்டத்தட்ட எல்லோருடைய நிலையும் அதுதான் என்று எனக்குத் தோன்றியது.



மகாத்மா ஒரு சமயம் லாகூரில் தங்கியிருந்த போது பிரபல டாக்டர், 'உங்களுக்கு உடம்பு சரியாயில்லே. பிரயாணத்தின் போது சிரமம் உண்டாயிற்று என்பது தெரிந்தது. ஆகவே உங்களைப் பரிசோதனை செய்து பார்க்க விரும்புகிறேன்' என்றார். ''சரி செய்யுங்கள். ஆனால் எனக்கு அப்படி ஒன்றும் உடம்பில்லையே''? என்றார் காந்தி.


டாக்டர் (பக்தியால்) தழு தழுத்த குரலில், ''ஆனால் பரிசோதித்துப் பார்க்காதவரை எனக்குச் சமாதானமாய் இராது'' என்றார். ''சமாதானத்திற்கென்றால் சரி. ஆனால் எனக்கு பீஸ் கொடுக்காதவரை நான் எவரையும் என்னைப் பரிசோதிக்க விடுவதில்லை. பார்க்க வந்தவர்கள் எத்தனையோ பேர் காத்துக் கொண்டிருக்கையில் உங்களுக்காக வீணில் எதற்காக நேரம் செலவிடுவது?'' என்றார் பாபூ.

அந்த நல்ல டாக்டர் தம் பையிலிருந்த 16 ரூபாயை எடுத்து பாபூவின் முன் வைத்து ''ஒரு visitக்கு போயிருந்தேன்; அங்கே கிடைத்ததைத் தங்கள் முன் வைத்து விட்டேன்'' என்றார். பாபூ திருப்தியுடன் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு அரிஜன நிதியில் சேர்த்து விட்டார்.

(காகா காலேல்கரின் காந்திக் காட்சிகள் என்ற நூலிலிருந்து)

- எஸ். இராஜகோபாலன்

அருள்வாக்கு



உத்தரமேரூர் உத்தமத் தேர்தல் முறை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

[மக்கள் பிரதிநிதிகள் நடந்து கொள்ளும் போக்குகளைக் கண்டு இன்று நாம் மனம் வெதும்புகிறோம். மறுபடியும் தேர்தல் என்னும்போது பல முறையின்மைகளை நினைத்து அஞ்சுகிறோம். இச்சமயத்தில், சுதந்திரம் வருவதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே 1945லும், நாம் குடியரசாவதற்கு ஓராண்டு முன்பு 1949லும் ஸ்ரீ பெரியவர்கள் சோழர் காலத் தேர்தல் முறைகளை விளக்கிக் கூறிய தீர்க்கதரிசன வாக்குகளை இசைத்துத் தருகிறோம்.]

1

பல நூற்றாண்டுகளுக்கு முன் சோழ ராஜாக்களின் ஆட்சியில் ஊர்க் காரியங்களைக் கவனிப்பதற்காக, இந்நாளில் ஸ்தல ஸ்தாபனம் (Local Body) என்று நகர ஸபைகளும், பஞ்சாயத்துக்களும் உள்ள மாதிரி ஸபைகள் இருந்திருக்கின்றன. இந்த நாளில் 'வார்டு' என்கிற மாதிரி ஒவ்வொரு கிராமத்தையும் பல ''குடும்பு''களாகப் பிரித்திருந்தார்கள். இந்த ஸபைகளின் அங்கத்தினர்களை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்பதைக் காஞ்சீபுரத்துக்கு அருகில் உள்ள உத்தரமேரூர் என்ற பேரூரிலும், கும்பகோணம் தாலுக்காவில் குடவாசலுக்குப் பக்கத்தில் உள்ள நாலூர் திருமயானம் என்ற சிற்றூரிலும் உள்ள கல்வெட்டுக்களிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம். இதில் முக்கியமான அம்சம் ஊராட்சி ஸபையின் 'மெம்பர்ஷிப்' பாரம்பரியமாகவோ, அல்லது ராஜாங்க நியமனமாகவோ (கவர்ன்மெண்ட் அப்பாயிண்ட்மெண்டாகவோ) இல்லாமல், ஜனங்களே 'எலக்ட்' செய்வதாக இருந்தது தான்.

இந்த இரண்டு கல்வெட்டுக்களில் அதிகப் பிரஸித்தி அடைந்ததும், விவரமாக இருப்பதுமான உத்தரமேரூர் சாஸனத்தைப் பற்றிச் சொல்கிறேன்:


ஓர் ஊரில் பொதுக் காரியங்களில் ஏதாவது குறை ஏற்பட்டிருந்தால், முறையின்மை நடந்திருப்பதாகத் தெரிந்தால், அதை விசாரித்து நிவிருத்தி செய்வதற்காக சோழ ராஜா தகுந்த அதிகாரிகளை அனுப்பி வைப்பான். இப்படி 800 வருஷங்களுக்கு முந்தி வீர நாராயண பராந்தக தேவ பரகேஸரி வர்ம சோழ மகாராஜா, தத்தனூர் மூவேந்த வேளான் என்னும் அதிகாரியை ஒரு தடவையும், அதற்கு மூன்று வருஷங்களுக்கு அப்புறம் ஸ்ரீ வங்க நகர் ஸோமாசிக் கிரமவித்த பட்டன் என்னும் அதிகாரியை இன்னொரு தடவையும் உத்தரமேரூருக்கு அனுப்பி, தேர்தல் முறைகளைச் சீர்ப்படுத்தியிருக்கிறான். இதைத்தான் உத்தரமேரூர் சாஸனங்கள் விவரமாகத் தெரிவிக்கின்றன.

இவர்களில் வேளான் என்பவன் வேளாளர் ஜாதி. 'ஸோமாசி', 'கிரமவித்தன்', 'பட்டன்' என்கிற மூன்று வார்த்தையுமே பிராம்மண ஜாதியைக் குறிப்பிடுபவைதான். ஸோமாசி என்றால் பக்ஷணம் இல்லை; ஸோம யாகம் செய்த 'ஸோமயாஜி'தான் தமிழில் 'ஸோமாசி' ஆகிறது. (ஸுந்தர மூர்த்தி நாயனார் சரித்திரத்தில் 'சோமாசி மார நாயனார்' என்று ஒருத்தர் வருகிறார்.) வேத அக்ஷரங்களைப் பல தினுஸாக மாற்றிச் சொல்வதில் வர்ணம், கிரமம், ஜடை, கனம் என்று பல முறைகள் உண்டு. 'கனம்' வரையில் பாடம் படித்தவர்தான் கனபாடி. இப்படியே 'கிரமம்' வரை தெரிந்தவன் 'கிரமவித்'. அநேகக் கல்வெட்டுக்களில் பல ''கிரமவித்தர்''களின் பெயர் இருப்பதிலிருந்து தமிழ் நாட்டில் அப்போது ஏராளமாக வேத அத்யயனம் பண்ணினவர்கள் இருந்ததாகத் தெரிகிறது. 'பட்டர்' என்பதும், 'அய்யர்' 'சாஸ்திரி' என்ற மாதிரி அக்காலத்தில் பிராம்மணரைக் குறிப்பிட்ட பதம்தான்.

உத்தரமேரூர் கல்வெட்டுக்களிலிருந்து, கிராம ஸபைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அபேக்ஷகருக்கு அநேக யோக்யதாம்சங்கள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்கிறோம். அபேக்ஷகரின் 'க்வாலிஃபிகேஷ'னுக்கு ஒரு லிஸ்டே கொடுத்திருக்கிறது.

(தொடரும்)

காகிதம் பொன்போன்றது அதனை வீணாக்காதீர்கள்!



இன்று கல்வி வளர்ச்சிக்கும் செய்தித் தொடர்புக்கும் இன்ன பிறவற்றிற்கும் காகிதம் இன்றியமையாததாகி விட்டது. வருங் காலச் சந்ததியினரின் அறிவு வளர்ச்சிக்கும் காகிதம் பெரிதும் பயன்படும். காகிதம் பற்றாக்குறையினால் அதன் அருமையை மேலும் உணரும் காலம் வந்துவிட்டது. எனவே காகிதத்தை பயன்படுத்துவதற்குமுன் நன்கு திட்டமிட வேண்டும்.

- செய்திகளைச் சுருக்கமாக எழுதுங்கள்.
- ஒரு பக்கம் பயன் படுத்தப் பட்ட காகிதங்களை பத்திரப் படுத்தி, மீண்டும் பயன் படுத்தலாம்.



- மாணவர்கள் பழைய நோட்டுப் புத்தகங்களில் பயன்படுத்தாத காகிதங்களை ஒன்று சேர்த்து குறிப்பேடு களுக்குப் பயன்படுத்தலாம்.



- ஒரு பக்கத்தில் அச்சிடப்பட்ட அழைப்புகள், நாட்காட்டித் தாள்கள், இவற்றையும் வீணாக்கிவிடாமல் சேர்த்து மறுபக்கத்தில் எழுதுங்கள்.



- சினிமா, நாடக, பொதுக் கூட்ட, கலை நிகழ்ச்சிகள் பற்றிய விளம்பரச் சுவரொட்டிகளை மிகவும் சிக்கனமாகப் பயன் படுத்துவது நல்லது.



இப்படியெல்லாம் நாம் எல்லாத் துறைகளிலும் சிந்தித்துத் திட்டமிட்டுக் காகிதங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியமாகிவிட்டது.

இப்போது காகிதத்தைச் சேமிப்போம்!
எதிர்காலச் சந்ததியினருக்கு உதவுவோம்!

7/83 DIPR16 இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

காதல் சிறப்பிதழிடம் காதல் கொண்டோம்!



வட்டமேஜை

● காதல் மணக்கும் அந்த 'நிறம் மாறுத பூக்கள்' —சுதாகர்-ராதிகாவின் தோற்றம் தாங்கிய அட்டைப் படமே அருமையாக இருந்தது. காதல் சிறப்பிதழில்—காதலைப் பற்றிய துணுக்குச் செய்திகளும், சிறுகதைகளும் கட்டுரைகளும் இடம் பெற்றிருப்பதைப் போல், ''பூக்குழி'', ''கடல் ராணி'' — தொடர் கதைகளிலும் காதல் காட்சிகள் அமைந்துவிட்டனவே-ஆச்சரியம்தான்!

வீரபாண்டி வதிலை அன்புச் செல்வன்

● அட்டையிலே நிறம் மாறுத பூக்கள் படத்தின் காதல் ஜோடிகளைத் தந்துவிட்டு, விமர்சனத்தில் அப்படத்தைத் தூக்கி எழுதிவிடுவீரோ என்று நினைத்தேன். ஆனால் உள்ளதை உள்ளபடியே எழுதிய உமக்கு சபாஷ்!

செங்கோட்டை சித்ரா ராஜன்

● காதல் மகிமையை அட்டைப் படத்தில் சொல்ல 'கல்கி'க்குச் சினிமா நடிகர்கள் படம் தானு கிடைத்தது? அசல் காதல் ஜோடி கிடைக்கவில்லையா?

மதுரை-1 டி.சி.ஆர். ஜகதீஷ்

● காதல் சிறப்பிதழைப் படித்தவுடன் காதலித்துக் கலப்பு மணம் செய்து கொண்ட எனக்குக் காதல் திருமணம் எவ்வளவு இனிமையோ அதை விட இனிமையாக இருந்தது.

கோடங்கிபாளையம் ஆசிர் எம். அல்போன்ஸ்

● அசாதாரணமான முறையில் காதல் சிறப்பிதழ் வரும் என்று எண்ணிய எங்களை ''அது சாதாரணம்'' என்று உச்ச கொட்ட வைத்துவிட்டீர்கள்.

கரப்பாடி ப. முருகேச பாண்டியன்

● 'காதல் கல்யாணம், மணவாழ்க்கை' உரையாடல் ரொம்ப Top, ரொம்ப Informative ஆக இருந்தது.

மதுரை-16 கே. ஸ்வாமி

● ''காதல் சிறப்பிதழில் இடம் பெற்ற எல்லாச் சிறுகதைகளும் நன்ருக இருந்தன. குறிப்பாக ராஜேந்திர குமார் எழுதிய ''காதல் கிளிகளுக்கு ஒரு சங்கடம்'' கதையில் காதலும் இருந்தது: முடிவில் நெகிழ்வும் இருந்தது.

பவானி-2 க. தணிகாசலம்

● காதல் சிறப்பிதழில் வெளிவந்துள்ள அனைத்து ஜோக்ஸ்களும் மிக அருமை. லவ் ஜோக்கில் உள்ள ''பண்டாரம்'' கூறும் பதிலைக் கேட்டுவிட்டுச் சிரி சிரி என்று சிரித்துவிட்டேன்.

பாம்பாறு எஸ். பி. மணி

● ''பிராமிஸ்ஸா'' துணுக்கைப் படித்தவுடன் அதை அனுப்பியவருக்கு நோபல் பரிசு வழங்கச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லையே என வருத்தம் ஏற்பட்டது. Please remember that Kalki is being read mostly by mentally matured people unlike other magazines.

சென்னை-32 வி. ரங்கராஜன்

● காதல் மதிப்பீடுகள் — ஆண்களிடம் பெண்கள் பெரிதும் பண்பையே விரும்புகிருர்கள் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

திருநெல்வேலி கோதை மாறன்

● கற்பனை மயக்கத்தில் 63 பக்கங்கள் கடந்தவனை நிறுத்தி என்னை எனக்கு உணர்த்தியது 64ம் பக்கம். கலசம் எப்போதும் உச்சியில்தானே இருக்கும்.

விருத்தாசலம் 'பாலரிஷி'


● இலங்கை அமைச்சர் திரு ராஜதுரை அவர்களைப் பற்றித் தலையங்கம் எழுதியிருக்கிறீர்கள். உண்மையிலே இலங்கைத் தமிழர்கள் பெருமைப்படக் கூடிய நபர் அமைச்சர் ராஜதுரை அவர்கள். அவர்களுடைய சேவையையும் இந்து சமுதாய மகாநாட்டுக்காக அவர் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளையும் எழுதியுள்ளீர்கள். அவருடைய பரந்த மனத்தை அண்மையில் அருகிலிருந்து கண்டு மகிழும் வாய்ப்பை நான் பெற்றவன்.

சென்னை-5 சங்கரசுப்பிரமணியன்

● தங்கள் தலையங்கம் தவருன தகவல்களின் பேரில் எழுப்பப்பட்ட கட்டடமாகத் தெரிகிறது. செயவர்த்தனவின் ஆட்சியில் தமிழர்கள் நலம் அடைந்து சுகமாக இருக்கிருர்கள் என்ற பொய்த் தோற்றத்தைத் தருவதாகத் தெரிகிறது. உண்மை அதற்கு மாருகவே இருப்பதாக நான் கருதுகிறேன்.

கள்ளிக்கோட்டை அழகனூர்

வைரங்கள்



சுஜாதா

அத்தியாயம் 9

''என்னை விட்டுறுங்க!''

திலகம் சற்றுத் தயங்கினாள். தாஸ் சட்டென்று யோசித்தான். ''அப்ப ஒன்னு செய்யுங்க. காதர் நீ இவங்கக்கூட இருந்துக்க. நான் கோயமுத்தூர் போயி பெரியசாமியை எங்க அடைச்சு வெச்சிருக்காங்கன்னு விஷயம் எல்லாம் கேட்டு வெச்சுக்கிறேன். பின்னே முதலாளி கிட்ட சொல்லி அவனை விடுதலை பண்ண ஏற்பாடு செய்யிறேன்.''

''விட்டுருவாங்களா?''

''விடாம பின்னே? நம்ப முதலாளிக்குப் போலீஸ்ல நல்ல பழக்கம்! காதர் நீ என்ன செய்யறே, இவுங்களைக் கூட்டிக்கிட்டு பஸ் பிடிச்சு நேரே டவுனுக்கு வந்துரு. அங்கிருந்து ஆட்டோ ரிக்ஷா பிடிச்சு நம்ப பண்ணை பங்களாவுக்கு கூட்டி வந்திரு. நான் அதுக்குள்ள பெரியசாமியை விடுதலை பண்ணிக்கிட்டு அங்க கூட்டியாந்துடறேன்!''

''முடியுமுங்களா?'' என்றாள் ஆவலுடன்.

''தாராளமா! எங்க சின்ன முதலாளி மனசு வெச்சுட்டா முடியாத காரியமே கிடையாது. நீங்க வாங்களேன்! சாயங்காலம் பாருங்க! காதர் கூட்டியாந்துரு என்ன?''

''சரிங்க!''

''இந்தா'' என்று ஒரு பத்து ரூபாய் நோட்டைக் காதரிடம் கொடுத்தான் தாஸ்.

அவன் லாரி ஏறிச் செல்ல ''எவ்வளவு நல்லவங்க!'' என்றாள் திலகம். ''அவங்க விடுதலை ஆயிடுவாங்களா காதரு?''

''நீங்க ஏம்மா கவலைப்படறீங்க? நாங்க பாத்துப்பம் இனிமே'' என்று கடன் வாங்கிய பொறுப்புடன் பதிலளித்தான் காதர்.

சீக்கிரம் போயிரலாம்!''

''அவசரம் இல்லே. நிதானமா வாங்க!''

மனோகரிக்கு டவுனுக்குப் போகப் போகிறோம் என்று டான்ஸ் ஆடிப் புரிய வைத்தான்.

மனோகரி தன் முகத்தில் மீசை போட்டுக் காட்டியது.

''என்னங்க சொல்றது?''

'' 'அப்பாவைப் பார்க்கப் போறமா'ங்குது. ஆமாண்டி!''

''டவுன்ல சின்ன எதுமானுக்கு ஒரு ஜவுளிக் கடையே இருக்குது. பெரிய கடை. சட்டை சீரியா கொடுப்பாங்க. உனக்கு மிட்டாய் வாங்கித் தாரேன். பணியாரம் வாங்கித் தாரேன்! பறவைங்க எல்லாம் கண்ணாடிப்

தன்னுடைய வழக்கை வாதி மிகவும் சாமர்த்தியமாக எடுத்துரைத்தான். அதைக் கேட்டதும் மத குரு கூறினார்: ''உன் பக்கந்தான் நியாயம் இருப்பதாகத் தெரிகிறது.'' உடனே பிரதிவாதி குதித்தெழுந்தான். ''நான் சொல்வதைக் கேளுங்கள்'' என்று சொல்லிவிட்டு அவனும் மிகச் சாமர்த்தியமாகத் தன் வழக்கை எடுத்துரைத்தான். மதகுரு கூறினார்: ''உன் பக்கம்தான் நியாயமிருப்பதாகத் தெரிகிறது.'' பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்த மத குருவின் மனைவி கேட்டாள்: ''என்ன தீர்ப்பு இது! இரு தரப்பிலும் எப்படி நியாயம் இருக்க முடியும்?'' மத குரு மனைவியைப் பார்க்கத் திரும்பிச் சிறிது நேரம் யோசித்து விட்டுக் கூறினார்: ''நீ சொல்வதிலும் நியாயமிருக்கிறது!''

-கனகாம்புஜம்



பெட்டிக்குள்ளே இருக்குதா. நீ வாயேன், என்னவெல்லாம் காட்டுறேன் பாரு...''

மனோகரிக்குப் புரியவில்லை. ஆனால் அம்மா அழுகையை நிறுத்தி விட்டது புரிந்தது. அது சந்தோஷமாக இருந்தது. வெளியே எங்கோ புறப்பட்டு ராத்திரியி லிருந்து பார்க்காத அப்பாவைப் பார்க்கப் போகிறோம் என்பது புரிந்து விட்டது. அது உற்சாகமாக இருந்தது.

காதர் பொறுப்பு வந்து வளர்ந்தவன் போல் நடந்து கொண்டான். சோகமாக முகத்தை வைத்துக் கொண்டான்.

''சாப்ட்டுருக்கம்மா! நீங்க ராத்திரியில இருந்து சாப்பிடல போல இருக்குது!''

''இனிமே சமைக்க டயம் இல்லே. ராத்திரி மிச்சமே இருக்குது. குழந்தைக்குப் போதும்!''

''உங்களுக்கு?''

''எனக்குப் பார்த்துக்கலாம்!''

''ம்ஹூம்! இத பாருங்க. கடைல பன்னு இருக்குது. அது ரெண்டு மூணுவது சாப்ட் டுட்டு வாங்க. அப்பதான் அனுச்சுகிட்டுப் போவேன்!''

''இந்தா காதர் நீயும் சாப்பிடு'' என்று மனோகரி காட்டியது. அதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சாப்பிட்டான்.

பஸ், ஸீட், வேகம், காற்று, கண்டக்டர், விசில், கூட்டம், ரெயில்வே கிராஸிங் நகரம், மஞ்சள் ஆட்டோ ரிக்ஷா போன்ற வார்த்தைகள் தெரியாத குழந்தை மனோகரிக்கு, கண் பார்வை மூலம் பதிவாகிய அத்தனை வடிவங்களும் கிரகிக்க முடியாமல் திகட்டின. அடிக்கடி அம்மாவைத் தொட்டுக் கொண்டாள். விரலைக் கடித்துக் கொண்டாள் காதர் சிரிப்பது புரிந்தது. அம்மாவின் உஷ்ணம் புரிந்தது. காதர் நல்லவன் என்பதும் ஒரு விதத்தில் வார்த்தைகளற்றுப் புரிந்தது. பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது அவளுக்குள் நிறைய 'நல்ல' ஏற்பட்டது. உற்சாக ஊமை ராணி.

தன் தலைமேல் இரண்டு கொம்பு வைத்துக் காட்டிக் கேட்டாள்.

''மாடு கிடையாது. தானாகவே ஓடும்'' என்றான் காதர்.

கண்டக்டர் நிலகத்தைப் பார்த்து,

''என்ன! இவர் பிரயாணம்? பெரியசாமி இல்லையா?'' என்றான்.

''இல்லிங்க!'' என்றாள் நில நிமிராமல்.

''டவுனுக்குப்போயிருக்கானு?''

''ஆமா!''

கண்டக்டர் அந்த இடத்தை விட்டு அகலவில்லை.

பஸ் ஸ்டாண்டில் இறங்கினதும் காதர் ஒரு ஆட்டோரிக்ஷாவை நியமித்தான். மூவரும் அதில் உட்கார்ந்து செல்லத் நிலகத்திடம், ''இதான் ஜெயில் ரோடு'' என்றான்.

''இங்கதான் அடைச்சு வெச்சிருக்காங்களா?''

''யாரை?''

''அவரை!''

''இந்நேரம் வெளிய வந்திருப்பாரும்மா!''

''இந்தக் கடையில பொம்பளைங்க மட்டும் தான் வாங்கலாம் ... இது காந்தி புரம். மேட்டுப்பாளையம் ரோடு. இதான் விபி ரோடு'' என்று கோயமுத்தூரை விவரித்துக் கொண்டு வந்தான். நிலகம் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு வந்தாலும் வயிற்றில் ஏதோ சங்கடம் பண்ணியது. மனோகரிக்குத் திறந்த வாய் மூடவில்லை.

ஆட்டோரிக்ஷா நடாகம் ரோடைக் கடந்து மருதமலை ரோடில் சென்றது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து இன்னும் ஒரு மைல் போனதும் ''இங்கதாங்க' என்று நிறுத்தினான். தன் நிஜார் பையிலிருந்து பெருமிதத்துடன் காசு எடுத்துக் கொடுத்தான். ''வாங்க'' என்று ஒரு கம்பிக்கதவைத் திறந்தான். பாறைக் கம்பங்களும் முள் வேலியுமாகப் பெரிய பண்ணை போல இருந்தது. தூரத்தில் உள்ளுக்குள் மர நிழலில் ஒரு வீடு தெரிந்தது. அதற்குச் செல்லும் பாதை குறுகலாக இருந்தது. இருபுறமும் பசுமை மண்டிக் கிடந்தது.

அந்த வீட்டின் பின்புறத்திலிருந்து மெலிதாகப் புகை வந்து கொண்டிருந்தது. குப்பை, காய்ந்த இலைகள் எரியும் வாசனை வந்தது. சிறிய வீடுதான். அழகான வீடு. பெரிய தான்குமஞ்சி மரத்தின் மடியில் இருந்த வீடு.



வாசலில் தூக்கில் பிளாச்சு அடித்த தட்டி. ஒன்றிரண்டு படிகள் மேற்செல்ல ஓட்டுச் சார்வு. உள்ளுக்குள் ரகசிய இருட்டு.

வீடு பூட்டியிருந்தது.

"இங்கே நில்லுங்க வரேன்" என்று காதர் பின்புறம் சென்று மறைந்தான்.

திலகத்துக்குத் திக்குத் திக்கு என்று அடித்துக்கொண்டது. அங்கிருந்து மெயின்ரோடுக்கு இரண்டு பர்லாங் இருக்கும். இவ்வளவு நிறைய தூரம்! அங்கே பஸ் போகிற சத்தம் இங்கே கேட்க வில்லையே?

"யாரும்மா?" என்ற குரல் கேட்டுத்திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்தப் பெரியவரைப் பார்த்ததும் சற்றுத் தெம்பு ஏற்பட்டது. எழுபது வயதிருக்கும். கலங்கிய மங்கின கண்கள். கையில் மண்வெட்டி வைத்துக் கொண்டிருந்தார். அவர் காலடியில் நீலப் பாம்பு போல ரப்பர் குழாய். தோட்டத்துக்கு நீர்பாய்ந்துக் கொண்டிருக்க, பந்தல் நிறைய மல்லிகை நிரம்பிக் கிடந்தது. அப்பால் ரத்த நிற ரோஜாக்கள் தெரிந்தன.

பெரியவர் திலகத்தை வெறுப்புடன் பார்த்தார்.

"தாத்தா! நான்!" என்றான் காதர்.

"ஏண்டி அப்புன்னுச் சனி, கண்ணெல்லாம் பழுத்துட்டேபோவுது யார்ரா நீ?"

"சின்ன முதலாளி அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க. தான் சொல்லலை?"

"யாரு?"

"இது தாத்தா; பொழுதன்னிக்கும் நின்னுக்கிட்டு இருக்கவா?"

தாத்தா அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

"[illegible]" தலையில் அடித்துக் கொண்டார்.

"தான் அனுப்பிச்சாரா?"

"இவங்க புருசன் வராரு. சட்டுப்புட்டுனு திறங்க."

"நீ யார்ரா?"

"நான் வீட்டுல பட்டறைல வேலை செய்யறவன், காதர்."

"இப்ப வராங்களா?"

"ஆமா."

"சேட்டா?"

"ஆமா! அப்புறம் தான், இவங்க புருசன்."

"தொறக்கவா?"

"சீக்கிரம்! அவுங்க வந்துர்றப்பல!"

"நான் கண்ணி வாக்கறத்துக்குத் தோட்டம் பக்கம் போறேன். நீ இருக்கியா?"

"இருக்கேன் தாத்தா. வாங்கம்மா."

கதவைத் திறந்து அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்துக் கொண்டு சென்றான்.

"வீடெப்படி பாத்தீங்களா, சும்மா ஜம்முனு இருக்கு. இன்னைட மாதிரி. உட்காருங்க. இத பாருங்க நாற்காலி. இத பாருங்க ஐஸ் பொட்டி.... ஐஸ்! கலரு! பழம்!"

"காதர் அதெல்லாம் தொடாதே."

"எல்லாம் நமக்குத்தாங்க. முட்டை ரொட்டி, பாலு, பழம் பிஸ்கட்டு, சாப்பிடுங்கம்மா, நம்ம வீடு!"

காதர் ஃபாலைப் போட்டு இருக்கிறதெல்லிட்க கலை எல்லாம் போட்டான். சோபாவில் குதித்து உட்கார்ந்தான்.

''அட என்னம்மா, தரைல உக்காந்துக் கிட்டு? இங்க வாங்க!''

திலகம் கண்களில் பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். அந்தப் படம் அசிங்கமாக இருந்தது. இது என்ன வாசனை! காதர் கண்ணாடியில் பார்த்துத் தன் மேக் பவுடர் வாசனைத் திரவியங்களை இறைத்துக் கொண்டான்.

மனோகரிக்கும் வாரி வழங்க அது முகமெல்லாம் பவுடராகச் சிரித்தது.

''காதர் வேண்டாம். அவுங்க வந்து பாத்தாங்கன்னு கோவிச்சுப்பாக.''

''நீங்க கவலைப்படாதீங்க! நம்ம வூடுன்னு நினைச்சுக்கங்க!''

''இன்னும் வரலியே!''

''வருவாங்க. வருவாங்க!''

''காதரு அவரும் வந்துவோரா!''

''யாரு சின்ன எசமானா?''

''இல்லே அவரு! இது அப்பா?''

''அதுக்குத்தானே போயிருக்காங்க! அவரு வராம?''

''இந்த வூடு யாருது?''

''சின்ன எசமான். ஆர். எஸ். புரத்தில், டவுன்ல, ஒன்னு ரெண்டு பத்து வீடு இருக்குது. பணக்...கா...ரரங்க! ஏரோப்ளேன் வெச்சிருக்காங்க சொந்தமா, அப்புறம் ஒரு சின்னரயில் பெட்டி..''

''அப்படியா!''

மிக மெலிதாக இருட்டின பிற்பாடு காரின் ஹெட் லைட் வெளிச்சத்தைப் பார்த்தார்கள். குதித்துக் குதித்து வந்தது கார்.

திலகத்திற்கு உற்சாகம் புரண்டது. பெரிய சாமி வரப் போகிறான். பரிவோடு வருவார்! பழங்கள் இருக்கின்றனவே. தன்னைதாகத்திற்கு.. இது என்ன? அவர் எங்கே? இவர்கள் ரெண்டு பேர் மட்டும் வருகிறார்களே. அவர் ஏன் வரவில்லை?

தாஸ் கையில் பொட்டலங்களுடன் இறங்கினான்.

''பாப்பா! இந்தா சாக்லெட்டு.''

''அவரு வரலிங்களா?'' என்றான் காதர்.

''ராத்திரி ஒம்பது மணிக்கு விட்டுர்றதா சொல்றாங்க! மறுபடி போய்ப் பார்க்கணும்!''

''காதர் நீ என்ன பண்றே, இந்தப் பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போய் விளையாட்டுக் காட்டு...''

ப்ரேம் இறங்கித் தனியாக நின்றான். தனக்கும் அந்த இடத்தின் சம்பாஷணைக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லைபோல.. சிகரெட் பிடித்த அவன் கைகள் சற்று நடுங்கின.

தாஸ் ஒரு பந்தை எடுத்து மனோகரிக்குக் கொடுத்தான். அது சின்னதாக மஞ்சளாக மொசமொச என்று டென்னிஸ் பந்து. மனோகரியிடம் காதர் ''எங்கே என் கிட்டப்போடு. என்கிட்ட போடு'' என்று சைகை செய்ததும் பந்தை சந்தோஷமாகத் தூக்கி எறிய காதர் அதைப் பொறுக்கிக்கொண்டு வந்தான்.

''இத பாரு காதர் அதை அழைச்சுக்கிட்டு அந்தப் பக்கம் பம்பு செட்டு இருக்குது பாரு அங்க போய் விளையாடு.. லைட்டுத் தெரியுது பாரு!''

''சரி அண்ணே! வா மனோகரி'' என்று அதனிடம் பந்தைக் காட்டிக் கொண்டே செல்ல அது அவன் பின் ஓடியது.

திலகம் இதை பார்த்துக் கொண்டு நின்றாள்.

''அப்ப நான் வரேங்க!'' என்றான் தாஸ். ''இங்கயே இருங்க. பெரியசாமியை ஒன்பது ஒன்பதரைக்கு விட்டுருவாங்க! நான் கூட்டி வாரேன்!''

தாஸ் புறப்பட்டு வாசல் பக்கம் சென்று அங்கிருந்து சற்றுத் தூரம் பாதையில் நடந்து அங்கே போய் நின்று கொண்டான்.

ப்ரேம் சிகரெட்டை மிதித்து விட்டுச் சட்டென்று வீட்டுக்குள் நுழைந்தான்.

திலகம் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்து ''உட்காரு!'' என்றான்.

பெட்ரோலியம் விலை ஏற்றமும் அதில் ஒரு சதித்திட்டமும்!



அடேங்கப்பா! முகமூடி மனிதனுக்குக் குண்டு பலமாக விழும் போலிருக்கிறதே!

பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து மிகப்பெரிய பணக்காரர்களாக இருக்கும் எண்ணெய் வியாபாரிகள், இயங்குகிறார்கள். எரிபொருள் அமைச்சரை அவரது காரியதரிசியைக் கொண்டே 'பிளாக்மெயில்' செய்து பயமுறுத்துகிறார்கள். எண்ணெயின் விலையை அமைச்சரே உயர்த்தி மக்களிடையே அறிவிக்கும் படியான சூழ்நிலையை உருவாக்கி விடுகிறார்கள்! இதனால் இந்தக்குழு பணத்தினால் இன்னமும் கொழுத்துவிடுகிறது. எவராவது இவர்கள் விவகாரத்தில் குறுக்கிட்டால் அவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். இறுதியில் கவையான திருப்பங்கள் ஏற்படுகின்றன. திரைக்கதையில் என்ன திருப்பம் ஏற்பட்டு என்ன? இந்தியாவில் பெட்ரோலியம் பொருள்களின் ஏறின விலைகள் இனி இறங்கவா போகின்றன?

ஸ்வீனி (Sweeny) என்று பெயர் கொண்ட இப்படம் விரைவில் வெளி வரவிருக்கிறது.

- டி. எம். ஆர்.

திலகம் மவுனமாக இருந்தாள்:

''இதை வெச்சுக்கங்க'' சரசர என்று பிளாஸ்டிக் பை உருவப்படும் சப்தம். புத்தம் புதுசாக பளிச் என்று ஒரு புடவை.

''அவரு எப்ப வருவாரு?''

''இந்தா வெச்சுக்க'' அருகே.

''அவரு வருவாங்களா?''

''வெச்சுக்கன்னு'' இன்னும் அருகே.

அவள் அருகில் புடவையை வைத்தான் ப்ரேம். நிதானமாக வாயிற் கதவைச் சாத்தி உள் பக்கம் தாளிட்டான். சோபாவில் உட்கார்ந்தான்.

பக்கத்தில் தட்டி ''வா வந்து உக்காரு!'' என்றான். திலகம் திடுக்கிட்டாள்.

''இல்லிங்க! இல்லிங்க!''

''சொன் பேச் கேள். ஹாய் ஹாய்! ஆல் மேரி ஜான்'' என்று அவள் கையைப் பற்றித் தன் மேல் இழுத்துக் கொள்ள காதர் பம்ப் செட் அருகில் மனோகரியுடன் ஒண்ணு, ரெண்டு, மூணு என்று விரல் விட்டு எண்ணிக் கொண்டே பந்தைப் பிடிக்க, மனோகரி சிரிக்க, திலகத்தை அப்படியே தரையில் வீழ்த்தி... அவள் எறிந்த பந்தைக் குதித்து குதித்துப் பிடித்தான் காதர். திலகம் பிரமித்து ''அய்யா, அய்யா விட்டுடுங்கய்யா, வேண்டாம் வேண்டாம்.'' ''அந்தப் பக்கம் போகாதே பாம்பிருக்கும்'' என்றான் காதர். திலகத்தின் மேல் ப்ரேமின் அத்தனை பளுவும் பரவ வீறிட்டுப பிரவாகமாகக் கொட்டிக் கொண்டிருந்தது பம்ப் செட். ப்ரேம் பெரிசாக மூச்சு விட, ஆரம்பித்து ''நம்ப கிட்ட தப்பிச்சு ஓட முடியுமா?'' என்று காதர் மனோகரியைத் துரத்த திடீர் என்று — ஆம்! திடீர் என்றுதான் அதை உள்ளுணர்வு என்று சொல்வதா தெய்வச் செயல் என்று சொல்வதா, ஒரே ரத்தம் என்று சொல்வதா...? மனோகரிக்குத் தன் தாயை உடனே பார்க்க வேண்டும் என்று தோன்றி விட்டது. உடனே வீட்டை நோக்கி ஓட. 'காதர்' நீ போ! நான் ஜூஸ் அடிச்சிட்டு வரேன்' என்று தங்கிவிட, மனோகரி மட்டும் தனியாக வந்து வீட்டுக் கதவைத் தள்ளிப் பார்த்து அது திறக்காமல் போகவே பயந்து அம்மாவின் ஞாபகம் அதிகமாக மறுபடி காதரிடம் ஓடிச் சென்று அவன் சட்டையைப் பிடித்து இழுக்க, 'வர்றேன், வர்றேன்' என்று காதர் அந்தப் பந்தைப் பைக்குள் போட்டுக் கொண்டு வீட்டின் முன்புறம் வந்த போது முழுவதும் இருட்டி விட்டது. வெகு தூரத்தில் தாஸ் குடிக்கும் பீடி நெருப்புத் தெரிந்தது.... உள்ளே திலகம் அலறும் சப்தமும் கேட்டது.

''என்னே விட்டுடுங்க! என்னே விட்டுடுங்க!'' காதர் உடனே அந்தக் கதவைத் தள்ளிப் பார்த்தான். உள் பக்கம் தாளிடப்பட்டிருந்தது.. ''அய்யோ என்னவோ ஆய்டுச்சு. என்னவோ நடக்குது!'' மனோகரி அவனையே ஆவலுடன் பார்த்தாள்.

அவனையே ஆவலுடன் பார்த்துக் கொண்டு தன் கழுத்தில் கட்டை விரலால் மாலை போட்டுக் காண்பித்து 'எங்கே என்றது!'

''அம்மா வருவாங்க! இங்கேயே இரு... இங்கயே இரு...'' என்று சொல்லி விட்டு வீட்டைச் சுற்றி வந்தான். இன்னும் அந்தக் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. பொருள்கள் விழும் சப்தம் கேட்டது.

காதர் சரசரவென்று தூங்குமூஞ்சி மரத்தின் மேல் ஏறினான். மொட்டை மாடியில் குதித்தான். வாட்டர் டாங்கின்மேல் ஏறி ஒரு கான்க்ரீட் நீட்டலில் குதித்து வெண்டிலேட்டர் திறப்பு வழியாக உள்ளே நுழைந்து அங்கிருந்து ஏறக்குறைய பன்னிரண்டு அடியைச் சரிந்து சிராய்த்துக் குதித்து மாடி அறைக்குள் வந்து விட்டான். அங்கிருந்து படி தெரியக் கீழே இறங்கினான்.

ப்ரேம் அவளைக் கையைப் பிடித்து முறுக்கி முழங்காலால் அவள் நெஞ்சில் அழுத்திச் சிரித்துக் கொண்டே; ''வாரேவா! என்ன ஃபைட்டிங் பண்றது! கொஞ்ச நாளாவே மனசு வெச்சுட்டேன். இந்த ப்ரேம் நினைச்சா தேவலோகத்திலே இருந்து ஆப்பிள் விழும்.''

''விட்டுருக்க.'' என்ற புதிய குரல் கேட்டுத் திரும்பினான். காதர் நிலைப்படியில் நின்று கொண்டிருந்தான்.

காதருக்கு அந்தக் காட்சியின் முழுத் தீவிரமும் தெரிந்திருக்க, தமிழ் சினிமா நிறையப் பார்த்திருக்கிறான். அதே சமயம் பயம்.

''விட்டுருங்க! விட்டுருங்க.'' என்றான்.

''ல—'' என்று ப்ரேம் அவனை தூத்தியில் திட்டிச் சற்றுப் பிடியைத் தளர்த்த திலகம் விடுபட்டாள். காதர் விடுவிடு என்று வாயிற் கதவின் உள்தாழ்ப்பாளை அலக்கி அதைத் திறந்துவிட்டு,

''அம்மா, அம்மா! ஓடிப் போயிருங்க. வாசலில் குழந்தை நிக்குது. தூக்கிக்கிட்டு ஓடிப் போயிருங்க.. சைடாலே போங்க. ரோடுல தான் நிக்குறாரு. ஓடிடுங்க! ஓடிடுங்க அம்மா!'' என்றான்.

திலகம் வாரிச் சுருட்டிக் கொண்டு அடிபட்ட மான்போல ஓடினாள்.

''பக்டோ, பக்டோ!'' என்று கத்தினான் சேட். ''தாஸ்...தாஸ்'' என்று கழுத்து நரம்பு தெரியக் கத்தினான்.

திலகம் தன் மனோகரியை அள்ளிக்கொண்டு இருளில் ஓடினாள். உடன் பின்னால் ஓடிய காதர் வாயிற்படியில் தடுக்கி விழுந்தான்.

எழுந்து சமாளித்து மீண்டும் ஓடுவதற்குள் பிடிபட்டான்.

''பகட் கயா ஸ்ஸாலா!'' என்றான் ப்ரேம்.

(தொடரும்)

நண்பர்: உங்க படத்திலே தமிழே தெரியாத ஹிந்தி நடிகை ரொம்ப தத்ரூபமா உணர்ச்சியுடன் நடித்ததற்குக் காரணம் என்ன?

டைரக்டர்:- தமிழ் தெரியாததுதான் காரணம்!

ஆர். கோபாலகிருஷ்ணன்



Kalki Shopping Page

Kalki Shopping Page

Kalki Shopping Page


SUKI ELECTRONICS

Best Place to Choose your

STANDARD

Solidaire

televista TV sets



★ Available on cash or easy instalment

Cost of Antenna, installation & delivery charges **FREE** for cash purchases.

SUKI ELECTRONICS

16, Veeraraghavan Street,
Nanganallur,
Madras 600 061.

C-3, Kapaleeswarar Shopping Complex, V.A. Road,
Near Saibaba Temple
Mylapore, Madras 600 004.
Phone: 433019.

மதுரையில்

இந்த தீபாவளிக்கு

பட்டுச்சேலைகள்

தேர்ந்தெடுக்கச் சிறந்த ஸ்தாபனம்

SRB

SRB சில்க்ஸ்

FASHION CREATORS IN SILK SAREES

229-கீழமாரட் வீதி

மதுரை-1 போன் - 28036

தித்திக்கும் தீபாவளியின் திகட்டாத சிறப்பு ரகங்கள்

பட்டு ஜவுளிகள்

அனைத்து மில்களின் சர்டிங்ஸ், சூட்டிங்ஸ்

சேலைகள், மற்றும் கைத்தறி ரகங்கள்

ஸ்தாபிதம்: 1942. போன்: 24551.

கண்டி கலைமகள் ஸ்டோர்ஸ்

43.மேலக்கோபுரத் தெரு, மதுரை-625001.

VEGA



நான் கண்ட ரஷ்யா

அகிலன்

* 2வது உலகப்போர் முற்றுகையில் உயிர் நீத்த லெனின்கிராடு நகரவாசிகளின் கல்லறையில் மலர் வளையம் வைக்கும் திருநாள்.

அத்தியாயம் 6


இரவே இல்லாத நகரத்தில்...


மாஸ்கோவிலிருந்து வெவ்வேறு நகரங்களுக்குச் செல்லும் ரயில் நிலையங்கள் நகரத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருக்கின்றன. லெனின்கிராடுக்குச் செல்லும் ரயில்வே நிலையம் நாங்கள் தங்கியிருக்க ஓட்டலுக்கு அருகிலேயே இருக்கிறது. அங்கெல்லாம் ரயில்வே கண்டக்டர்கள் பெரும்பாலும் பெண்கள்தாம். இரண்டு பேர்களுக்கான 'கூப்பே'க்களும் நம்முடைய ரயில்களில் உள்ளது போல் நான்கு பேர்கள் செல்லக் கூடிய அறைகளும் ரயில் பெட்டிகளில் உள்ளன. இரவு நேரத்தில் புறப்படும் ரயிலாதலால் மெத்தை, தலையணை, போர்வை முதலியவற்றோடு படுக்கைகள் தயாராக இருந்தன. இரவில் ரயில் புறப்படுவதற்கு முன்பும் காலையில் கண் விழித்தவுடனும் அங்கே ரயிலில் பயணிகளுக்குக் காப்பியோ, தேநீரோ எது வேண்டுமோ அதை வழங்குவார்கள். ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு சிறிய சமையல் அறை உண்டு.

நம்முடைய ரயில்வே நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதைப் போல் அங்கே சிற்றுண்டிகளோ, பானங்களோ பத்திரிகைகளோ விற்பனை செய்யப்படுவது இல்லை. ரயிலுக்கு வந்த பிறகு உணவு சாப்பிட வேண்டுமென்றால், அதை நாம் கையோடு முன்பாகவே கொண்டு வந்து விடவேண்டும். பரிமாறிக் கொள்வதற்குத் தேவையான தட்டுகள், கிண்ணங்கள், கரண்டிகள், தம்ளர்கள் முதலியவற்றைக் கண்டக்டரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.


என்னோடு வந்த மூன்று எழுத்தாளர்களுமே வயதில் என்னை விட மூத்தவர்கள். இருவருக்குக் கீழ்ப் படுக்கைகளைக் கொடுத்து விட்டு, நானும் சந்திரகுப்த வித்யாலங்காரும் மேல் படுக்கைகளுக்குச் சென்றோம். எங்களோடு எங்களுக்கு வழிகாட்டியாக வந்த மாலிகோவ் என்ற ரஷ்ய இளைஞரும் மெரினா என்ற பெண்மணியும் அடுத்த பெட்டியில் வந்தார்கள். மறு நாள் காலை 7.30 மணிக்கெல்லாம் நாங்கள் லெனின்கிராடு ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தோம். லெனின்கிராடு நகரத்துக்கு நான் வருவது இது இரண்டாவது முறை. 77 அக்டோபரில் ஒருமுறை அங்கு வந்திருக்கிறேன்.

'சோவியத் ஸ்காயா' என்னும் ஓட்டலுக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம்.





⌘ பீட்டர் ஹாஃப் மாளிகைக்கு முன் உள்ள சாம்ஸன் சிலை நீர் ஊற்று.



⌘ பீட்டர் ஹாஃப் மாளிகையின் முன் நீர் ஊற்று. கால்வாய், பூங்கா.

எந்த ஓட்டலுக்குப் போனாலும் அங்கே வெளிநாட்டுக்காரர்கள் அவர்களுடைய பாஸ்போர்ட்டுகளை ஓட்டலில் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வெளி நாட்டார்களுக்கு ஓட்டலில் இடம் கிடைக்காது. எங்கள் வழிகாட்டியும் மொழிபெயர்ப்பாளருமான நண்பர் மாலிகோவ் எங்களுடைய பாஸ்போர்ட்டுகளை மாஸ்கோ ஓட்டலிலேயே விட்டு விட்டு எங்களுடன் ரயிலேறி விட்டார்! லெனின்கிராடில் ஓட்டல்காரர்கள் பாஸ்போர்ட்டுகளைக் கேட்டபோதுதான், எங்களுக்கே விஷயம் தெரிந்தது. சில நிமிஷங்களுக்கு எங்களில் யாருக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. மாஸ்கோவில் இருக்கும் பாஸ்போர்ட்டுகள் லெனின்கிராட்டுக்கு வந்து சேரும்வரை நாங்கள் எங்கே தங்குவது? விமானத்தில் போய் ஒருவர் எடுத்து வருவதானாலும் ஒரு நாள் ஆகுமே? நல்லவேளை: வந்திருப்பவர்கள் இந்திய நாட்டு விருந்தினர்கள் என்பதைத் தெரிந்து கொண்ட அந்த ஓட்டல்காரர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டு எங்களுக்கு இடம் அளித்தார்கள். மறுநாள் பாஸ்போர்ட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இசைந்தார்கள்.

பதினொரு மணிக்கெல்லாம் நாங்கள் வெளியில் புறப்பட்டோம். லெனின்கிராடுக்கு வெளியே முப்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பீட்டர் ஹாஃப் என்னும் பழங்காலத்து அரண்மனையைக் காண வேண்டும் என்பது எங்கள் திட்டம். அன்று ஞாயிற்றுக்கிழமை. லெனின்கிராட் நகரவாசிகளுக்கு விடுமுறை நாள். அது மட்டுமல்ல. அது கோடைக்காலம். அவர்கள் மிகவும் விரும்பி வரவேற்கும் மாதங்கள் மே, ஜூன், மாதங்களாகும். ஜூன் 24ம் நாள் நாங்கள் அங்கு போய்ச் சேர்ந்த பிறகுதான், அங்கே அது 'வெள்ளை இரவுக் காலம்' என்பது தெரிந்தது.

வெள்ளை இரவுகள் என்றால் இரவுகளே இல்லை என்பது பொருள். எந்த நேரமும் அப்போது லெனின்கிராடில் சூரியனின் வெளிச்சம்தான். இந்தக் காலத்தில் அங்கு இரவு நேரங்களில் தெரு விளக்குகள் போடப் படவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. வடதுருவத்துக்கு அருகில் லெனின்கிராட் இருப்பதால் எப்போதும் சூரியனின் ஒளி அங்கு இந்தக் காலத்தில் இருந்து கொண்டிருக்கும். பகல் நேரங்களில் கதிரொளி பளிச்சென்று வீசுமென்றால் இரவு நேரங்களில் அது மிகவும் மங்கலாக இருக்கும். நம் நாட்டில் மாலை ஆறு மணிக்கு மேல் சாயங்கால வேளையில் எப்படி மங்கலான கதிரொளி இருக்குமோ அப்படி அங்கு இரவு முழுவதும் இருக்கும்.

பீட்டர் ஹாஃப் அரண்மனைக்கு நாங்கள் கார்களில் சென்று கொண்டிருந்தோம். வழி நெடுகிலும் இரு புறங்களிலும் மரக் கூட்டங்கள்: காடுகள்; பூங்காக்கள்; புல்வெளிகள்' திரும்பிய பக்கமெல்லாம் பசுமை தவழ்ந்தது. சூரியனின் ஒளி புல் தரையின் மீதும் மரம் செடி கொடிகளின் மீதும் பளிச்சென்று வீசிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் புல் தரையில் மெய் மறந்து படுத்துக் கிடந்தார்கள். நாம் நீரில் குளிப்பது போல் அவர்கள் கதிரொளியில் குளித்துக் கொண்டிருந்தார்கள். ஆண்களுக்கு இடுப்பில் மட்டும் ஒரு ஜட்டி; பெண்களுக்கோ அதோடு மார்பகத்தை மறைக்க ஒரு சிறு கச்சை; அவ்வளவுதான். அவர்கள் அதை ஓர் உல்லாசமும் உடலாரோக்கியமும் நிறைந்த பொழுது போக்காகக் கருதியிருக்க வேண்டும். இப்படி அங்கங்கே ஓய்வு எடுத்துக் கொண்டவர்களைத் தவிர, எங்களைப் போல் அந்த அரண்மனைப் பூங்காவில் விடுமுறை நாளைக் கழிக்க வந்தவர்கள் பலர். கார்களிலும் பஸ்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் அவர்கள் சாரி சாரியாக வந்து கொண்டிருந்தார்கள். லெனின்கிராடு நகரத்தின் பெரும் பகுதி அன்று ஊரை விட்டு வெளியில் உலாவச் சென்று விட்டது போல் தோன்றியது; இதைத் தவிர, இரு புறங்களிலும் உள்ள மரச் சோலைகளில் அங்கங்கே இளம் காதலர்களும் கணவன் மனைவியரும் காணப்பட்டனர். பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் அவர்கள் உற்சாகமாக நடந்து சென்ற காட்சி அற்புதமான காட்சியாக எனக்குத் தோன்றியது. உழைக்கும் காலத்தில் எப்படிக் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதையும் அவர்கள் மிகவும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். அவர்களுடைய முகங்களிலும் தோற்றத்திலும் எந்த விதக் கவலையும் என்னால் காண முடியவில்லை. ஒரே சிரிப்பும் பேச்சும் கலகலப்பும் தான்.



அரசியல்வாதி: அண்ணே! நீங்க எப்படியும் 10ந் தேதி எங்க கட்சிக்கு ஆதரவு தரணுங்க.
தலைவர்: (டயரியைப் பிரித்தபடி) ரொம்ப டைட்டா இருக்கே! வேணும்னா 12ந் தேதி உங்க கட்சிக்கு ஆதரவு தரலாம். -ரேவதி

பீட்டர்ஹாஃப் அரண்மனை பால்டிக் கடற்கரையில் பின்லாந்து வளைகுடாவின் ஓரத்தில் கட்டப்பட்டிருக்கிறது. அந்த அரண்மனையின் அழகு அந்தக் கட்டிடத்தில் மட்டுமில்லை. அதைக் கட்டுவதற்காகத் தேர்ந்தெடுத்த இடம், அந்த இடத்தைச் சூழ்ந்துள்ள பூங்காக்கள், அங்கு ஓடும் செயற்கைக் கால்வாய், அதன் இரு கரைகளிலும் பொங்கும் நீர் ஊற்றுக்கள் இவ்வளவிலும் இருக்கிறது. லெனின்கிராடு நகரத்தைத் தோற்றுவித்த மாவீரன் பீட்டர் என்னும் அரசனால் தொடங்கப்பட்டது அந்த அரண்மனை. அதன் மையப் பகுதி 1714க்கும் 1725க்கும் இடையில் கட்டப்பட்டது. மீண்டும் மீண்டும் அதைச் சுற்றிக் காலப் போக்கில் கட்டடங்களும், பூங்காக்களும் சிற்பங்களும் நீரூற்றுக்களும் உருவாகத் தொடங்கின. பெரும்பாலான சிற்பங்களிலிருந்து நீர் ஊற்று பொங்கிப் பொசிகிறது. அந்தக் கால்வாயின் இரு கரைகளிலும் 250 சிற்பங்கள்; 64 நீர் ஊற்றுக்கள். அந்தச் சிற்பங்களிடையே மிகப் பெரிதாகவும் கம்பீரமாகவும் விளங்குவது சாம்ஸன் எனும் வீரன் சிங்கத்தின் வாயைப் பிளப்பது போன்ற சிற்பமாகும். அந்தச் சிங்கத்தின் வாயிலிருந்து 60 அடி உயரத்துக்கு நீரூற்றுப் பொங்கிப் பொசிவது கண் கொள்ளாக் காட்சிதான்.

ஆனால், அங்கு இப்போது நாம் காணும் அரண்மனை, பூங்காக்கள், சிற்பங்கள் எல்லாமே 1945க்குப் பிறகு புதுப்பிக்கப் பெற்றவை. 1941க்கும் 1945க்கும் இடையில் அந்த அரண்மனையும் அதன் சுற்றுப் புறங்களும் ஹிட்லரின் நாஜிப் படைகளால் சீரழிக்கப்பட்டு விட்டன. பல சிற்பங்களையும் சிலைகளையும் அவர்கள் கவர்ந்து கொண்டு போய்விட்டார்கள். இரண்டாவது உலகப் போர் முடிந்த பிறகு ஏராளமான பொருட்செலவில் இரண்டாண்டு காலத்தில் அவைகளைப் புதுப்பித்திருக்கிறார்கள்.

வெளிநாட்டுப் பயணிகளும் லெனின்கிராடு நகரவாசிகளுமாக அங்கு பெருந்திரளான கூட்டம் இருந்தது. ஐஸ்கிரீம் வண்டி தள்ளிக் கொண்டு வரும் விற்பனையாளர்களுக்குச் சுறுசுறுப்பான வியாபாரம், 'அடாது பனி கொட்டிக் கொண்டிருந்தாலும் விடாது ஐஸ்கிரீம் சாப்பிடும்' பழக்கமுள்ளவர்கள் ரஷ்யக் குடிமக்கள்.

குளிர் காலத்தில் அங்கு சென்றிருந்தபோது ஐஸ்கிரீமைக் கண்டு நடுங்கிய நான், இப்போது ஐஸ்கிரீம் சாப்பிடுவதில் அவர்களுடன் போட்டி போடலானேன். அந்தக் கடற்கரை, பூங்கா, நீரூற்று இவ்வளவையும் பார்த்தபோது, அன்று முழுதும் அங்கு தங்கிவிடலாமா என்று தோன்றியது. சுற்றுப்புற உலகத்தை அறவே மறக்கச் செய்யக் கூடிய ஒரு சூழ்நிலை. அடுத்த இடங்களுக்குச் செல்ல வேண்டிய காரணத்தால் அரை மனத்தோடு நானும் நண்பர்களும் அங்கிருந்து திரும்பினோம்.

அடுத்து நாங்கள் செல்ல இருந்தது, இரண்டாவது உலகப் போரில் உயிர் நீத்த தியாகிகளான லெனின்கிராடு நகரவாசிகளின் கல்லறை. பிஸ்கர்யோவ்ஸ் கோயாக் கல்லறை என்று அதற்குப் பெயர். அதுவரை ஆனந்த மயமான ஓர் உலகத்தைக் கண்டு விட்டு, அடுத்தாற்போல் இரத்தக் கண்ணீர் வடியக் கூடிய மற்றோர் இடத்துக்கு வந்தோம். அந்தக் கல்லறைக் காட்சிகளைப் பற்றிச் சொல்வதற்கு முன்பாக அது உருவான காரணத்தைச் சொல்லி விட வேண்டும்.

சோவியத் நாட்டின் முக்கியமான இரண்டு பெரு நகரங்களில் ஒன்று லெனின்கிராடு. மாஸ்கோவுக்கு அடுத்த பெரு நகரம் இது. புரட்சிக்கு முன்பு வரை இதுதான் நாட்டின் தலைநகரமாக விளங்கியது. இரண்டாவது உலகப் போரின் போது இந்த நகரத்தைக் கைப்பற்றவோ, முடியாவிட்டால் தரை மட்டமாக்கி அழித்துவிடவோ; திட்டமிட்டான் ஹிட்லர். இந்த நகரம் விழுந்து விட்டால், சோவியத் நாட்டின் வட பகுதியே விழுந்துவிட்டது போலாகும். ஆகவே, ஏழே கால் லட்சம் போர் வீரர்கள், 1500 டாங்குகள், மற்றும் விமானங்களுடன் தன்னுடைய தாக்குதலை அவன் 1941 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ந் தேதி தொடங்கி விட்டான். எதிர்ப்பு மிகவும் கடுமையாக இருந்தது. போர்வீரர்களுடன் நகரத்தின் பொதுமக்களும் சேர்ந்து கொண்டார்கள். விமானத்திலிருந்து விழும் குண்டுகளையும் இயந்திரத் துப்பாக்கிகளையும் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், போர்ப் பயிற்சி பெற்ற ஐந்து லட்சம் நகரவாசிகள் பகைவனை எதிர்க்கத் துணிந்து விட்டார்கள். பல்வேறு நாடுகளில் மின்னல் தாக்குதல் நடத்தி வெற்றி கண்ட ஹிட்லரால் லெனின்கிராடை ஏதும் செய்ய முடியவில்லை. போர் தொடங்கியவுடனேயே நகரத்தின் கண்காட்சிசாலைகள், தொழிற்சாலைகள், கல்விக் கூடங்கள் முதலியவற்றில் இருந்த முக்கியமான பொருள்களெல்லாம் காடுகளின் வழியாகப் பத்திரமான இடங்களுக்கு அகற்றப் பட்டன.

நகரத்தை வீழ்த்தவோ அழிக்கவோ முடியாது என்று புரிந்து கொண்ட ஜெர்மானியர்கள் அதை முற்றுகையிடத் திட்டமிட்டனர். அதைச் சூழ்ந்திருந்த ஊர்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு, நகரத்துக்கு வரும் ரயில் பாதைகள் அனைத்தையும் துண்டித்து விட்டனர். நாட் கணக்கில் மாதக் கணக்கில், ஏன் வருஷக் கணக்கில் முற்றுகை நடந்தது. மொத்தம் 900 நாட்கள். தொடர்ந்து முற்றுகை. நகரத்துக்குள் பீரங்கிக் குண்டுகள் விழுந்த வண்ணமாக இருந்தன. வானத்திலிருந்து விமானங்கள் அவ்வப்போது குண்டு மாரி பொழிந்தவண்ணமாக இருந்தன. இந்தத் துன்பங்களுடன் அங்கே உணவுப் பஞ்சமும் தலைவிரித்தாடத் தொடங்கியது. குளிர் காலம் தொடங்கியவுடன் உறைபனியின் மீது 37 கிலோமீட்டர் தொலைவுக்கு ஒரு மோட்டார் பாதை உருவாகியது. உயிர்ப் பாதை (Road of life) என்று பெயரிடப்பட்ட அந்தப் பாதையின் வழியே இரவோடு இரவாக உணவுப் பொருட்களைச் சுமந்து கொண்டு லாரிகள் வரத் தொடங்கின. பகைவனுக்கு அந்தப் பாதை பற்றிய செய்தியும் எட்டிவிட்டது. லாரிகளின் மீது விமானத் தாக்குதல்கள் நடைபெற்றன. தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 250 கிராம் வீதமும் பொதுமக்களுக்கு 125 கிராம் வீதமும் ரொட்டித் துண்டுகள் வழங்கப்பட்டன. அந்த ரொட்டி என்பது கூட ஏதோ பெயருக்குத்தான். கிடைத்த பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஏதோ ஓர் உணவுப்பொருள். நகரத்தில் தண்ணீர்ப் போக்குவரத்து தடைப்பட்டது. வீடுகளுக்கோ, தொழிற்சாலைகளுக்கோ எரிபொருள் இல்லை. இருந்தும்கூட லெனின்கிராடு நகரத்தின் நிர்வாகம் தனது நகரத்தின் விறகுத் தேவைக்காக அங்கே இருந்த மரங்களையோ, தோட்டங்களையோ பூங்காக்களையோ அழிக்க மறுத்து விட்டது. குண்டு வீச்சால் பாதிக்கப்பட்ட மர வீடுகளும் மற்ற மரக் கட்டடங்களும் பிரிக்கப் பட்டு, விறகுக்காகப் பயன்படுத்தப்பட்டன. பசி, பட்டினி, சோர்வு, கவலை இவ்வளவுக்கிடையிலும் நகரத்தில் உள்ள ஒருசில போர்த் தளவாடத் தொழிற்சாலைகள் மட்டிலும் இயங்கிக் கொண்டே இருந்தன. பகைவர்களை எதிர்த்துத் தாக்கியவர்களுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டே இருந்தன.


(தொடரும்)



''எப்பொழுதும் 'ஜான', 'ஜான' என்று உன் மனைவியைக் கூப்பிடறியே, முழுப் பெயரான 'ஜானகி'ன்னு சொன்னா என்ன?''

''திருமணமான பின் வீட்டில் இரும்புப் பீரோ, 'கீ' உள்பட எல்லா 'கீ'யும் அவளிடம் தான். எனக்கு 'கீ'ன்னு பேச்செடுக்கவே பயம்!''


ராதிகா ராமநாதன்


பொறியைத் தட்டியதுமே...
திவ்யமான
ஒளி பரவுகிறது
அழகு
ஒளிர்ந்து சிரிக்கின்றது
உங்கள் பூஜை அறைக்கு.
உன்னதமானதொரு விளக்கு!
வீட்டினுள்ளே காம்ப்டாலக்ஸ்
ஒளிரட்டும்... ஓ ..அழகைத்
தனித்தொளிரச் செய்யும்
அதன் பாங்கே சிறப்புத் தான்!
PE-L-4087
காம்ப்டாலக்ஸ், எடுத்துப்பொருத்-
திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற
ஸ்பாட்லைட். ஷேடுகளோ, விசேஷ
இணைப்புகளோ தேவையில்லை.
பொறியைத் தட்டுங்கள். வேண்டிய
வெளிச்சம் உடனே பரவட்டும்.
PHILIPS
1879 1979
100 YEARS
ELECTRIC
LIGHT
காம்ப்டாலக்ஸ்
எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்
பிலிப்ஸ்

கடல் ராணி

சாண்டில்யன்





அத்தியாயம் 9

அக்ஷர லக்ஷம்

நாழிகைகள் பத்து ஓடி விட்டதால் நாலாம் பிறைச் சந்திரன் இலேசாக மங்கத் தொடங்கி விட்டதனாலும், தென்னை மர ஓலைகளின் இடுக்குகளின் வழியாக அதுவரை பாளம் பாளமாகச் சோலைகளின் பல பகுதிகளில் பாய்ச்சியிருந்த நீண்ட ஒளி வீச்சுக்கள் கூட மறையத் தொடங்கி விட்ட காரணத்தினாலும், மேதைகள் மறைந்த இடத்தில் முளைக்கும் சிற்றறிவாளர்களைப் போல, வானத்தில் எழுந்துவிட்ட ஏராளமான நட்சத்திரங்களின் வெளிச்சம் அதிக பலனை அளிக்காததனாலும் ஏற்பட்டிருந்த மோகனச் சூழ்நிலையில் மூழ்கி நின்ற இந்திரஜித் அனந்த் சுயநிலையை அடியோடு இழந்து கிடந்தான். அதன் விளைவாக ஒரு கையைக் கடல் ராணியின் இடையிலே தவழ விட்ட அனந்த் இன்னொரு கையை அவள் தோள்மீது படர விட்டுத் தன் மீது லேசாக அவள் உடலைச் சாய்த்துக் கொண்டான். பின்புறமாகத் தன்மீது சாய்ந்த அந்த உடலுக்குத் தன்னை அடியோடு உலுக்கி விடும் சக்தி உண்டென்பதை அதுவரை அறியாத அனந்த் உணர்ச்சிப் பெருக்கால் அவள் தலையை நோக்கிக் குனிந்தான். அவள் குழலில் இறங்கிய அவன் முகவாய்க்கட்டை தலையை லேசாகத் தொட்டபோது குழல்களிலிருந்து கிளம்பிய சாம்பிராணி வாசனை அவன் நாசிகளில் புகுந்ததால் அவள் நீராடி தூபம் போட்டு வந்தது அவள் கருங் குழலுக்கா தனது உணர்ச்சிகளுக்கா என்பதை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. சாதாரணமாகவே உறக்க நிலையை அடைந்துவிடும் அவன் மனம் அப்பொழுது பெரிய இன்ப நித்திரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அப்படி நித்திரையை நோக்கிச் செல்லும் தனது மனத்துக்கு அவ்வப்பொழுது சவுக்கடி கொடுத்து எழுப்பித் தனது வழக்கமான துரிதத்துக்கு இயக்கக் கூடிய வன்மை அவளது பின்புற எழில்களுக்கு இருந்த காரணத்தால் எப்பொழுது எரிமலை வெடிக்குமோ என்ற அச்சத்திலும் அவன் துணிவு நெஞ்சம் ஆழ்ந்து கிடந்தது. அந்த அச்சத்தின் விளைவாகவோ வேறு என்ன காரணத்தாலோ, அவள் தோளில் பதிந்த வலது கை அவள் தோளை இறுகப் பற்றியது. இடையைச் சுற்றிய இடது கையும் கன்னிச் சிவந்த அவள் இடையின் இடத்தை வலிக்கும்படியாகப் பற்றியும் தடவியும், விரல்களை அகல விரித்துப் பதித்தும், பாறை உச்சிகளை நாடும் காட்டுக் கொடியின் வளை சுருள்களைப் போல் திண்டாடிக் கொண்டிருந்தது. இந்த இந்திர ஜாலத்தில் சிக்கிய மனமும் அளவு மீறிய உணர்ச்சிகளால் பற்றப்பட்டதால் இன்ப வேதனையில் சுழன்றான் அனந்த்.

அந்த வேதனையில் அவளும் பங்கு கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் அவள் உடல் ஏன் அப்படிச் சங்கடப்பட்டு அசைய வேண்டும்? இடையிலிருந்த கையையும் தோளுக்கு மேலிருந்த கையையும் அவள் ஏன் உதறித் தள்ளவில்லை?

மனைவிக்கு உடம்பு சரியில்லை. கணவன் தான் சமையல்.

சமையல் அறையிலிருந்து கணவன் கத்தினான்: ''காப்பிப் பவுடரை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.''

''காப்பிப் பவுடரைக் கண்டு பிடிக்க இவ்வளவு கஷ்டமா உங்களுக்கு? நல்ல சமர்த்துதான் போங்கள். 'புளி' என்று எழுதப்பட்டிருக்கும் டின்னுக்குள் கையை விட்டால் அதற்குள் ஒரு சிறிய டப்பா கிடைக்கும். இந்த டப்பாவுக்கு மேலே 'மிளகு' என்று எழுதியிருக்கும். அதற்குள்தான் காப்பி பவுடர் இருக்கிறது'' என்று மனைவி கூறினாள்.

-கனகாம்புஜம்



தோளிலிருந்த கை சிறிது கீழே இறங்க முற்பட்டதும் எதற்காக அப்படி நெளிந்து அதற்கு இடம் கொடுக்கிறாள்? கேள்விகளுக்கு இடம் தராத நிலை அது. எந்தச் சமயத்தைச் சேர்ந்தவனும் சிக்கித் தவிக்கும் சந்தர்ப்பம் அது. இதில் சாதியில்லை பேதமில்லை. இன பேதம் கூட அழிந்து போகும் நிலை அது. இனங்கள் இரண்டும் இணைய முற்படும்போது உணர்ச்சி வெள்ளம் சகல பேதங்களையும் அழித்து விடுவதால் எப்பேர்ப்பட்ட பலசாலியும் பலவீனப்படும் அந்த நேரத்தில் அனந்த், ராணி, இருவருமே பலவீனப்பட்டு நின்றார்கள். இரண்டு பேரில் ராணியின் நிலை மிகப் பலவீனமாக இருந்தது.

தான் எப்பேர்ப்பட்ட ராணியானாலும், தன்னை அடக்க பால்வானுக்கு வந்த பலரும் தோற்று ஓடி விட்டாலும், தன்னையும் அடக்க, தன் உணர்ச்சிகளையும் ஈர்க்க ஒருவன் வந்து விட்டான் என்பதை அனந்தின் கர ஸ்பரிசம் ஏற்பட்ட முதல் சில விநாடிகளுக்குள்ளாகவே அவள் புரிந்து கொண்டாள்.

சற்று முன்பு ஒற்றன் ஒருவனை மிகத் துணிகரமாகச் சுட்ட தனது கை ஏன் அப்படி நடுங்குகிறது என்று ஆராய்ந்து பார்த்த ராணி, அதற்குக் காரணம் பின்னால் இணைந்து நின்ற இந்திரஜித் அனந்த்தான் என்பதை அறிந்து கொண்டாள். கேவலம் அரை நாளே பழகிய அனந்திடம் அத்தனை பற்றுதல் தனக்கு எப்படி ஏற்பட்டது என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாலும் விஷயம் காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டது என்பதை உணர்ந்து கொண்டாள்.

அவள் இதயம் இப்படி யெல்லாம் பேசிக் கொண்டிருந்ததால் உதடுகள் உதிர்க்கவில்லை சொற்களை. வழவழப்பும் நீரோட்டமும் உள்ள உதடுகள் உணர்ச்சி மிகுதியில் மடிந்து மடிந்து இரண்டு மூன்று முறைகள் திறந்ததால் அவற்றில் ஏற்கனவே பளிச்சிட்ட ஈரம் அதிகமாகி அவற்றுக்கு எல்லை இல்லா அழகையும் இச்சையையும் அளித்தன. அந்தச் சமயத்தில் அனந்த் தனது முகவாய்க் கட்டையை அவள் குழலிலிருந்து அகற்றிப் பக்கப்புறமாக வந்து லேசாக அவள் கழுத்தில் முகத்தைப் புதைக்கவே அவள் உதடுகள் சீற்றமடைந்திருக்க வேண்டும், ''அங்கென்ன இருக்கிறது அப்படி மதுரமாக'' என்று. ஆனால் உள்ளே ஓடிய உணர்ச்சிகளால் அவள் கழுத்து மேலே நீண்டு அவன் இதழ்கள் அதிகமாகப் புதைய இடம் கொடுத்து, அதரங்களின் இறுமாப்பை அடக்க இதுதான் சமயமென்றும், தன்னிடமும் தனிப்பட்ட ரஸம் உண்டென்பதையும் நிரூபித்தது. தலையை அவள் தூக்கியதால் நீண்ட அவள் கழுத்தில் புதைந்த அவன் வலிய உதடுகள் மேலும் கீழும் சஞ்சரிக்கவே அவள் அடியோடு நிலைகுலைந்து மெல்லச் சரியத் தொடங்கிய மேலாடையைக் கூடத் தூக்கிவிட்டுக் கொள்ளத் திராணியற்றவளாகத் துவண்டாள்.



கழுத்தில் புதைந்த உதடுகளில் கடுமையும், மேலுதட்டில் வளர்ந்த அரும்பு மீசை அளித்த இம்சையும் அவளுக்குத் தேவையாக இருந்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் ஏன் கழுத்தை அப்படி மெல்ல அசைக்கிறாள்? கழுத்தைத் தான் அசைத்தாள், தரையில் ஊன்றிய கால்களை ஏன் அசைத்தாள்? அசைத்த அவள் இரு பாதங்களும் எதற்காக அப்படித் திரும்ப வேண்டும்? கால் கட்டை விரல்கள் எதற்காக அரை வட்டங்களை மணலில் வரைய வேண்டும்?

நொண்டி பிடித்து விளையாடும் விளையாட்டுக்குக் குந்தம் போடுவது போல் சக்கரங்களை மணலில் தீட்ட முயன்ற கமலப் பாதங்களின் கட்டை விரல்கள் அரை வட்டக் கோடுகளைத்தான் வரைய முடிந்தது. அப்படித் திண்டாடிய கால்களை அவன் வண்டு விழிகள் நோக்கின. சற்று எட்ட மணலில் தெரிந்த அவள் பழைய சித்திரமும் பின்னெழில் பதிந்ததால் ஏற்பட்ட மணற்பள்ளங்களும் அவன் கண்களில் படவே வலது காலைச்சிறிது அகற்றிப் பள்ளங்களிலொன்றை மணலால் நிரப்பினான் அவன்.

அதை அனந்தும் கவனித்தான். ஆகையால் இடது புறத்தால் பதிந்திருந்த மற்றொரு பள்ளத்திலும் மணலைத் தள்ளித் தன் காலால் அழித்தான். அத்துடன் தனது உதடுகளை அவள் கழுத்திலிருந்து நீக்கி அவள் காதுக்கு அருகில் கொண்டு வந்து ''ராணி!'' என்று மிக மெதுவாக அழைத்தான்.

ராணி பேசும் சக்தியை இழந்திருந்ததால் ''உம்'' என்ற ஒரே உங்காரத்தை மட்டும் வெளியிட்டாள். அந்த உங்காரத்தில் மகிழ்ச்சி வெட்கம், அச்சம் மூன்றுமே ஒலித்தன.

அதைக் கவனிக்கவே செய்தான் இந்திரஜித். ''நான்....'' என்று ஏதோ சொல்ல முயன்றான் மெதுவாக.

அவன் குரலில் இருந்தது அச்சமா, அழைப்பா, சமாதானமா என்று ஏதும் புரிய



வில்லை ராணிக்கு. ஆகவே மறுபடியும் அவள் 'உம்' கொட்டினாள்.

''நான்....இது....'' உளறினான் இந்திரஜித்.

ராணியிடமிருந்து பதில் ஏதும் இல்லை. ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. உடல் அசைந்து அவன் மேல் உராய்ந்தது ஒரு முறை.

''இது நான்....''

''உம் ''

''எதிர்பாராதது.''

''ஊம் ''

''எதையோ.''

''உம்....''

''தவிர்க்கப் போய் எதிலோ முடிந்தது. அவ்வளவுதான்.''

ராணியின் உதடுகளில் புன்முறுவல் படர்ந்தது. அந்த ஆண்மகன் திண்டாட்டம் அவளுக்குக் கொண்டாட்டமாயிருந்தது. தோளிலிருந்து கீழ் நோக்கிப் படரத் துணிந்த அவனது வலது கையை அவள் தனது வலது கையை உயர்த்திப் பற்றினாள். அவள் விரல்கள் அவன் விரல்களுடன் பின்னிக்கொண்டு இறங்க முயன்ற அவன் கையை மேலேயே தேக்கின. அவள் மலர் விரல்களுக்கு இருந்த வலுவைக் கண்ட அனந்த் பிரமித்தான். அவள் விரல்கள் பொதுவாக மென்மையாக இருந்தாலும் சில இடங்களில் காய்த்திருப்பதை உணர்ந்த அனந்த், அவை அவளது தொடர்ச்சியான துப்பாக்கிப் பயிற்சிக்கு அடையாளம் என்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் சரசர வென்ற அந்த வடுக்களை அடுத்து வழவழ வென்று இருந்த விரல்களை மெல்ல நெறித்த இந்திரஜித், அந்தக் கடுமையும் வழவழப்பும்

அடுத்தடுத்து இருப்பது அவன் வாழ்க்கை நிலையையும் குறிப்பதை உணர்ந்து கொண்டான்.

சதா எதிரிகளால் சூழப்பட்ட அந்த மலைக்காட்டு மலரை அடைய விரும்புபவன் இன்பம் துன்பம் இரண்டுக்குமே தயாராக இருக்க வேண்டும் என்று சந்தேகமறப் புரிந்து கொண்டான், அனந்த் அந்த நேரத்தில். அந்தத் துன்ப முட்களுக்கு இடையே மென்மையான ரோஜாப் புஷ்பமும் இருப்பதால் ஒவ்வொரு சமயத்தில் முள் குத்தினாலும் இன்னொரு சமயத்தில் வீசும் சுகந்தம் அந்தத் துன்பத்தை மறைத்து விடும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை யென்றும் உணர்ந்து கொண்டதால் அவள் அளிக்கும் சொர்க்கம் விலக்கத்தக்கதல்ல என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.



''சிட்டு குலுக்கிப் போடுகிறீர்களே! எதற்கு?''
''யாருடன் கூட்டு சேரலாம் என்று பார்க்க சிட்டு!''


அவன் அந்தத் தீர்மானத்துக்கு வருவதற்கும் சந்திரன் அஸ்தமித்து அந்தச் சோலையில் இருள் சூழ்வதற்கும் நேரம் சரியாக இருந்ததால் இருவர் இதய வேகமும் சந்திரகிரணங்களைப் போல் அஸ்தமிக்காமல் அதிகப்படவே ராணி அவன் கைகளில் மெல்லச் சுழன்றாள். அந்தக் குறிப்பை அவனும் உணர்ந்து கொண்டான். குறிப்பால் உணர்த்துதல் என்று தமிழர்கள் சொல்வார்களே அது இதுவாகத்தான் இருக்குமோ என்று தன்னைக் கேட்டுக் கொண்ட இந்திரஜித் அவளை மெல்லத் தன்னை நோக்கித் திருப்பினான். திரும்பிய அவளைச் சுற்றித் தன் கைகளைச் சுழல விட்டு அந்தப் பூங்கொடி தொத்தி ஏறப் படல் அமைத்தான். பூங்கொடி தொத்தவுமில்லை, ஏறவுமில்லை, படல்தான் நெருங்கியது, நெருக்கியது.

வேலி பயிரை மேயக் கூடாது என்பதுதான் விதி. ஆனால் விதிகள் உடையும் வேளைகள் உண்டு என்பதை அவர்கள் இருவர் நிலையும் நிரூபித்தது. அனந்த் தனது இதழ்களை அவள் கழுத்தில் முன்புறத்தில் தைரியமாகவே புதைத்தான். மீண்டும் அவள் தலை நிமிர்ந்தது. இதழ்கள் அவன் இதழ்களை நோக்கி வந்தன. அவள் இதழ்கள் மெல்ல விரிந்து உள்ளிருந்த இரு முத்துக்களை லேசாகக் காட்டின. விலை மதிக்க முடியாத அந்த முத்துக்கள் மீண்டும் ஒளி பரப்பினால் என்ன செய்வதென்ற அச்சத்தில் அந்த முத்துக்களை மறைத்து விட்டான் அனந்த்.

உணர்விழந்த நிலையில் இருந்தாள் ராணி அந்தச் சமயத்தில். ஏதோ ஒரு பெருமூச்சு, ஓர் 'உம்' இந்த ஒலிகளே வெளிவந்தன அவளிடமிருந்து. இதழ்களில் ஈரம் வறண்டு போன ஓர் உணர்ச்சி அவனுக்கு. கண்கள் மூடிக் கிடந்தன. தவறில்லை அதனால். இரவில் இரவனித்த இருளில் பங்கஜம் எப்படித் திறந்திருக்கும்? முகக்கண்கள் மூடினாலென்ன மூழ்கிப் போய்விட்டது - அவள் இதயக் கண்கள்தான் திறந்திருந்தனவே. உடலெங்கும் பாய்ந்த மின்னல் அலையை வாரித் தெளித்தது உணர்ச்சிகள் வழியாக. கரை உடைந்த உணர்ச்சிகளால் காலம் கடந்தது தெரியவில்லை இருவருக்கும். காலம் என்பது ஓர் அளவுகோல். இரவையும், பகலையும் அளப்பதற்கு. காதலுக்கு அது பயன்படுவதில்லை. காலத்துக்குக் கட்டுப்படாதது அது. இறைவன் அளித்த ஒரு விந்தை. அதைப் பழிப்பவர்களும் அதிலிருந்து விடுபடுவதில்லை. பழிப்பு உதட்டு அளவில் அனுபவம் உயர்ந்த அளவில். இது கயவர்களின் போக்கு.

சிருஷ்டியின் போக்கு அது அல்ல. இயற்கையின் போக்கும் அப்படி அல்ல. இணைந்து சோலையில் நின்ற அந்த இருவரும் இயற்கையால் உந்தப்பட்டார்கள். அதனால் ராணியின் தலை அவன் தோளில் சாய்ந்தது. அவள் கட்டை விரல்களைத் தரையில் ஊன்றிச் சற்றுத் தன்னை உயரமாக்கிக் கொண்டாள். அவன் மார்பில் புதைந்தன அவள் மார்புகள். இதயங்கள் நேருக்கு நேர் இருந்ததால் ஏதோ பேசிக் கொண்டன. உறவாடும் நேரமும் மெல்ல மெல்ல நெருங்கிக்கொண்டிருந்தது.

காளிதாஸன் அந்தி வேளையைப் பற்றி இப்படிச் சொன்னான்: ''யுவதி ஜனேஷு சனை: சனை: அனங்க:'' யுவதிகளை மன்மதன் மெல்ல மெல்ல நெருங்கலானான் என்பது பொருள். ''மெல்ல மெல்ல'' என்ற இரண்டு சொற்களுக்கு அக்ஷரத்துக்கு லக்ஷம் பொன் கொடுக்கும்படி போஜ மகாராஜா உத்தரவிட்டான். அனங்கன் முறையே மெல்ல மெல்ல அணுகுவதுதான். அது அளிப்பதுதான் இன்பச் சித்ரவதை. (தொடரும்)



"தலைமுறை தலைமுறையாக
மக்கள் பயன்படுத்திவரும்
இந்திய மருந்துகளின்
சக்தியே தனி...

அவற்றுள்
தனிச்சிறப்பு
வாய்ந்தது
அமிர்தாஞ்சன்."

தலைமுறை தலைமுறையாக மக்கள் நம்பிக்கையோடு பயன்ப்டுத்திவரும் அமிர்தாஞ்சன் பத்து மருந்துப்பொருள்கள் அடங்கியது. இவை பத்தும் இயற்கையின் அற்புதமான சக்திவாய்ந்த மருந்துகள். அதனால்தான் அமிர்தர்ஞ்சன் ஒரு சக்திமிக்க வலி நிவாரணியாக விளங்குகிறது.

இதன் பயனாக தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு இவை எல்லாவற்றுக்குமே அமிர்தாஞ்சன் விரைவாக நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் உபயோகிப்பதால் ஆபத்து இல்லை. இதனால் வேறு தீய விளைவுகள் எதுவும் ஏற்படாது.

அமிர்தாஞ்சன் — 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல குடும்பங்களில் பயன் பட்டுவரும் நம்பகமான மருந்து.

அமிர்தாஞ்சன்

தலைவலி. ஜலதோஷம். உடல்வலி. சுளுக்கு — அனைத்தையும் போக்க அருமையான மருந்து.



AM-2148

சம்பத் அன்று மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்குள் நுழைந்தபோது முதலில் தென்பட்டவள் வித்யாதான். ஒரு நிமிடம் அவன் இதயம் வேகமாகத் துடித்தது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

''அம்மா, உன் ஆசை மருமான் வந்திருக்கான்!''

அவள் 'வந்திருக்கான்' என்று சொன்னதை அவன் கவனித்தான். கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது. 'வித்யா, உன்னைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறேன் என்பது புரியவில்லையா?'' என்று தனக்குள் சொல்லி அலுத்துக் கொண்டான்,

கண்களில், கன்னத்தில் பரவும் மலர்ச்சி – 'ஓ, வித்யா, உன் சிரிப்போடு சேர்ந்து என் இதயமும் மலர்வதை நீ அறிவாயா?'

''என்ன இந்தப் பக்கம் நுழைஞ்சே?''– பத்மா அவனிடம் காப்பியைக் கொடுத்து விட்டு வேறொரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

காப்பியை ஒரு வாய் அருந்தினான் சம்பத். ''இல்லே, இங்கே இரண்டு நாட்கள் வேலை இருந்தது. ஆனால் அதிர்ஷ்ட



இனிமையான முடிவு தந்த புதிர்

– சுந்தரராஜன் –

பத்மா உள்ளிருந்து வெளிப்பட்டாள். சம்பத்தைக் கண்டதும் முகம் மலர்ந்தது.

''வா....வா. ஏண்டி அவனை உள்ளே வா என்று சொல்லக் கூடாதா? .வா, சம்பத்! வீட்டிலே எல்லோரும் சௌக்கியமா?''

''ஆமாம், நான் சொல்லாட்டா மட்டும் உள்ளே வராமலே போய்டப் போறானாக்கும்?'' என்றாள் வித்யா கொஞ்சம் கேலியாக, கொஞ்சம் அலட்சியமாக.

சம்பத் கால் கைகளை அலம்பிக்கொண்டு, வந்தபோது, வித்யா ஹாலில் உட்கார்ந்து கொண்டு ஏதோ பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஏதோ யோசித்த சம்பத் அவள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி இருந்த சோஃபாவில் அமர்ந்து கொண்டான். வித்யா பத்திரிகையை மடித்துக் கீழே போட்டாள். ''என்ன சமாசாரங்கள்?'' என்றாள் சாதாரணமாக.

சம்பத் தடுமாறினான்: உதடுகள் வார்த்தையைக் கொட்ட மறுத்தன. உள்ளத்துக்குள்ளேயே பேசித் தீர்த்தான். 'வித்யா, என்ன விஷயம் என்று எப்படிச் சொல்வது? உன்னைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. கிளம்பி வந்துவிட்டேன் என்று சொன்னால் என்னைப் புரிந்து கொள்ள முடியுமா வித்யா, உன்னால்?'

''அடாடா, பேசக் கூட மாட்டாயா நீ?''– வித்யா மெலிதாகச் சிரித்தாள்.

முன்பே சம்பத் கவனித்திருக்கிறான், அவளுடைய சிவந்த உதடுகளில் சமமாகப் பரவும் அந்தப் புன்னகை; எதிரில் இருப்பவர்களை அப்படியே தன்னை நோக்கிக் கவர்ந்து, தன்னுள் அடக்கிக் கொண்டு விடும் சிரிப்பு; இதழ்களில் மட்டுமின்றி,

வசமாக ஒரே நாளில் முடிந்து விட்டது.''

''அப்படீன்னா, நாளைக்கும் இங்கேயே இருக்கலாம் இல்லையா?''

அவன் கடைசி வாய்க் காப்பியையும் அருந்தினான். நல்லவேளை ஒருவன் பொய் சொல்வதை எதிரில் இருப்பவர்கள் சில சமயம் கண்டு பிடிக்க முடியாமல் போய் விடுகிறது; சம்பத் தன் அத்தையிடம் சொன்னது எல்லாம் பொய்; வேலை ஒரு நாளைக்குத்தான் என்று அவனுக்கு முன்பே தெரியும்; வேண்டுமென்றே மறு நாளும் லீவு போட்டான். வேலை கூட அவனுடையது இல்லை. அவனுடைய நண்பன் ராஜாவுக்கு வந்திருந்தது. சென்னை என்றதும் அவன் கழுத்தை அறுத்துத் தானே கிளம்பிவிட்டான் – வித்யாவுக்காக; வித்யாவை ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான்!

வித்யா ஒரு தலையணையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். தன் முழங்கைகளை அதில் ஊன்றிக்கொண்டாள். சம்பத் உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து, 'பளீ'ரென்று வெளிப்பட்ட வித்யாவின் இடை தென்பட்டது. அவன் கண்களுக்கு.

வித்யா நல்ல சிவப்பாக இருப்பாள். இலேசாக அவள் உடலைப் பிடித்துக் கண்டினால் அந்த இடம் இரத்தமாகச் சிவந்துவிடும். முதன் முதலில் நினைவு தெரிந்து அவளைப் பார்த்தபோது, அசந்துதான் போனான், சம்பத்: 'இத்தனை அழகு இங்கேயே கொட்டிக் கிடக்கும்போது அசடு வெளியில் தேடுவது மடத்தனம்' என்று தனக்குள்ளேயே முணு முணுத்துக் கொண்டான்.

ஆறு மாதத்துக்கு முன்னால் உறவினர் ஒருவரின் கல்யாணத்தின்போது குமரிப் பருவத்து வித்யாவைப் பார்த்தது நினைவுக்கு வந்தது. அத்திம்பேருக்குச் சென்னைக்கே மாற்றலாகி விட்டதாக யாரோ சொன்னார்கள். அம்மா கொண்டு போய் அவனை அத்தை முன் நிறுத்தினாள்.

''அக்கா! சம்பத்! ஞாபகம் இருக்கா? எம். ஏ. முடிச்சுட்டு மதுரையில் இருக்கான்!''

பத்மா அத்தையைப் பார்த்து ரொம்ப வருஷம் ஆகியிருந்தாலும் உடனே அடையாளம் கண்டு கொண்டான் சம்பத். நமஸ்காரம் தெரிவித்தான். அத்திம்பேரைப் பற்றி விசாரித்தான். சடாரென்று வித்யாவின் ஞாபகம் வந்தது.

''ம்... வித்யா இப்ப என்ன பண்ணறா அத்தை?''

பத்மாவின் உதடுகளில் இலேசான புன்னகை பரவியது. அம்மாவும் வேறெங்கோ தன் பார்வையைத் திருப்பிக் கொண்டது போலப் பட்டது.

''வித்யா பி.எஸ்.ஸி. முடிச்சுட்டா. இங்கேதான் மெட்ராஸில் எம்.எஸ்ஸி. சேர்ந்திருக்கா.''

''ஓ... எம். எஸ்ஸியா?'' — சம்பத் குரலில் தென்பட்டது ஆவலா, ஏமாற்றமா?

வித்யாவே அப்போது வந்தாள், அங்கே.

''வித்யா, இவன் யாருன்னு தெரியறதா? சம்பத்... நான் அடிக்கடி சொல்வேனே!''

''ஓ... உன் அருமை மருமானா?'' என்ற வித்யா சம்பத் பக்கம் திரும்பி ''ஹாய் மைடியர் கஸின்!'' என்றாள்.

வித்யாவைப் பார்த்தவுடன், அவள் உதடுகளில் இருந்து அலட்சியமாக நடனமாடிக் கொண்டு புறப்பட்ட வார்த்தைகளின் இனிமையைக் கேட்டதும் சம்பத் அசந்து போனான். 'வித்யா' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு, அதனால் பரவிய இனிமையில் அப்படியே கரைந்து போனான்.

''என்ன வேலை எல்லாம் ஒரே ஜாலியா இருக்காக்கும்?'' என்றாள் வித்யா, சம்பத்தையே பார்த்தவாறு. அவன் அப்பார்வையைத் தவிர்க்க விரும்பினான். அப்பார்வை அப்படியே உடலைத் துளைத்துச் சென்று நெஞ்சை இதமாகத் தடவிக் கொடுப்பது போலப் பட்டது.

'வித்யா, என்னால் உன்னைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே! என் மேல் உண்மையாகவே காதல் இருக்கிறதா? என் உணர்ச்சிகள் எல்லாம் உனக்குத் தெரிகிறதா? உன் நிலை என்ன வித்யா, கொஞ்சம் புரிய வைப்பாயா?'

சம்பத் குனிந்து கொண்டே பேசினான்.

''வேலைக்கென்ன? ஓகே....''

வித்யா கலகலவென்று சிரித்தாள்.

வித்யாவிடம் இருக்கும் மற்றொரு கவர்ச்சி அம்சம் இந்தச் சிரிப்பு. ''சம்பத் என்னுடன் பேசும்போது மட்டும் வார்த்தைகளை அளந்து பேசறயே ஏன் அப்படி?''

அது சம்பத்துக்கே புரியவில்லை. இது புது மாதிரியான காதலாக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். வித்யாவைப் பார்த்தாலே போதும்; பேசக் கூடத் தோன்றுவது கிடையாது.

பத்மாவும் அத்திம்பேரும் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டே வித்யாவைப் பற்றிய எண்ணத்தில் மூழ்கிக் கொண்டிருந்தான் சம்பத்.

அன்று அவன் தூங்கப் போகு முன் கடிகாரம் பன்னிரண்டு தடவை அடித்ததைக் கேட்ட ஞாபகம்.

ஆட்டோ அவர்கள் இருவரையும் சஃபையர் வாசலில் இறக்கி விட்டது.



சார்ஜைக் கொடுத்து டிரைவரை அனுப்பினான் சம்பத்.

''கூட்டமே இல்லையே!'' – வியந்தவாறே நடந்தாள் வித்யா. கூட நடந்த சம்பத்துக்கு உலகமே தன் பின்னால் கை கட்டி வருவதைப் போன்ற பிரமை.

வித்யாதான் காலையில் திடீரென்று சம்பத்தைச் சீண்டினாள். ''சம்பத்! நீதான் கை நிறையச் சம்பாதிக்கிறயே. உன் அத்தங்காளை மத்தியானம் சினிமாவுக்கு கூட்டிண்டு போறயா?''

பத்மா குறுக்கிட்டாள். ''வித்யா, உளறாதே! அவன் இன்னிக்கு ராத்திரி ஊருக்குப் போகணும்.''

''சோ வாட்? சாயந்திரத்துக்குள்ளே வந்துடுவோம். நுங்கம்பாக்கத்தில் இருந்து சஃபையர் எத்தனை தூரம்?'' என்றாள்.

பத்மா தன் கணவரைப் பார்த்தாள். அவரோ சாதுவாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கடைசியில் வித்யா வென்றாள்.

''ஹாய்! – உற்சாகமாகக் கையை ஆட்டினாள் வித்யா. குளிர் பானங்களுக்குப் பணம் கொடுத்த சம்பத் திரும்பிப் பார்த்தான். ஓர் இளைஞன் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். நன்கு உயரமாக இருந்தான். மெல்லிய மீசை ஒன்றை வைத்துக் கொண்டு, 'பெல்ஸ்' அணிந்திருந்தான். அவனுடைய 'எலிவேடட் ஷூ' அவனை இன்னும் உயரமாகக் காண்பித்தது. மொத்தத்தில் அவன் கவர்ச்சியாக – சம்பத்தை விட – இருப்பதாகத் தோன்றியது.

வித்யா சம்பத்தை அறிமுகம் செய்த பின் தொடர்ந்தாள்: ''சம்பத்! ஹி ஈஸ் மிஸ்டர் ரவி. ரவிச்சந்திரன், எம். பி. ஏ. இவர் தங்கை ஷோபா என் ஃப்ரெண்ட். ஹி இஸ் எ டெபுடி மானேஜர்....''

ரவி சம்பத்தின் கையைக் குலுக்கியபோது, ரவியின் கண்களில் படர்ந்த பொறாமை தென்பட்டது. ''ஹேவ் எ நைஸ் டைம். ஸீ யூ தென், வித்யா.'' ரவி இதயத்துக்குள் அழுவது போலத் தோன்றியது.

சம்பத்தும் வித்யாவும் தியேட்டருக்குள் சென்று இருக்கையில் அமர்ந்தனர்.

''யு நோ சம்பத், ரவி ரொம்ப இன்டிரஸ்டிங்கானவர், ரொம்ப பிரில்லியண்ட்டைப்! எ கிரேட் டிபேட்டர். அவரோட பேசினால் பொழுது போவதே தெரியாது.''

சம்பத் மனத்தில் எரிச்சல் வளர்ந்தது. 'வித்யா, யூ ஃபூல்! உனக்காகவே ஏங்கிக் கொண்டு நான் இங்கே இருக்கேன். நீ 'வெரி...பட்...' ஒரு விநாடிக்குப்பின் என்னைக் காட்டிலும் உனக்குச்சரியான ஜோடி தான் அவன். பெட்டர் சாய்ஸ்!'

படம் ஆரம்பித்து விட்டது.

''பரவாயில்லே. இன்னொரு தோசை போட்டுக்கோ!'' பத்மா உபசரித்தாள். சம்பத் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். வித்யாவும் சமையல் அறையில்தான் இருந்தாள்.

''அம்மா, பத்திரம்! இந்த ஒன்னை கால் நாளிலேயே நம்ம சம்பத் சுற்றளவு கொஞ்சம் ஜாஸ்தியான மாதிரி இருக்கு. அப்புறம் மாமாவும் மாமியும் சண்டைக்கு வரப் போறா!''

''வித்யா, வர வர உனக்கு வாய்க்கொழுப்பு ஜாஸ்தியாய்ப் போச்சு!'' என்றாள் பத்மா கோபமும், மகிழ்ச்சியும் பொங்கிவழிய.

சாப்பிட்டு முடித்த சம்பத் தட்டை எடுக்க முயன்றான்.

''தட்டை வைச்சுடு சம்பத்! எடுக்கத் தான் ஆள் இருக்கே!''

''ம்... நான்தான் ஆளாச்சும்?'' என்றாள் வித்யா போலிக் கோபத்தோடு. ஆனால் சம்பத் எழுந்ததும் தட்டை எடுத்துக் கொண்டு கொல்லைப்புறம் இருந்த குழாயடியை நோக்கி நடந்தாள். பின் தொடர்ந்தான் சம்பத். தட்டைக் கீழே போட்ட வித்யா, தன் கையை அலம்பிக்கொண்டு சற்றே ஒதுங்கி நின்றாள். பெருகிய நீரில் சம்பத் தன் கையை நீட்டினான். நீர்த் திவலைகள் எங்கும் சிதறின.

''அப்புறம், அடுத்த ட்ரிப் எப்போ?''

சடாரெனத் திரும்பினான் சம்பத். கொஞ்சம் பாக்கி இருந்த இயற்கை ஒளியில், மின்சார ஒளியும் சேர்ந்து வித்யாவின் உருவத்தைக் காட்டியது. ஒரு விநாடியில்...

''விடு சம்பத்... விடு என்னை!'' – திமிறினாள் வித்யா.

''ஸாரி வித்யா!'' – விலகினான் சம்பத். அவன் அணைப்பிலிருந்து விடுபட்டாள் வித்யா. சம்பத் நிலை குலைந்து போனான். 'ஓ! என்ன மடத்தனம் செய்து விட்டேன்! அத்தைக்குத் தெரிந்தால்..?'

வித்யா தன் முன் தலை குனிந்து நின்ற அந்த இளைஞனைப் பார்த்தாள். சிவந்திருந்த அவன் முகம் இன்னும் சிவந்தது.

''சம்பத்... உனக்கும்... ஸாரி. உங்களுக்கும் இவ்வளவு துணிச்சல் இருக்கா? நீங்க ஏன் பொண் பிள்ளை மாதிரி குனிஞ்சிண்டு...நெவர் மைண்ட்! இந்த உரிமைக்குத்தான் நானும் ஏங்கிண்டு இருக்கேன்னு தெரிய இத்தனை நாளாச்சா?''

சம்பத் வியப்போடு நிமிர்ந்து பார்த்தான். இப்போது வித்யா தலை குனிந்தாள்.

'ரொம்ப நேரம் ஆகிவிட்டதே!' என்று எண்ணிக் கொல்லைப் பக்கம் வந்த பத்மா நடந்து கொண்டிருந்த நாடகத்தை உணர்ந்து மெதுவாக வீட்டுக்குள் நழுவினாள்.

பத்திரிகை ஆசிரியர்: இதென்ன வெந்த புண்ணிலே டிஞ்சர் தடவினாப் போலே அப்படீன்னு எழுதி இருக்கீங்க?
எழுத்தாளர்: புதிய உவமை சார்! வேல் எங்கே சார் இந்தக் காலத்திலே பாயப் போவுது?
கே. ஆர். எம்.





கல்கி பத்திரிகையில் ஃபோர்மனாக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு T. M. ராஜாபாதர் அவர்களின் ஜேஷ்ட குமாரர் திருநிறைச் செல்வன் பாலசுந்தரம் B.Sc க்கும் (State Bank of India, Madras-29) சென்னை திருவல்லிக்கேணி திரு A. சம்மந்த முதலியார் அவர்களின் இளைய குமாரத்தி திருநிறைச் செல்வி சுந்தரவல்லிக்கும் (A. G's Office, Madras) சமீபத்தில் சென்னையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்தில் ஏராளமான நண்பர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்

அன்புஎனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்புஎனும் குடில்புகும் அரசே
அன்புஎனும் வலைக்குள் படுபரம் பொருளே
அன்புஎனும் கரத்தமர் அமுதே
அன்புஎனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்புஎனும் உயிர்ஒளிர் அறிவே
அன்புஎனும் அணுவுள் அமைந்தபேர் ஒளியே
அன்புஉரு வாம்பர சிவமே

- திருஅருட்பா



CHAITRA-G 97-TAM



பூக்குழி

லக்ஷ்மி

6

சோபாவில் சாய்ந்தபடி காலை ஒரு மெத்தை தைத்த முக்காலி மீது நீட்டிக் கொண்டு, 'டன்ஹில்'லை உறிஞ்சி இழுத்துப் புகை மண்டலத்தைப் பரப்பிக் கொண்டிருந்தான் காமேஷ். சூரியன் அஸ்தமித்து இருள் பரவத் துவங்கியதுமே வெப்பமும் தணிந்து லேசாகச் சிலுசிலுக்கத் தொடங்கி விட்டிருந்தது. அறைக்குள் செயற்கைக் குளிர் வசதி அவ்வளவு தேவையாக இருக்கவில்லை. புகையை வெளியே விரட்ட ஜன்னல் கதவுகளைத் திறந்து விட்டான் ராஜ்குமார்.

தன்னுடன் அன்று இரவும், மறுநாளும் கூடவே இருக்கப் போகிறான் காமேஷ் என்ற நினைவில் ஏற்பட்ட மகிழ்ச்சி நிறைந்த பரபரப்பு அவனுக்கு. தனிமையை விரட்டக் கிடைத்த துணைவன் என்ற எண்ணத்தினால் அல்ல. மிகக் குறுகிய காலத்தில் அறிமுகம் என்றபோதிலும் ஆயிரம் ஆண்டுகள் பழகிச் சந்தித்தது போன்ற நேசத்தில் நெருங்கி விட்டிருந்தது அவன் உள்ளம். காமேஷை ஒரு நாள் பார்க்கா விட்டால் கூட உணர்வுகள் துயரவசப்பட்டுப்போகுமளவுக்கு அவனையும் மீறிய ஒரு பாசம்.... ஏன்? உருவ ஒற்றுமையால் மட்டும் ஏற்பட்ட பரிவுணர்வா?

சோபாவின் எதிரே கிடந்த தாழ்வான மேஜையின் மீது வெட்டிய ரொட்டித் துண்டுகளை ஒரு பீங்கான் தட்டில் அடுக்கி, கத்தியுடன் கொணர்ந்து வைத்தான். அதன் மீது தடவிச் சாப்பிட, 'டேனிஷ்' வெண்ணெய் சீஸ், ஜாம், யாவும் கூடவே வைத்தான். சிறு கண்ணாடிக் கிண்ணங்களில், பிஸ்தா, முந்திரி, வாதுமைப் பருப்பு வகைகளையும் வைத்தான். ஒரு சிறு பிளாஸ்டிக் கூடையில் ஆப்பிள், ஆரஞ்சு, வாழைப் பழங்களையும் நிறைத்து வைத்தான். தனக்குச் சாப்பிட 'பெப்சிகோலா'வை ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றி வைத்துவிட்டு, காமேஷுக்கு என்று வாங்கி வந்திருந்த 'பியர்' புட்டிகளையும், ஓபனரையும் அவன் அருகாக வைத்தான். ஐஸ் துண்டங்கள் நிரம்பிய கிண்ணத்தருகே பெரிய கண்ணாடிக் கோப்பையையும் வைத்துவிட்டு, டெலிவிஷனைப் போட்டபடி நண்பன் அருகே உட்கார்ந்தான் ராஜ்குமார்.

கையிலிருந்த சிகரெட் துண்டை நசுக்கி 'ஆஷ்' டிரேயில் போட்டுவிட்டுத் தன் இரு கைகளையும் மேலே தூக்கி உடம்பை நெளித்துச் சோம்பல் முறித்தான் காமேஷ். ஒரு ரொட்டித் துண்டை எடுத்துத் தட்டின் மீது வைத்து வெண்ணெயைக் கத்தியால் தொட்டுத் தடவினான். ராஜ்குமார் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறே?'' வியப்புடன் வினவினான் காமேஷ்.

''ஒண்ணுமில்லே. என்னைப் போலவே இடது கைப் பெருவிரல், ஆள்காட்டி விரல் இரண்டிலும் ரொட்டித் துண்டைப் பிடிச்சுகிட்டு, தலையை இடது பக்கம் சாய்ச்சு ரொட்டிக்கு நீ வெண்ணெய் பூசறதைப் பார்த்தேன். எனக்குச் சில சமயங்கள்ளே உன் செய்கைகள் திகைப்பூட்டுது. சில சமயம் என்னையே நீ 'இமிடேட்' செய்யிறியோன்னுகூடத் தோணுது.''

''பல நாட்களாக உன்னோடு நெருங்கிப் பழகிட்டேன் இல்லியா? சகவாச தோஷம்.''

''என்ன சொல்றே?''

''உருவத்திலே உன்னைப் போல அதிசயத்திலும் அதிசயமா நான் இருக்கேன். பார்க்கிறவங்க, நீயா, நானான்னு குழம்பறாங்க. உன்னோட பழகறதுல உன் பழக்க வழக்கங்களும் என்கிட்டத் தொத்திக்கிட்டிருக்கலாம். அவ்வளவுதான். மத்தபடி நீ எங்கே? நான் எங்கே?'' காமேஷ் பெருமூச்செறிந்தான்.

''ஏன் அப்படிப் பேசறே?'' மனத்தாங்கலுடன் கேட்டான் ராஜ்குமார்.

''உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகிடுமா?''

''என்ன உளர்றே?''

''உண்மையைத்தான் சொல்றேன். உயரம், பேச்சு, நடை எல்லாத்திலேயும் ஒண்ணுத்தான் இருக்கோம். ஒப்புக் கொள்றேன். அதற்குப் பிறகு நான் உனக்கு ஈடா ஜோடா? திருநல்லூர் பெரியதனக்காரர் கனகசபை அவர்களின் ஒரே மகன் நீ... செல்வத்திலே பிறந்து, செல்லமாக வளர்ந்த சிங்கக்குட்டி.

நண்பர்: உன்னுடைய நர்ஸை ஏன் வேலையை விட்டு நிறுத்தி விட்டாய்?

டாக்டர்: அவளுடைய அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாலே தங்கள் வியாதி குணமாகி விடுகிறது என்று என்னிடம் வரும் நோயாளிகள் சொன்னதால்தான்!

-கோ. நீபா



நான்...'' ஏதோ ஒன்று நெஞ்சை அடைத்த உணர்வு.

ராஜ்குமாரும் கடித்துவிட்ட ரொட்டித் துண்டை விழுங்க முடியாத ஓர் இரக்க மான உணர்வில் இணறிப் போனான்.

காமேஷ் தன்னைப் பற்றி அதிகம் பேச விரும்பாதவன். ஏழைமையான சூழ்நிலையி லிருந்து வந்தவன் தான் என்ற மனக் கசப்பு அவனுக்கு. அதைத் தூண்டிக் கேட்பா னேன் என்று ராஜ்குமார் அவனைப் பற்றிக் கேட்காமலே, தன்னைப் பற்றியே எப் போதும் அதிகம் பேசுவது வழக்கம்.

பியர் புட்டியைத் திறந்து கண்ணாடிக் கோப் பையில் ஊற்றிக் கையில் எடுத்துக் கொண் டான் காமேஷ். 'புஸ்'ஸென்று உயரமாகப் பொங்கி வந்த நுரையில் தன் மேலுதடு நனையுமளவு உறிஞ்சிக் குடித்துவிட்டுக் கீழே வைத்தான். நான்கு முந்திரிப் பருப்பு களை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு மென்றான்.

''முன்னமே சொல்லி யிருக்கிறேனே என் அப்பா பம்பாய்த் துறைமுகத்திலே வேலை செய்த ஒரு சாதாரணத் தொழிலாளி. ஒரு கிரேன் விபத்தில் அவர் செத்தார். அப்ப எனக்கு வயசு ரெண்டு. அதுக்குப் பிறகு என்னை வளர்க்க அம்மா ரொம்பப் பாடு பட்டாங்க. கொலாபாவில ஒரு கிறிஸ்தவக் குடும்பத்துக்குச் சமையல்காரியாக் கடைசி மூச்சுவரை பாடுபட்டு உழைச்சாங்க. என் படிப்பு முடிஞ்சு பட்டம் வாங்கி வேலையில் இருக்கறதைப் பார்க்கக் குடுத்து வைக்கலே. போயிட்டாங்க. அவ்வளவுதான். இதுக்கு மேலே என்னைப் பத்திப் பெருமையாச் சொல் லிக்க எதுவுமே இல்லே!'' அவன் குரல் கரகரத்தது.

''மன்னிச்சுக்க காமேஷ். உன் மனசு கஷ்டப்படறாப்பலே ஏதாவது பேசிட்டேனா?'' ராஜ்குமார் பதறினான்.

காமேஷ் கலகலவென்று சிரித்தான். ''நீ வசதியான குடும்பத்திலிருந்து வந்தவன். நான் ஏழைத் தொழிலாளி மகன். அதுக் கொன்றுமில்லே எனக்குத் தயக்கமே இல்லே.

''நம்ம தோற்றத்தைப் பார்த்து எல்லா ரும் குழம்பறாங்களே, குணத்தில் உனக்கும் எனக்கும் எத்தனை வேறுபாடுன்னு மத்த வங்களுக்குத் தெரியுமா? நீ வெளி நாட் டுக்கு வந்தும் சுத்த சைவமாகவே இருக்கிற வன். நானோ பிறந்ததிலிருந்து மாமிசத் திலே வளர்ந்தவன். வாரம் ஒரு முறை யாவது மீன் குழம்பை ஒரு பிடி பிடிக்க ணும். நீ சிகரெட்டையே தொடாதவன்; மது அருந்தாதவன். நானோ, 'டன்ஹில்'



'ஷிவாஸ்ரீகல்'னு ஒரு கைபார்க்கிறவன். நீ கல்யாணமானவன். நான் தனிக்கட்டை. நமக்குள்ளே எத்தனை வித்தியாசங்கள்... ஆனா, ஒரு வேடிக்கை தெரியுமோ?....'' காமேஷ் முடிக்காமல் மீண்டும் 'பியர்' கோப்பையை எடுத்து உறிஞ்சினான். வாயைத் துடைத்துவிட்டுக் கோப்பையை வைத்தான்.

''ஒரு ரெண்டு நாளைக்கு முன்னே கடைத் தெருவில ஒரு வயசான மலையாளி, நீ தான்னு நெனைச்சுக்கிட்டு என்கிட்டே தொண தொணத்துக்கிட்டே இருந்தான். நானும் மௌனமாத் தலையை ஆட்டிக் கிட்டிருந்தேன். இல்லாட்டி நீ யாரு, அது இதுன்னு ஆயிரம் கேள்வி கேட்டுடு வாரோன்னு பயம்! அவர் சொன்ன விவரம் இதுதான். அடுத்த வாரக் கடைசியிலே ஊருக்குப் போகிறாராம். நீ என்னவோ ஊருக்குக் கொடுத்தனுப்பற தாச் சொல்லி யிருந்தியாம். அதைப் பத்தி என்கிட்ட அறுத்திட்டாரு. முடிவில் உங்களை நானே வந்து பார்க்கறேன்னு சொல்லித் தப்பிச்சுக்கிட்டு வந்திட்டேனப்பா. ஆளை விட்டாப் போதும்னு ஆயிடுச்சு. உனக்கு இங்கே ரொம்பச் சிநேகிதங்க இருக்காங் களோ? அதிலேயும் பாரு வேற்றுமையை. உனக்கு மனுஷங்களை நிறையப் பிடிக்குது. எனக்குத் தனிமைதான் ரொம்பப் பிடிக் குது. யாருக்கிட்டேயும் அதிகமாப் பேசக் வச்சுக்கறதே யில்லே.'' அவன் உரக்கச் சிரித்தான்.



''அடடா! நீ சங்குண்ணியைப் பத்திச் சொல்றியா? அவர் ரொம்ப நல்லவராச்சே. இங்கே ஒரு கடையிலே வேலை செய்கிறார். அவர் போகும்போது சென்னையிலிருந்து நான் குடுத்து அனுப்புகிற சாமான்களை அகல்யாவுக்குப் பார்சல் பண்ணிடறதா ஒப்புக் கொண்டிருக்கார். அதனாலே நான் என் மனைவிக்கு ஒரு சின்னப் பரிசு வாங்கி வச்சிருக்கேன்!'' சொல்லிக் கொண்டே உள்ளே சென்று ஒரு சிறு கைப்பையை எடுத்து வந்தான் ராஜ்குமார்.

எகிப்தில் தயாரித்த ஒட்டகத் தோலால் ஆன கைப் பை. காஷ்மீரத்துப் பைகள் போல் ஒரு சுருக்குப் பை. ''அகல்யாவை நான் முதல்லே சந்திச்சபோது அவள் வீட் டுக்குத் திரும்புகிற வேளை. நான் தெரு முனையில் நின்னுக்கிட்டுக் கவனிச்சேன். இதே போல் ஒரு பையைக் கையில் பிடித்த படி வீசிக்கிட்டு மெல்ல நடந்து போனாள். கடையில அன்னிக்கு இதைப் பார்த்தபோது அவள் பிறந்த நாளுக்கு இதையே பரிசாக் கொடுக்க வேணும்னு ஆசை வந்தது.'' உணர்ச்சி வசப்பட்டு எங்கேயோ நினைவாகப் பேசினான்.

காமேஷ் வேடிக்கையாக அவன் அருகில் சென்று முதுகைத் தட்டினான். ''புரியுது. காதல் கல்யாணமானவன். வெகு தொலை வில் பிரிந்து இருக்கும்போது, பழைய நினைவு உன்னை அங்கேயே தூக்கிக்கிட்டுப் போயிடுது, இல்லையா?''

''அகல்யா ரொம்ப நல்ல பெண் காமேஷ்! அம்மாவை நல்லாக் கவனிச்சுக் கொள் கிறாள். அதில எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?''

''நீ ரொம்பக் குடுத்து வைச்சவனப்பா.''

மேஜையின் மேல் சாய்ந்த வாக்கில் வைத் திருந்த அகல்யாவின் புகைப்படத்தை எடுத்துச் சற்று நிமிர்த்தி வைத்து விட்டு, இடுப்பில் கை வைத்தபடி அதையே பார்த் துக்கொண்டு நின்றான் ராஜ்குமார்.

''அந்த டெலிவிஷனைக் கொஞ்சம் தணிச்சு வையேன். அதுபாட்ல கத்திக்கிட்டுக் கிடக் குது. நாமபாட்ல வேறே கதை பேசிக்கிட் டிருக்கோம்.'' சொல்லியபடியே காமேஷும் அகல்யாவின் படத்தை உற்றுப் பார்த்தான்.

நேரே பார்க்க எப்படியோ, படத்தில் மனத்தைக் கவரும் அழகியாகவே இருந்தாள். சற்று நீண்ட முகம், நெளிந்த கூந்தல், கனவுக் கண்கள், சிறிய வாய். கோணலாக முறுவலித்தபடி. பீர் நிறைந்த கோப்பையை மறுபடியும் கையில் ஏந்தியபடி படத்தை உற்றுப் பார்த்தான்.

''உன் மனைவி மிகவும் அழகானவங்க தான்.'' விர்ரென்று எஞ்சியபானத்தை உறிஞ்சினான். இன்னொரு புட்டியைத் திறந்து அவசரமாகக் கோப்பையில் ஊற்றினான். புசுபுசுவென்று கிளம்பிய நுரையினூடே அவனது மனத்திலும் ஒரு சிறு பொறி. பொறாமை உணர்வு புஸ்ஸென்று எழும்பி அவன் தொண்டையை என்னவோ செய்தது.

பணம், அந்தஸ்து வீடு, அம்மா, அழகான மனைவி என்று இத்தனையும் ஒருங்கே இவனுக்கு அமைந்து விட்டதே! எரிச்சலை விழுங்க முயன்று, பியரால் நனைத்துக் கொண்டான்.



தந்தை: நம் மகனுக்கு ஏழாவது அறிவு ஒன்று இருக்கிறது என்று நினைக்கிறேன்.

தாயார்: அவ்வளவு கெட்டிக்காரனா?

தந்தை: அவனுடைய பிராக்ரஸ் ரிப்போர்ட்டைப் பார்த்தால் மற்ற மற்ற அறிவுகள் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.!

-கோ. நியா

மீண்டும் ஆசனத்தில் வந்து உட்கார்ந்த ராஜ்குமார் ரொட்டித் துண்டில் கணிசமாக வெண்ணெயைத் தடவி 'ஜாம்' வைத்துக் குறுக்கே கத்தியால் அறுத்து, கையில் எடுத்துக் கொண்டு உற்சாகத்துடன் கடித்து விழுங்கினான்.

''வீட்டிலிருக்கும் போது அகல்யாவின் கட்டுப்பாடு மிக அதிகம். அம்மாவைப்போல் சர்க்கரை வியாதி வந்துடக் கூடாதுன்னு. இனிப்பு அதிகம் திங்கக்கூட என்னை அனுமதிக்க மாட்டாள்.''

''உங்கம்மா உடம்பு இப்ப எப்படி இருக்குதாம்?'' ரொட்டித் துண்டின் மீது 'சீஸ்' கட்டியைக் கனமாக வைத்துக் காமேஷ் கேட்டான்.

''கண் பார்வை குறைஞ்சு போயிட்டுது. தள்ளாமை அதிகமாயிட்டுதுன்னு அகல்யா வருத்தப்பட்டு எழுதி இருக்கிறா. இதோ பாரேன் இந்தக் கடிதத்தை....''

''சே, சே! உன் மனைவி எழுதின கடிதம்.

''பரவாயில்லே. அம்மா உடம்பு சுகமில்லேங்கிற விவரமான கடிதம்தான். நீ படிச்சா தவறு எதுவும் இல்லே. உன்னை என் கூடப் பிறந்தவனைப் போல் நினைக்கிறேன். படியேன்'' அன்பு வற்புறுத்தலுடன் அகல்யாவின் கடிதத்தை நீட்டினான் ராஜ்குமார்.

காமேஷ் சிறிது தயக்கத்துடன் பிரித்தான் கடிதத்தை. முத்துப் போன்ற கையெழுத்து. கடிதத்தில் பணிவு தெரிந்தது. மேஜையின் மீது தெரிந்த புகைப்படத்தில் அந்த அழகு முகம் தெரிந்தது. கனத்த மனத்துடன் கடிதத்தை வைத்தான்.

''நாம ஊருக்குப் புறப்படற நாள் அதிக தூரம் இல்லேயே?'' என்றான்.

''நம்ம இரண்டு பேர் ஒப்பந்தக் காலமும் ஒரே சமயத்தில் முடிகிறதுகூட ஓர் அதிசயம் தான். அதனாலே நாம ஒரே சமயத்திலே இங்கிருந்து புறப்பட்டுடலாம். என் குரு சரவணன் எனக்கு ஹைதராபாத்தில் ஒரு வேலை வாங்கித் தர முயன்று கொண்டிருக்கார். அதே நிறுவனத்திலே உனக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்துடலாம்னு என் எண்ணம். காமேஷ்! என்னை, அகல்யாவை, அம்மாவையும் நீ உன் உறவுக் காரங்களா நினைத்துக் கொள்ளு. உனக்கு யாருமே இல்லேன்னு நினைக்காதே. ஏன் அப்படிப் பார்க்கறே. அ! ரொம்ப பியர் சாப்பிடாதே. 'லிவர்' கெட்டுடும்.''

காமேஷ் பற்களைக் காட்டிப் பெரிதாகச் சிரித்தான். ''என்னைப் பத்திக் கவலைப்பட நீயாவது இருப்பது பற்றி மகிழ்ச்சி. நன்றி. அந்தப் பிஸ்தாக் கிண்ணத்தை இப்படித் தள்ளு. ஊருக்குப் போனதும், முதல் வேலையாக உங்கம்மாவை எனக்குப் பார்க்கணும் போல ஓர் ஆசை.''

''ஹைதராபாத்துக்குப் போறதுக்கு முன்னே நேரே ஊருக்குத்தான் போகப் போறோம். கிராமமே உன்னைப் பார்த்து அசந்துடப் போகுது. நம்ம ராஜ்குமார் மாதிரியே யாருடா இவன்னு...'' ராஜ்குமாரும் சிரித்தான். தொடர்ந்து, ''நீ கேட்டுக்கிட்டபடி, என் மனைவிக்குக்கூட உன்னைப் பத்தி நான் எழுதலே. அவளுக்கு ஒரு திடுக்கிடும் அதிசயமாகவே வைச்சிருக்கேன். எங்கம்மாவுக்குப் பார்வை மட்டும் இருந்திருந்தா கட்டாயம் உன்னைத் தன் பிள்ளைன்னு அன்போட கட்டிப் பிடிச்சுக்குவாங்க. என் மேலே உசிரு அவங்களுக்கு. என்னைப் போல இருக்கியேன்னு சந்தோஷம் தாங்காது அவங்களுக்கு.''

''ஆமாமாம். நாம ஊர் போகிற வரைக்கும் ரகசியமாவே வைச்சிருந்து அவங்களை எல்லாம் திகைக்க வைப்போம்...'' சொல்லிக் கொண்டே தாடைகள் இறுக மனக் கசப்பை அடக்கப் பற்களைக் கடித்துக் கொண்டான் காமேஷ். (தொடரும்)

திருமலை-திருப்பதி
தேவஸ்தானம்
திருப்பதி

1979 அக்டோபர் முதல் தேதி
திருப்பதி திருமலையில்
விசேஷ நிகழ்ச்சி

1979 அக்டோபர் முதல் தேதி விசேஷமான விஜயதசமி நன்னாளில், திருமலையில் ஆண்டுதோறும் நிகழும் பிரும்மோத்ஸவத்தின் கடைசி நாளன்று

ஸ்ரீ அன்னமாச்சார்யா அவர்கள் இயற்றிய

ஸ்ரீ வெங்கடேஸ்வர பஞ்சரத்னமாலா கிருதிகளை

சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்பலக்ஷ்மி அவர்கள்

திருப்பதி வெங்கடேசப் பெருமானுக்கு அர்ப்பணித்துப் பாடியுள்ள ஐந்து எல். பி. ரிகார்டுகளில் முதல் இசைத் தட்டு வெளியிடப்படுகிறது


அன்று

திருமலையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்பலக்ஷ்மி தம் குழுவினருடன் இசை விருந்தளிப்பார்.

எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

Subra & Rain : TTD : 729

A RENOWNED DISTRIBUTOR FOR AUTOMOBILE SPARES



Symbol of Superior Products

SPEED-A-WAY LTD.

Head Office:
155, Anna Road, Madras-600 002

Branches:
J. C. Road, Bangalore-560 002
Prakasam Road, Vijayawada-520 002
Banerji Road, Ernakulam-682 018
55-B, Mirza Ghalib St., Calcutta-700 016

MAC/SP/105

ஒரு நாள் ஒரு சவால்!

டீவி சினிமாவும் ஆப்பிள் மிட்டாயும்!

சனிக்கிழமை விடாமல் டீவி படம் பார்க்கும் குடும்பத் தலைவி திருமதி வாசுகி கண்ணப்பனுக்கு நான் வந்த நோக்கத்தைச் சொன்னவுடன் அவர் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

''நான் டீவியில் சினிமா மட்டும் பார்க்கத் தவற மாட்டேன். மற்ற நாட்களில் டீவி புரோகிராம் படு போர். நீங்கள் இந்தத் திட்டத்தை வேறு எந்த நாளிலாவது வைத்துக்கொள்ளுங்களேன்'' என்றார்.

''சிரமமான காரியம்தானே சவாலாக அமைய முடியும்?'' என்றேன்.

''அப்படியானால் சரி'' என்று தம் கட்டை விரலை உயர்த்திக் காட்டினார்.

டீவியில் கண்மணிப் பூங்கா நிகழ்ச்சி முடிந்து படம் ஆரம்பமாகியது. திருமதி வாசுகி அதனால் கலவரப்படவில்லை.

தம் கணவரின் கிளினிக்குக்கு என்னையும் அழைத்துச் சென்றார். மனைவியைப் பார்த்த டாக்டருக்கு ஒரே ஆச்சரியம். முகமூடி அணிந்த நிலையிலும் ''என்ன தேவி யாரே! இங்கே அபூர்வ விஜயம்?'' என்று குறும்பு செய்ய ஆரம்பித்தவர், அத்துடன் மனைவியைத் தமக்கு உதவி யாளராகவும் நியமித்து விட்டார். வாசுகிக்கு எரிச்சல் வந்தாலும் சினிமா ஞாபகத்தை மறக்கச் சளைக்காமல் உதவினார்.

விளக்கு ஒளி சிந்த ஒருவரின் பற்களை வெளியே எடுக்கும் சிகிச்சை தொடங்கியது. ஆயுதங்கள் வேகமாகக் கை மாறின. மருந்து வாசனை என் வயிற்றைக் குமட்டியது. சரியாக எட்டு மணிக்குச் சிகிச்சை முடிய எல்லோரும் வெளியே வந்தோம்.

''என்ன வாசுகி! தோல்வியை ஏற்கிறாயா? இன்னும் படம் பாக்கி இருக்கு!'' என்றார் டாக்டர் கண்ணப்பன் கிண்டலாக.

''நானும் பார்க்கப்போறதில்லை; உங்களையும் பார்க்க விடமாட்டேன்'' என்ற வாசுகி இருவரையும் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றார். கண்ணப்பனுக்கு ஒரே பயம்.

அதற்கேற்றாற்போல் வாசுகி, ''இப்போ ஒரு புது அயிட்டம் — ஆப்பிள் மிட்டாய் செய்யப் போறேன். கிளினிக்கிலே நான் உங்களுக்கு உதவின மாதிரி இங்கே நீங்க எனக்கு உதவணும்'' என்றார்.

தோல் சீவிய ஆப்பிள் துண்டங்களுடன் சிறிது தண்ணீர் விட்டுப் பத்து நிமிடங்கள் கொதிக்க விட்டு வேக வைத்தார். பின்பு மூன்று கோப்பைப் பால் பாதியாக ஆகும் வரை காய்ச்சினார். வெந்த ஆப்பிளுடன் இந்தப் பாலையும், சிட்டிகை உப்பையும் நான்கு கோப்பை சர்க்கரையையும் சேர்த்துக் கெட்டியாக வரும்வரை கிண்டி, சிறிது சிறிதாக நெய் சேர்த்து ஒட்டாமல், வரும் போது இறக்கினார். பின்பு நெய் தடவித் தட்டில் பரப்பி ஏலக்காய் பொடியையும் கலந்தார். துண்டங்களாக வெட்டப்பட்டு ஆப்பிள் மிட்டாய் தயாராகியது.

இப்போது திரைப்படத்தின் கிளைமாக்ஸ் காட்சி நடந்து கொண்டிருந்தது. அடுத்த வீட்டின் டீவியிலிருந்து குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

சளைக்காமல் திருமதி வாசுகி, தனது வெளி நாட்டுப் பயணத்தின் போது எடுக்கப்பட்ட வண்ண ஸ்லைடுகளைப் போட்டுக் காண்பித்தார். சவாலில் வெற்றியும் பெற்று விட்டார். அதிருக்கட்டும்; அடடா; அந்த ஆப்பிள் மிட்டாய்....! அது என்ன ருசி, என்ன ருசி!

அனுபவம்: ''சிக்கி'' படம்: உத்ரா



சிந்துநதியின் சிங்காரப் பேரழகைக் கண்டு சீற்றமும் ஆற்றலும் கொண்டு கெக்கலி கொட்டிச் சிரிக்கிறான் மாவீரன் காசிம்...

ஓ... எத்தனை பெரிய அழகுமிக்க நாடு... எவ்வளவுக்கு வளம் கொழிக்கும் மண்... எப்படியெல்லாம் இந்தப் பரந்த நிலத்தில் தனது காலிஃபா, புரண்டு புளகித்து அனுபவித்து ஆசை தீர்க்கலாம்! இயற்கை மட்டுமா அழகு... ஆ... இங்குள்ள இளம் பெண்களும் அழகின் சொர்ண பிம்பங்கள்!

மூக்கில் வியர்வைத் துளிகள் முத்தாய் அரும்ப, நன்றியின் நாயகனும் – அரச பக்தியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவனும் – வீரத்தின் எதிரொலியாய் உருவிய வாளை உருவியபடி குதிரையின் மீது ஆரோகணித்து உறுமுகிறான் காசிம். .

''படைகள் நகரலாம்!''

நாலுதிசைகளிலும் சூழ்ந்து கொந்தளித்த இஸ்லாமிய சேனாசமுத்திரம் வீர கோஷமும் வெற்றிகோஷமுமாக நகரத் தொடங்குகிறது.

'ஓ' என்ற பேரிரைச்சல்...

சிந்து நாடே சிதறுண்டு கண்ணீர் சிந்தப் போகிறதோ என்கிற கவலையுடன் மண் மாதா மருண்டு அதிர்ந்து கவனிக்கிறாள்...

இருபது வயதே பூர்த்தியான இந்த மாவீரக் காசிமின் வீரத்தை அந்த மண்மாதா தன்னுள் பாராட்டிக் கொள்ளத்தான் செய்கிறாள்.

முகமதியப் பேரரசைக் கட்டிக் காவல் புரிந்து வந்த அந்நாளைய – கி. பி. எட்டாம் நூற்றாண்டு தொடக்கக் காலத்திய - பேரரசன் காலிஃபா உமர், ஒவ்வொரு நாளும் சிந்து நதிப் போர் முழக்கச் செய்தியறியும் ஆசைத் துடிப்புடன் காத்திருக்கிறான்.

காசிமின் போர் முழக்க வெற்றிகளைக் குறித்து அவ்வப்போது செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

ஊழின் பெருவலியோ என்று மருண்டு மயங்கிய சிந்து நாட்டு மக்கள் தப்பினால் போதுமென்று சிதறியோடத் தொடங்குகிறார்கள்.

சிந்து நாட்டை ஆண்டு வந்த அரசன் தாகர் என்பான் தனது முழுப் பலத்தையும் பிரயோகிக்கிறான். எவ்வழியிலும் இந்த இஸ்லாமியப் படைகளை வீழ்த்தித் துரத்திட வேண்டும் என்பதில் அவனது அறிவு பல வழிகளிலும் கிளை விடுகின்றது. கேவலம் இருபது வயது வீர இளைஞன் புயலனைய வேகத்தோடு முன்னேறி வருகிறானே....

கோட்டை வாசல் இடிபட்டுத் தலைநகருள் படைகள் நுழைந்து விடுகின்றன...

மூன்றே நாள் யுத்தத்துக்குப் பிறகு தலைநகரும் வீழ்ந்து விட்டது.

அரசன் தாகர் கொல்லப்பட்டான் என்கிற செய்தி சிந்து நாட்டையும் தாண்டி மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் அலைகளாய் எதிரொலிக்கின்றது.



தாகரின் அரண்மனையே ஒருவிதப் புதுப் பொலிவுடன் தோற்றம் தருவதைக் கவனிக்கிறான் படைகளின் வீரத் தலைவன் இனாஜன் காசிம்.

வடக்கே மூல்தானிலிருந்து தெற்கே கடற்கரை வரை ஓரளவு விரிந்து, பலுசிஸ்தானத்தின் பெரும் பகுதியைத் தன்னகத்தே கொண்ட நாட்டின் வளம் அந்த அரண்மனையுள் தெரிகிறது.

ராய் வமிசத்தைச் சார்ந்த மன்னர்களால் ஆளப்பட்ட அந்தத் தேசம் பின்னாளில் சச்ச என்கிற அமைச்சரின் சூழ்ச்சியால் வீழ்ந்தது. அந்தச் சச்ச என்பானின் வழித்தோன்றல் தான் தாகர்.

ஓரிடத்துக்கு வந்ததும் காசிமின் கால்கள் ஸ்தம்பித்து நிற்கின்றன.

அழகிய இரு பெண்கள். இவர்களின் எழில்தான் எத்தனை ஏற்றமுடையது?

நாடு வீழ்ந்துபட்டதும் நயமாக ஒட்டிக் கொண்ட ஓர் அமைச்சன் விளக்குகிறான்: ''ஹுஜூர்! இவர்கள் அரசர் தாகரின் அருமந்தப் புதல்விகள். இவள் மூத்தவள், பெயர் சூர்யா. இவள் இளையவள். பெயர் சந்திரா.''

''ஓ...'' — காசிமின் உதடுகளிலிருந்து மேற்கொண்டு வார்த்தைகள் உதிரவில்லை. அவனது நினைவுகள் இப்போது தனது அரச அந்தப்புரத்தைப் பரிசீலிக்கின்றன. 'இந்த இரு பெரும் அழகிகள் காலிஃபாவின் ஹுஜுரவில் இடம் பெற்றால் அதன் அழகு இன்னும் எவ்வளவுக்குக் கூடுதலாகத் தெரியும்?''

சூர்யாவும் சந்திராவும் ஒருவரை யொருவர் கவனித்துக் கொள்ளுகின்றனர். அவர்களுடைய கண்களில் நான்கு நீர்முத்துக்கள் வெடிக்கின்றன.

பிராமணபாத் தலைநகரின் அன்றைய இரவு சோகமாய் மலருகிறது.

அரண்மனையுள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விளக்குகள் எரிகின்றனவே யொழிய ப்பூரணமாகப் பொலிந்து காணப் படவில்லை. அதுகுறித்து எந்தவித நினைவுகளுமின்றித் தனக்கென்று நேமித்துக் கொண்ட தனியறையில் பல்வேறுபட்ட போர்ச் சிந்தனையும், தனது காலிஃபாவுக்கு என்னவிதமாகவெல்லாம் பரிசுகளை அனுப்பி வைக்கலாம் என்கிற எண்ணமுமாக மஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தான் மாவீர இனாஜன் காசிம்! இந்த அழகுப் பெட்டகங்களான சூர்யாவையும் சந்திராவையும் தக்க பாதுகாவலுடன் தலைவன் காலிஃபாவுக்கு அனுப்பி வைக்க முடிவு செய்தான். இந்தப் போதையை விடச் சிறந்த பரிசு ஏது? காலிஃபாவின் பலவீனத்தை அவன் அறிவானே.

அப்போது....

காற்சதங்கை ஒலிக்கும் ஓசை இனிமையாகக் கேட்கிறது.

சூர்யாவும் சந்திராவும் தன் விடுதிக்குள் எதிர்பாராது நுழைவது கண்டு ஒரு கணம் வியப்புமிக்க விழிகளால் அளந்து பரிசீலிக்கிறான் காசிம்.

திரைச் சீலைகளை மெல்ல வருடிக்கொண்டு இளங்காற்று போதையாகத் தவழ்ந்து வருகிறது. வானில் பிறைநிலவுப் புன்னகை....

''வீரமாத் தலைவருக்கு எங்கள் நமஸ்காரம்!'' — சூர்யாதான் தனது நாவைத் தைரியமாக இசைத்தாள்.

இருவரது வணக்கங்களை இன்முகத்துடன் ஏற்ற காசிம், மீண்டும் தனது தலைவன் காலிஃபாவின் ஹுஜுரவை எண்ணிப் பார்க்கிறான்....

''உட்காருங்கள்!''

சகோதரிகள் இருவரும் எதிரே கிடந்த ஆசனங்களில் அமர்ந்தனர். ராஜ தந்திரம் நிறைந்த தங்கள் சூழ்ச்சியில் எப்படியும் காசிமை வீழ்த்தி விடவே கற்புக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். இருவரில் எவளாவது ஒருத்தி தன்னைப் பலியிட்டுக் காசிமை வயப்படுத்திக் கொண்டால் பிறகு இந்த அராபிய சேனைகளை எளிதில் விரட்டி விடலாம் என்கிற ஓர் அற்புதமான திட்டம் தான் அது. தங்கள் அழகாலும் தங்கள் சாகஸங்களாலும் காசிமை அடிமைகொள்ள முயல்கின்றனர். ஆனால் அந்த மாவீரனோ

விழிகள் வீழ்த்திய வீரம்



கோவி.மணிசேகரன்

இவர்களின் மனநிலையைப் புரிந்து கொண்டவனாகக் கடகடவென்று சிரிக்கிறான். மீண்டும் மீண்டும் அந்த அறையே அதிருகிற மாதிரி சிரிக்கிறான்.....

''சகோதரிகளே! எனக்கென்று ஒரு லட்சியம் எப்போதுமே கிடையாது. எனது தலைவன் காலிஃபாவின் லட்சியமே எனது லட்சியம். நான் வீரத்தை மணந்து கொண்டு புறப்பட்டவன். ஆகவே உங்கள் இருவரையும் எனது தலைவன் காலிஃபாவுக்கு விருந்தாக அனுப்பி வைக்கப் போகிறேன்!''

பெரிதாகவே அயர்ந்து விட்டார்கள் சூர்யாவும் சந்திராவும். எண்ணி வந்தது ஒன்று; எதிர்பாராதது மற்றொன்றாயிற்று! என்ன செய்வது? ஆனாலும் தந்தையை மாய்த்தவனைப் பழிவாங்கியே தீருவது என்று உறுதி செய்து கொண்டார்கள் இருவரும்.

காலிஃபாவின் ஜனானாவில் அன்று கோலாகலமான ஏற்பாடுகள்....

சிந்து நாடு வீழ்ந்து பட்டது.

விந்தியமலையும் அதற்கு அப்பாலும் காலிஃபாவின் கண்முன்னே சித்திரங்களாய் விரிகின்றன.

தன் பொருட்டு அனுப்பி வைத்த இரண்டு அழகுப் பதுமைகளைக் கண் கொட்டாது கவனிக்கிறான் காலிஃபா.

ஆ! எத்தனை அழகுவாய்ந்த பெண்கள் இவர்கள்....

பொழுதைக்கூடப் பாராது போதை கொண்ட காலிஃபா அவர்களை நெருங்குகிறான்....

வயதான அந்த முரட்டுத் தலைவனைப் பார்க்குந்தோறும் குமட்டல் வருகிறது சூர்யாவுக்கும் சந்திராவுக்கும்.

சூர்யாவுக்குத் தனது வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்கிற எரிச்சல் சிந்தனையாய் மலருகிறது.

பலிபீடத்துக்கு வந்தாய் விட்டது. இனி தப்பவும் முடியாது. அதற்குள் அந்தக் காசிமை....

இருவருமே அராபிய முறைப்படி வணக்கம் தெரிவித்து முறுவலிக்கிறார்கள்....

''சபாஷ் பெண்களே! சபாஷ்! உங்கள் சிரிப்பிலிருந்து சிந்து நாடே புத்திசாலித்தனமான நாடாகத்தான் இருக்க முடியும் என்பதை உணர முடிகிறது!''

காலிஃபா மகிழ்ச்சி மிகுதியால் கடகடவென்று பேய் போலச் சிரிக்கிறான். அவனது கண்கள் நெருப்புத் துண்டங்களைப் போல் கனன்று காணப்படுகின்றன.

அவனது அந்த வெறியைப் பயன்படுத்திக் கொண்ட சூர்யா, மிகவும் துணிச்சலுடன் ஓரடி முன் வந்து, ''நாங்கள் எப்போதுமே புத்திசாலித்தனமாகத்தான் நடந்து கொள்வோம். உங்கள் சேனைத்தலைவர் காசிம்தான் படுமுட்டாள்தனமாக நடந்து கொண்டார். சமாதானத்துக்குத் தூது அனுப்பியும் எனது தந்தை கொல்லப்பட்டார்; எங்கள் இருவரையும் உங்களுக்கு அன்பளிப்பாகத் தரத் தந்தை சம்மதித்தார். ஆனால் காசிம் என்ன செய்தார்? எங்களை அனுபவிக்க ஆசைப்பட்டு எங்கள் தந்தையைப் படுகொலை செய்தார்'' என்று கூறிக் கொண்டு வருகிற போதே இடைமறித்த காலிஃபா, ''அனுபவித்து விட்டானா?'' என்று கத்துகிறான்.

சந்திரா இடைபுகுந்து கலகலவென்று சிரிக்கிறாள்....

''ஆசை தீர அனுபவித்து விட்டு, 'வெறும் சக்கையை என் காலிஃபா அனுபவிக்கட்டும்' என்று ஆணவத்தோடு கூறினார். நாங்கள் இப்போது வெறும் சக்கைகள்.''

காலிஃபாவின் பற்கள் நறநறக்கின்றன. இயற்கையாகவே முன்கோபமும், சிந்திக்கும் திறமையுமில்லாத காலிஃபாவின் உதடுகள் நெளிகின்றன. அதுவும் அழகு போதைகள் போடும் தூபங்களுக்கே ஒரு தனி மரியாதையாயிற்றே! திரும்பிக் கத்துகிறான் காலிஃபா!

''அஹமத்...!''

பேரிரைச்சலின் அழைப்பைக் கேட்டு, பிரதானியான அஹமது ஓடோடி வருகிறான்.

''ஹுஜூர்...!''

''காசிமின் திமிரைப் பார்த்தாயா?'' என்று தொடங்கியவன், பெண்கள் இருவர் கூறிய பொய்யுரைகளை மெய்யுரையாக நம்பிப் போர்த்துகிறான். ஏற்கனவே காசிமிடம் பொறாமை கொண்ட அஹமதுவும் இதையே சாக்காகக் கொண்டு, ''தண்டிக்கப்பட வேண்டியவன்தான்!'' என்று கூறிய மறு கணம்..... ''அஹமத்! உடனடியாகக் காசிமைச் சிறைப்படுத்தி, அவன் எதிரிலேயே ஒரு மாட்டை வெட்டித் தோலை உரித்து, அந்தத் தோலால் அவனைச் சுற்றிப் பிணைத்து அதன் ஈரம் உலருமுன் என்முன்னே கொண்டு வந்து போட ஆணையிடுங்கள்!''

ஆ! எத்தனை பயங்கரமான தண்டனை.

சகோதரிகள் ஒரு கணம் அரண்டு போயினர்..

காசிம் வந்ததும் அவன் முகத்தில் காறி உமிழ்ந்த பின்னர் தங்களைத் தற்கொலைக்குட்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தனர்.

ஆனால் நடந்தது?

ஈரம் உலரா மாட்டுத் தோலால் சுற்றப்பட்ட காசிம் அதன் முடை நாற்றம் பொறுக்க மாட்டாமலும், ஈரம் உலர உலர ஏற்பட்ட இறுக்கம் சகிக்க மாட்டாமலும் வழியிலேயே இறந்து பட்டான்.

ஓ... பெறுவதற்கரிய அற்புத வீரத்தை, அன்பினை நன்றிக்கடனை, கேவலம் காமத்தால் ஏற்பட்ட அறியாமை கொன்றுவிட்டது.

ஒருவர்: என்ன ஸார் உங்க பையன் என் பொண்ணு பின்னாடியே சுத்திக்கிட்டு இருக்கான். கொஞ்சம் சொல்லி வையுங்க.

மற்றவர்: பக்கத்தில கூடவே வான்னு ரொம்பச் சொல்லிப் பார்த்துட்டான். கேட்க மாட்டேங்குறு. அவன் என்ன செய்வான்?

-மூர்த்தி



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

— ராஜ்மோகன் காந்தி —



வி. ஆர். பட்டேலுக்கு எழுதுகையில், ''எங்கு பார்த்தாலும் அரசாங்கம் லகானை இழுத்துப் பிடித்திருப்பதாகவே தோன்றுகிறது. அல்லது லகானைத் தளர விட்டு அதிகாரிகளை மனம் போன போக்கில் நடக்க அனுமதித்துள்ளதாகவும் கருதலாம். இதில் சந்தேகமே யில்லை'' என்று குறிப்பிட்டார்.

காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் பலர் மகாத்மா உடனே திரும்பி வந்து விட வேண்டும் என்று விரும்பினர். ஆனால் வி. ஆரைப் பட்டேல் கலந்தாலோசித்த போது, வி. ஆர். இதற்கு எதிரான அறிவுரையையே வழங்கினார். ''உள்நாட்டுக் காரணங்களுக்காக அவரைத் திரும்ப அழைத்துவிடக் கூடாது'' என்ற அவர் ஜவஹர்லாலுக்கும் எழுதினார்.

''காந்தி இங்கிலாந்தில் தமது பணி முடிவடைந்து விட்டதாகக் கருதும் வரை அவர் அங்கேயே இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். அதே போல் அவரது ஐரோப்பியச் சுற்றுப் பயணம் மிக்க குறுகிய கால அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகிறேன். அவர் உடனடியாகத் திரும்பி வருவதால் வங்கத்தின் நிலைமையில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படும் என்று எனக்குத் தோன்றவில்லை.''

குத்தகை கொடா இயக்கத்துக்கு வி. ஆர். ஆதரவு தரவில்லை. வங்கத்தில் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதிகளின் முறைகளை எதிர்த்தார். இவ்விரு கண்ணோட்டங்களுடனும் மகாத்மா ஒத்துப் போனார்.

அவர்களுடைய கண்ணோட்டங்களை எல்லாக் காங்கிரஸ்காரர்களும் ஒத்துக்கொள்ளவில்லை என்பது உண்மையே. ஆட்சியாளரின் கோபத்தைப் பலர் கிளறி விட்டனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்களின் இந்தச் சமயோசிதமற்ற காரியங்களுக்கோ அல்லது வங்கத்தில் நடந்த வன்முறைகளுக்கோ சிறிதும் பொருத்தமற்ற அளவில் தேசம் வெகு சீக்கிரம் அடக்குமுறையை அனுபவிக்க விருந்தது.

காந்தி நாடு திரும்பக் கப்பலில் பயணப்பட்டுக் கொண்டிருக்கையில் முதல் அடி விழுந்தது. பலாத்கார எண்ணங்களைக் கொண்டிருந்தார் என்பதாகக் குற்றம் சாட்டப்பெற்று எல்லைப்புறத்தில் கஃபார்கான் கைது செய்யப்பட்டார். பிறகு உத்தரப்பிரதேசத்தில் ஜவாஹர்லால் காவலில் வைக்கப்பட்டார். இரு மாகாணங்களிலும் மக்களின் சுதந்திரங்களை அடியோடு பறிக்கும் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டன.

மகாத்மாவைத் தாங்கி வந்து கொண்டிருந்த பில்ஸ்னா என்ற கப்பலுக்கும் தலைவர்கள் கைதான செய்தி எட்டியது. ஆனால் அதை மகாத்மாவிடம் தெரிவிக்காமல் அமுக்கி விட்டனர். பிரிட்டிஷ் ஆட்சியின் போக்கு மாறிவிட்டது.

டிசம்பர் 28ந் தேதி பில்ஸ்னா பம்பாயில் கரை தட்டி நின்றது. கஸ்தூரிபா, வல்லபபாய், வி. ஆர். ஆகியோர் கப்பல் மீதேறிச் சென்று காந்தியிடம் செய்தியைக் கூறினர். அளவிடற்கரிய பெரும் ஜனத்திரள்கள் நாடு திரும்பிய அவரை வரவேற்றன. ஆனால் அவர் சுதந்திரமாக இயங்கப் போகிற நாட்கள் விரல் விட்டு எண்ணி விடக் கூடியனவாகவே இருந்தன.

அவசரச் சட்டங்களை ''வைஸ்ராய் அளித்த கிறிஸ்துமஸ் பரிசுகள்'' என வர்ணித்தார் காந்தி. தாம் இன்னமும் பேச்சு வார்த்தைகள் நடத்த ஆர்வமுள்ளவராய் இருப்பதாகவும் சொன்னார். வில்லிங்டனிடம் தமக்குப் பேட்டியளிக்குமாறு வேண்டினார். அதே நேரத்தில், ''இந்தியா அடக்குமுறைக்குச் சாதுவாக அடிபணியாது'' என்றும் சேர்த்துக்கொண்டார். காந்தியைத் தாம் வரவேற்கத் தயாராக இருப்பதாகவும் ஆனால் அவசரச் சட்டங்கள் பற்றி அவருடன் விவாதிக்கத் தாம் விரும்பவில்லை என்றும் வைஸ்ராய் பதில் சொல்லி அனுப்பினார்.

இப்போது ஆட்சி செயலில் இறங்கியது. பலமாகவும் துரிதமாகவும் அடிகள் விழுந்தன. ஜனவரி நாலாம் தேதி விடிவதற்கு முன்பாகவே மகாத்மா கைது செய்யப்பட்டார். இதற்குச் சில மணி நேரங்களுக்குப் பிறகு பம்பாயில் கூடியிருந்த காரியக் கமிட்டியினரும், பட்டேலும் கைதானார்கள். வி. ஆர். காரியக் கமிட்டி அங்கத்தினர் அல்ல. ஆயினும் அவரும் அதிக காலம் காத்திருக்க நேரவில்லை.

தொடர்ச்சியாக அறிவித்த பல அவசரச் சட்டங்கள் மூலம் அரசு எல்லாவித மான எதிர்ப்பையும் அடக்கிவிடப் பார்த்தது. காங்கிரஸ் அமைப்புக்களுக்கெல்லாம் தடை விதிக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள் அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகைகளுக்குத் தணிக்கை முறை அமுலாகியது.

இந்தியா திருப்பித் தாக்கியது. ஆயிரக் கணக்கான மக்கள் அவசரச் சட்டங்களை

எதிர்த்தார்கள். 1930ல் எந்த அளவுக்கு அரசியல் கைதிகள் இருந்தார்களோ, அந்த எண்ணிக்கை 1932 பிப்ரவரி இறுதியில் கடக்கப்பட்டு மேலும் பெருகி வந்தது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் உருவாக்கிய சிநேக பாவத்தின் இடத்தை இன்று சிறைவாசம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

39. மறுபடியும் சிறைவாசம்

பம்பாய்க்குக் காந்தி திரும்பி வந்த தினத்திலிருந்து அவர் கைதான தினம்வரையில் இருந்த ஆறுநாள் இடைவெளி மகாத்மா வி. ஆர். உட்பட அனைவருக்கும் கலவரத்தை ஏற்படுத்திய நிர்ணயிப்பட்டதாகவும், வேலைச் சுமை நிறைந்ததாகவும் ஓய்வே இல்லாததாகவும் விளங்கியது. ஆனாலும் தேவதாஸ், லக்ஷ்மி ஆகியோரது எதிர்காலம் பற்றி ஒரு முடிவுக்கு வர இரு நண்பர்களும் நேரம் ஒதுக்கிக் கொண்டார்கள்.

அந்த இளம் ஜோடியினர் நான்கு ஆண்டுகளுக்கு மேல் காத்திருந்து விட்டனர். இந்தக் கால கட்டத்தில் அவர்கள் சந்திக்கக் கூடாது. கடிதங்கள் எழுதிக் கொள்ளக் கூடாது என்ற நிபந்தனைகளை விசுவாசத்தோடு கடைப்பிடித்திருந்தார்கள். காந்தியும் வி. ஆரும் விவாகத்தை அனுமதித்து ஆசி நல்க ஒப்புக் கொண்டார்கள்.

ஆனால் திருமணதினத்துக்கு இன்னும் வெகு காலம் இருந்தது. தகப்பனார்கள் சிறையிலிருக்கும்போது தங்கள் திருமணத்தை நடத்திக்கொள்ள லக்ஷ்மியும் தேவதாஸும் விரும்பவில்லை. மேலும் தேவதாஸே சீக்கிரம் கைதாகவிருந்தார்.

ஜனவரி 9ந் தேதி தாம் கைது செய்யப்படுவதற்காகச் சட்டத்தை மீறினார் வி.ஆர். சத்தியமூர்த்தி உடன்வர, சென்னையின் கூட்டம் மிக்க தெருக்களில் மெதுவாகச் செல்லும் ஒரு டாக்ஸியில் அமர்ந்திருந்தபடி அவர் "சத்தியாக்ரஹப் போர்" என்று தலைப்பிட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். அந்தத் துண்டுப் பிரசுரம் அயல் நாட்டுத் துணியைப் பகிஷ்கரிக்கும்படி கோரியது. எனவே வி. ஆர். 1932ம் ஆண்டின் ஐந்தாவது அவசரச் சட்டத்தை மீறுபவரானார். இச்சட்டம் மறியலையும் வேண்டுமென்றே தொந்தரவு கொடுப்பதையும் தடை செய்தது.

போலீஸ் அதிகாரிகள் எதிர்ப்பட்டு அதட்டியபோது அவர் கோடவுன் தெருவில் ஒரு கூட்டத்தினரிடையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தார். ஓர் இன்ஸ்பெக்டர், "என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். வி.ஆர். இதற்குப் பதில் கூறுமுகமாக அவரிடமும் ஒரு துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தார். வி. ஆரும் சத்தியமூர்த்தியும் மேலும் பல துண்டுப் பிரசுரங்களை ஒரு போலீஸ்காரரிடம் தந்தனர்.

இதற்கிடையில் போலீஸ் பட்டாளம் நிரம்பிய நாலு மோட்டார் 'வான்'கள் வந்து விட்டன. அவற்றுள் ஒன்று டாக்ஸிக்குக் குறுக்கே நின்று அதனை நகரவிடாது செய்தது. வி. ஆரிடம் அவரும் சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவ்விருவரும் அப்புறப்படுத்தப்பட்ட பிறகு கூடியிருந்த கூட்டத்தை கலைக்கப் போலீஸார் அவர்கள் மீது தண்ணீரை ரப்பர்க் குழாய் மூலம் பீச்சி அடித்தார்கள். இதற்கென்றே தண்ணீர் டாங்க் சுமக்கும் மோட்டார் வாகனம் உடன் வந்திருந்தது.

இரண்டு நாட்கள் கழித்து வி.ஆரும் சத்தியமூர்த்தியும் விசாரிக்கப்பட்டார்கள். கோர்ட்டில் தாம் சமர்ப்பித்த அறிக்கையில் வி. ஆர். சொன்னார்:

"நான் யாரையுமே மனமறிந்து தொந்தரவு செய்யவில்லை. எங்கும் சோம்பித் திரியவில்லை. 'நம்மை நாமே ஆண்டுகொள்ளும் தேசிய உரிமையை நமக்கு மறுக்கின்ற ஒரு வல்லரசு நம்மைப் பொருளாதார ரீதியில் சுரண்டுவதற்கு உதவாதீர்கள்' என்று பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிற துண்டுப் பிரசுரங்களை நான் விநியோகித்தேன். இந்த என்னுடைய செயலை ஓர் அவசரச் சட்டம் குற்றமாக்குகிறது என்றால் அந்த அவசரச் சட்டம் முழுக்க முழுக்கத் தவறானது என்று நான் சொல்வேன். சாத்விகச் சட்டமறுப்பாளராக நான் நடந்துகொண்டேன்."

அவருக்கு ஆறு மாதச் சிறை தண்டனை கிடைத்தது. அவரையும் சத்தியமூர்த்தியையும் பின்பற்றி ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் சிறை புகுந்தனர்.

"சிறைச்சாலைகளில் அளவுக்கு அதிகமான கைதிகள் நெரிசலைத் தவிர்ப்பது மேன்மேலும் கஷ்டமாகி வருகிறது" என்று அரசாங்கத்தின் ஓர் இந்திய அதிகாரி, சென்னை பிரதம காரியதரிசிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் தெரிவித்தார். தமது விசுவாசத்தையும் சாமர்த்தியத்தையும் காண்பித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைத் தெளிவாக்கும் விதமாக அவர் மேலும் எழுதினார்: "பிரம்பு முறையில் ஓரளவுக்குக் கசையடி கொடுப்பது தவறாகாது என்று நினைக்கிறேன்." இந்த யோசனைக்கு அனுமதி கிடைக்கவில்லை.

(தொடரும்)

தமிழாக்கம் கெ. ராஜேந்திரன்



கணவன்மார்களுக்கு ஒரு ஹாட் நியூஸ்!

உங்களது மனைவியின் மூளையின் எடை, உங்களுடையதை விட 250 கிராம் குறைவு. இத்தகவலைக் கூறியவர் பிரபல நியூரோ சர்ஜன் டாக்டர் பி. ராமமூர்த்தி. சென்னை ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் வேப்பேரியில் நடந்த கூட்டத்தில் மேற்கண்ட செய்தியைக் கூறிய அவர், "பெண்கள் சில விஷயங்களில் அவசர முடிவு எடுப்பது, சில துறைகளில் ஆண்களை விடப் பின்தங்கி யிருப்பது போன்றவை இந்த எடைக் குறைவான மூளை பெற்றிருப்பதனால்தான்" என்றார்.

- என். எஸ். மூர்த்தி (நி மெயில்)

ஹாக்கியில் ஒரு காலத்தில் முடிசூடா மன்னர்களாக விளங்கினோம். சர்வ தேசப் போட்டிகளில் கலந்து கொண்டு ஆடியவர்களுள் இந்தியன் ஏர்லைன்ஸைச் சேர்ந்த கோவிந்தாவும் ஒருவர். இந்தியன் ஏர்லைன்ஸ் குழு சமீபத்தில் எழும்பூர் ஸ்டேடியத்தில் ஆடிய பந்தயக் காட்சி இது. அவர்களுக்கு எதிராக ஆடிய அணி, சதர்ன் ரயில்வே குழுவாகும். இரு குழுக்களும் ஒன்றையொன்று வெல்ல எடுத்துக் கொண்ட முயற்சியில் எழுந்த ஆக்ஷன் படம் இது!

படத்துக்கு உத்ரா தரும் விளக்கம்:

ஹாக்கி கால்பந்து போன்ற ஆட்டங்களைப் படம் எடுக்கும் போது Field Movement காண்பிக்கணும். இரண்டு மூன்று பேர் ஓடுவதைக் காண்பித்தால்தான் ஆக்ஷன் நன்றாக இருக்கும். இந்த ஆக்ஷன் படம் டெலி லென்ஸ் பயன்படுத்தி எடுத்தது. 1/1000-8

படத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்பதை டெலி லென்ஸ் உபயோகப்படுத்தியதால் தெரிந்து கொள்ள முடிகிறது. இத்தொடரில் முதல் தடவையாக நார்மல்லென்ஸ் இல்லாமல் டெலி லென்ஸ் பயன்படுத்தியிருக்கிறேன்.

தனியார் முக பாவங்களுக்குக் கவனம் செலுத்தாமல் ஒரு குழுவின் ஆக்ஷனுக்கே பிரதானம் கொடுத்து எடுத்தேன். பிலிம் N.P.7

படம்: உத்ரா


விளக்கம்: குண்டுமணி



Sports picture page

வெள்ளிரதம்

படவிமரிசனம்



பக்தி—கற்பழிப்பு, அற்புதம் இப்படி எல்லாவற்றையும் கலக்கி அவியலாக்கித் தந்திருக்கிறார்கள் அஷ்டலட்சுமி பிக்சர்ஸார். அப்பா குடிகாரர், பிள்ளை பொம்பிளை பொறுக்கி மைனர் — மைனரின் ஆசைகளைத் திருப்திப்படுத்த ஒரு பெண் சப்ளையர். வாழ்ந்து தாழ்ந்த தோர் குடும்பத்தில் ஓர் அழகி. பக்தி உள்ளம் கொண்டவள். கோயில் அர்ச்சகர். அவருக்கு ஒரு குருட்டுப் பெண். இந்தக் குருட்டுப் பெண் மைனரின் இச்சைக்குப் பலியாகிறாள். கற்பிழந்து உயிர் துறக்கும்போது சாபம் கொடுக்கிறாள். நீ தொட்டுத் தாலி கட்டிய வளைத்தொடும் போது உன் கை விளங்காமல் போகவேண்டுமென்று. லக்ஷ்மி (கே. ஆர். விஜயா)வை மைனர் ரவி (விஜயகுமார்) மணந்த முதலிரவன்று சாபம் பலிக்கிறது. பத்தினி, பக்தை லக்ஷ்மி கண வனின் உடல் நோய் தீரப் படாத பாடெல்லாம் படுகிறாள். அலகு குத்திக்கொண்டு வெள்ளி ரதம் இழுக்கிறாள். படுமோசமாக ஓர் ஆண் பாத்திரத்தை உருவாக்கி அதை மனைவியின் பக்தியினால் இப்படிப் புனிதப்படுத்துவானேன்? விஜயா ரசிகர்கள் விரும்ப மாட்டார்கள்.

வயசு வந்த பெண்ணுக்கு மணம் முடிக்கத் தவிக்கும் ஒரு தாயாரிடம் தரகன் மைனருடன் வருகிறான். காசு பணம் கேட்காத வரன் என்று அறிமுகப் படுத்துகிறான். தாய் மகிழ்ந்து போகிறாளாம். புதுமுக வகுப்புப் படித்த பெண்ணுடன் மனம் விட்டுத்தனியே மைனர் பேச அனுமதி கேட்கிறான் தரகன். தாயாரும் சம்மதிக்கிறாள்—பையன் யார், பெற்றோர் யார் என்று ஏதும் விசாரிக்காமலே இப்படித் தன் வயதுப் பெண்ணுடன் தனித்துப் பேச எந்தத் தாய் எந்த ஊரில் அனுமதிப்பாள்? இதோடு முடியவில்லை இந்தக் கற்பனை. முன் பின் பார்த்திராத ஒருவனுடன் தனித்து விடப்பட்ட அந்தப் பெண் எவ்வித எதிர்ப்பும் காட்டாமல் அவனது இச்சைக்கு இணங்குகிறாளாம். திறந்த வீட்டில் எதுவோ நுழையலாம். ஆனால் இந்த மாதிரிக் காரியம் செய்ய எந்தத் தாய்க் குலமும் இவ்வளவு கீழ்த்தரமாக ஏமாந்துபோகாது. தரகனும் தாயும் வெளியில் இருக்க, உள்ளே பக்குவமாக மைனர் பருவப் பெண்ணின் கற்பைச் சூறை யாடிவிட்டு வெளியில் வந்து சர்வசாதாரணமாக விடை பெற்றுப் போகிறான். இப்படிப்பட்ட நிகழ்ச்சி சினிமா உலகக் கதாசிரியர் களின் கற்பனையில்தான் நடக்கும். நடந்து கொண்டிருக்கிறது.

விஜயாவின் தாத்தாவாக வரும் எஸ்.வி. சுப்பையாவின் நடிப்பும் கணீர் பேச்சும் இதமாக இருக்கின்றன. விஜயகுமார் இம் மாதிரிப் பாத்திரங்களை ஏற்க மறுக்காவிட்டால் நட்சத்திரப் பதவியில் நிலைக்கும் எண்ணத்தை அவர் அறவே விட்டு விடலாம்.

நாகரத்தினத்தைக் கக்கிவிட்டுப் பாம்பு ஓடுகிறது. பழிவாங்க நடிக்கிறது. ஆனால் படம் ஓடுமா-பணம் பண்ணுமா? - கௌசிகன்

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேயக் காசு